இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 130 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 23 புதன்கிழமை 05.04.2017

## பேஸ்புக் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள்

*பிரிட்டன் பல்கலை. பேராசிரியர் கருத்து*

கொழும்பு, ஏப். 5
முகப் புத்தகத்தில் அடிமையாகி இருப்பதனால், இலங்கை இளைஞர்களின் பெறுமதிமிக்க இளமைக் காலம் வீணாகக் கரைந்து போகிறது என பிரிட்டன் சரே பல் >> 29

## ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காணவே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி

*இப்படி விளக்கமளிக்கிறது ஜாதிக ஹெல உறுமய*

கொழும்பு, ஏப் .5
புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சி என்பது ஒற்றையாட்சியின் கீழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு செயற்பாடு என்று தெரிவித்திருக்கிறது ஜாதிக ஹெல உறுமய. "புதிய அரசமைப்பு தொடர்பான பொது வாக்கெடுப்பில் வடக்கு ஒரு நிலைப் >> 29

## 2016 சாதாரண தரப் பெறுபேற்றில் வடக்கு தொடர்ந்தும் 9 ஆவது இடம்

*39 வீதத்தினர் சித்தி பெறத் தவறினர்*

யாழ்ப்பாணம், ஏப். 5
கடந்த வாரம் வெளியான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 39 சதவீதத்தினர் சித்தியடையத் தவறியுள்ளனர். அத்துடன் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் தொடர்ந்தும் 9 ஆவது மாகாணமாகவே தரப்படுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்றகல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட் >> 29

## விசர்நாயின் சிறுகீறல் முல்லை. விவசாயியின் உயிரைப் பறித்தது

யாழ்ப்பாணம், ஏப். 5
விலங்கு விசர் நோய்த் தொற்றுக்குள்ளான நாயினுடைய பல்லின் சிறுகீறல் விவசாயியின் உயிரைப் பறித்த சம்பவம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. தண்ணீரைக் கண்டதும் அவர் பயப்பட்டார். அதனால் அவர் வைத் >> 28

## புதிய அரசமைப்புக்கான முயற்சியில்

# சு.கவால் மீண்டும் குழப்பம்

*அரசமைப்புக்கான திருத்தத்தை மட்டுமே ஆதரிப்போம் என்பதால் இழுபறி*

கொழும்பு, ஏப்ரல் 5
புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளது. புதிய அரசமைப்பு ஒன்றுக்கு இணங்க முடியாது என்றும் பொது வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்லாத வகையில் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மட்டுமே இணங்கமுடியும்என்றும், புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் நேற்றைய அமர்வில் சுதந்திரக் கட்சி தெரிவித்து விட்டது. வழிநடத்தல் குழுவின் >> 04

## இன்று முதல் வெப்பநிலை அதிகரிக்கும்

*வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 5
இலங்கைக்கு மேலே சூரியன் இன்று முதல் நேர் உச்சம் கொடுப்பதால் நாட்டில் வெப்பநிலையின் தாக்கம் அதிகமாக >> 29

## கேப்பாபிலவில் 394 ஏக்கரை கையளிக்க அரசு உத்தேசம்

கொழும்பு, ஏப். 5
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவுப் பகுதியில் 394 ஏக்கர் நிலப் பரப்பை விடுவிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற அமைச்சரான டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று >> 26

## கச்சதீவை முற்றுகையிட்டு தமிழக மீனவர் போராட்டம்

*25 ஆம் திகதி நடத்தத் தீர்மானம்*

கொழும்பு, ஏப். 5
இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளை விடுவிக்க வலியுறுத்தி எதிர்வரும் 25 >> 28

## ஐ.நா. தீர்மானத்தை அச்சொட்டாக அரசு ஒப்பேற்ற இணங்கின் கூட்டமைப்பு ஆதரவு

*ஜேர்மன் நாடாளுமன்றத் தலைவரிடம் நேற்று எடுத்துரைத்தார் இரா. சம்பந்தன்*

யாழ்ப்பாணம், ஏப். 5
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மா >> 04

## அரசுடன் கூட்டுச் சேர்வதே இப்போது பொருத்தமானது

*கூறுகிறார் வடக்கு முதலமைச்சர்*

யாழ்ப்பாணம், ஏப். 5
எமக்கு அரசியல் ரீதியாகத் தவறு இழைக்கப்பட்டுள்ளது உண்மையே. அதற்காக நாம் எம் மனதில் வெறுப்பையும் துவேசத்தையும் வளரவிடுவது >> 04

## தடுப்புக் காவல் கொலை

## எந்தச் சந்தர்ப்பத்திலும் சுமணனை சித்திரவதைக்குட்படுத்தவில்லை

*பொலிஸ் சந்தேகநபர்கள் சாட்சியம்*

யாழ்ப்பாணம், ஏப். 5
"சந்தேகநபர் சுமணனை எந்தச் சந்தர்ப்பத்திலும் சித்திரவதை செய்யவில்லை. அவரை நாம் கொலை செய்யவில்லை. அவரே எமது பாதுகாப்பிலிருந்து தப்பிச் >> 28

## மதவாச்சி விபத்தில் வயோதிபர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 5
மதவாச்சியில் இடம்பெற்ற சாலை விபத்தில் வேலணையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்த 2 பேர் படுகாயம >> 29

## 353 நிரந்தர விரிவுரையாளர்கள் வெற்றிடம் யாழ்.பல்கலையில்

*சபையில் கூறினார் அமைச்சர் கிரியெல்ல*

கொழும்பு, ஏப். 5
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 353 நிரந்தர விரிவுரையாளர்களுக்கான வெற்றிடம் இன்னமும் நிரப்பப் >> 28

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் சுமந்திரன் சொன்னது பொய்

*தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றில் கொதிப்பு*

கொழும்பு, ஏப். 5
அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசியல் நிர்ணய சபையின் வழிநடத்தும் குழு இணக்கப் >> 04

## வடக்கு, கிழக்கு மக்களின் காணிகளை அரச படையினர் விடுவிக்கவேண்டும்

*வலியுறுத்தி நல்லூரில் பிரகடனம் வெளியீடு*

யாழ்ப்பாணம், ஏப். 5
"வடக்கு, கிழக்கு மக்களின் காணிகளைப் பாதுகாப்புப் படையினர் மீள ஒப்படைக்க வேண் >> 28



## யாழ். பல்கலையின் துணைவேந்தராக பேராசிரியர் சிறிசற்குணராசா நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 9ஆவது துணைவேந்தராக பேராசிரியர் சிறிசற்குணராசா நியமிக்கப்பட்டுள்ளார். >> 04

## இரணைமடு தனியார் விடுதியை நேற்று விடுவித்தது இராணுவம்

கிளிநொச்சி, ஏப். 5
கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுச் சந்தியில் இராணுவத்தின் பிடியில் இருந்த ஒரு ஏக்கர் >> 29



# வான்வழி விசவாயு தாக்குதலில் 58 பேர் சாவு

*சிரியாவில் கொடூரம்*

பெய்ரூட், ஏப். 5
சிரியாவில் அரச படைகள் அல்லது அரச ஆதரவு பெற்ற நாடுகள் நடத்திய வான் வழி விசவாயுத் தாக்குதலில் 11 குழந்தைகள் உள்ளடங்கலாக 58 பேர் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரிய அரசு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு என்று இருமுனைப் போரில் சிக்கித் தவிக்கிறது. ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் அமெரிக்காவும், கிளர்ச்சிக் குழுவுக்கு எதிரான போரில் ரஷ்யாவும் பக்கபலமாக உள்ளன. இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சிக் குழுவை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்த விச வாயுத் தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்தே 58 பொதுமக்கள் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரியாவில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியது. கடந்த ஆறு வருடங்களில் நடத்தப்பட்ட கொடுமையான தாக்குதல் இது என்று எதிர்க்கட்சிகள் கொதித்துள்ளன.

முன்னதாக சிரியாவில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்து 28 பேர் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# காணிகள் விடுவிக்க அரசுக்கு அழுத்தம்

*கேப்பாபிலவு மக்களிடம் உறுதியளித்தார் பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர்*

முல்லைத்தீவு, ஏப். 5
உங்களின் போராட்டம் நியாயமானது. வாழ்விடங்கள் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்.

இவ்வாறு பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் சயில் செட்டி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவில் உள்ள 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி 35ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. ஒரு தொகுதி காணிகளை விடுவிப்பதாக அரசு அறிவிப்புச் செய்திருந்தாலும், காணிக்குள் காலடி எடுத்து வைக்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தமது போராட்டத்தை அந்த மக்கள் தொடர்கின்றனர்.

இலங்கைக்கு வந்துள்ள பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் தலைமையிலான குழுவினர், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினர். மக்கள் தமது பக்க நியாயங்களை, நிலைப்பாடுகளை எடுத்துக் கூறினர்.

"நீங்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நியாயமானது. உங்கள் வாழ்விடங்கள் உங்களுக்கு வழங்கப்படவேண்டும். இது தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம். பன்னாட்டுச் சமூகத்துக்கும் விடயங்களை எடுத்துச் சொல்கின்றோம்" என்று மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் மக்களிடம் தெரிவித்தார். (கு-5-7)

# பொதுநலனிலும் மருத்துவர்களுக்கு அக்கறை தேவை

## அவர்களின் பணிப்புறக்கணிப்பு குறித்து மக்கள் ஆதங்கம

டெங்கு, பன்றிக்காய்ச்சல் மற்றும் இனம்புரியாத வைரஸ் நோய்த் தொற்றுக்களால் மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று பொதுமக்கள் தரப்பிலிருந்து கருத்துக்கள் கூறப்படுகின்றன.

சைட்டம் தனியார் கல்லூரிக்கு எதிராக மருத்துவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தவுள்ளனர். இந்தப் போராட்டம் தொடர்பில் எழுமாற்றாகச் சிலரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

"மருத்துவர்கள் மக்களைப் பற்றி யோசிக்காமல் தமது சுயநலத்துக்காக செய்கிற செயற்பாடுதான் இந்த பணிப்புறக்கணிப்பு" என்றார் திருகோணமலை, கிண்ணியாவைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்சியா.

"இந்த விடயத்தில் இவர்கள் பணத்துக்கும் பதவிக்குமாகத்தான் பணியாற்றுகிறார்கள். தம்மை நம்பிவரும் நோயாளர்களைப் பற்றிய அவர்கள் அக்கறையற்றவர்கள் என்றுதான் கூறமுடியும்" என்று வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்த தவச்செல்வம் புவிதன் தெரிவித்தார்.

"எங்கட கிளிநொச்சி வைத்தியசாலைக்கு போகவே பயமாகவுள்ளது. காய்ச்சல் என்கிற மனப்பயமே எங்களுக்கு காய்ச்சலைக் கொண்டு வந்திடும். நாடே இனம் புரியாத வருத்தங்களுக்குள் சிக்கிக் கொண்டு இருக்கும் போது இந்தப் போராட்டங்கள் எல்லாம் தேவைதானா? நாங்கள் பொழுதுபோக்குக்காகவா வைத்தியசாலைக்குச் செல்கிறோம்? முதலில் மருத்துவர்கள் தமது கடமையைச் செய்ய வேண்டும்." என்று கிளிநொச்சி, அறிவியல் நகரைச் சேர்ந்த கிரியா செல்வராசா கவலை வெளியிட்டார்.

"தெரிந்த வருத்தங்களுடன் செல்லும் போதே எங்களை கவனிப்பதில்லை. இப்பொழுது வருகின்ற வருத்தங்கள் புதியவை. ஏன் வருகிறது? எதற்கு வருகிறது? என்றே தெரியவில்லை. ஆனால் தமது பதவிசார் விடயங்களுக்குப் போராட்டம், பணிப்புறக்கணிப்பு என்று போய் சாலையில் நிற்கிறார்கள். ஆனால் அநியாயமாக இங்கு வருத்தங்களால் மக்கள் தவிக்கிறார்கள். முதலில் வருத்தங்களுக்கு நிவாரணிகளைத் தந்துவிட்டு பணிப்புறக்கணிப்பு செய்யச் சொல்லுங்கள் எந்த ஒரு மருத்துவரையாவது" என்று முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த சாரங்கா தேவசகாயம் தெரிவித்தார். (வ-4-12)



# காணாமற்போனோர் விடயத்தை இன்னும் கண்டுகொள்ளாத அரசு

*போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஏப். 5
காணாமற்போனோரின் உறவுகள் முன்னெடுத்து வருகின்ற போராட்டம் தீர்வு எதுவும் இல்லாமல் நேற்றும் தொடர்ந்தது. கூட்டு அரசும் இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது தமக்கு வேதனையாக உள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக, கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 44 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. வவுனியா நகரில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று 40 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று 25 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இவர்களைச் சந்திப்பதற்கு திட்டமிட்டிருந்தபோதும், சந்திப்பு நடைபெறவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமும் நேற்றுத் தொடர்ந்தது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை, ரெலோ அமைப்பின் கொள்கை பரப்புச் செயலர் கணேஸ்வரன் வேலாயுதம் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று சந்தித்தனர். (கு-5-6-7-108)

*மாணவி காணாமற்போனமை;*

# முறைப்பாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸ் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.5
இரு மாணவிகளைக் காணவில்லை எனச் செய்த முறைப்பாட்டுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த முறைப்பாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸார் அச்சுறுத்துகின்றனர் என சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் சிவில் நிலமை தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கௌதமன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:
கோப்பாய் பொலிஸ் பிரிவிலும் சங்கானையிலும் இரு மாணவிகளைக் காணவில்லை எனச் செய்த முறைப்பாட்டுக்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. கோப்பாய் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை மீளப்பெறுமாறு அவர்கள் அச்சுறுத்துகின்றனர். குறித்த இரு சிறுமிகளும் உள்ளனர் எனில் இது தொடர்பில் அடுத்த நடவடிக்கை என்ன? என்பதையே அவர்களின் பெற்றோர் கோருகின்றனர். இது குறித்து நடவடிக்கை எடுக்காத பொலிஸார் சட்டவிரோதமாகச் செயற்படுகின்றனர் என்றார்.

இதற்குப் பதிலளித்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ,
நாம் யாரையும் அச்சுறுத்தவில்லை. பெற்றோர் தமது பிள்ளைகளைக் காணவில்லை என முறையிடுகின்றனர். அதனை தேடிக் கண்டு பிடிக்கும்போது பிள்ளைகள் தமது காதலனுடன் தாமே விரும்பிச் சென்றதாகக் கூறுகின்ற சம்பவங்களே தற்போது இடம்பெறுகின்றன என்றார். (கு-101)

# நகைத் திருட்டு குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு நகைத் திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணம், மாநகரப் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 37 வயதுடைய நபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நகை திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில், குறித்த சந்தேகநபர்கள் தேடப்பட்டு வந்தனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெரு, கச்சேரி நல்லூர் வீதி, கட்டுவன், நாயன்மார்க்கட்டு போன்ற பகுதிகளில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தொடர்புள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்தது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி)

# சைட்டத்தை மூட இடம் கொடோம்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஓர் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையம் என்பதால் அதை எக்காரணம் கொண்டும் மூடுவதற்கு அரசு இடமளிக்காது என உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரது அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் பிரச்சினை குறித்து கலந்துரையாட இலங்கை வைத்தியர் சங்கத்துக்கு அரச தலைவர் அழைப்பு விடுத்திருந்தபோதிலும் அவர்கள் அந்த அழைப்பை அசட்டை செய்துவிட்டு மாணவர்களைப் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கை வைத்தியர் சங்கம் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது. எனவே, அந்த வழக்கின் தீர்ப்பு வரும் வரை அவர்கள் அமைதியாக இருக்கவேண்டுமே தவிர. மாணவர்களைப் போராட்டங்களில் ஈடுபடுத்தி கல்வி நடவடிக்கைகளைப் பாழ்படுத்தக்கூடாது. ஒரு தலைப்பட்சமாக நடந்துகொள்ளாமல் இலங்கை வைத்தியர் சங்கம் இரு பக்கங்களிலும் உள்ள நியாயங்களைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும். போராட்டங்களும் கண்டன அறிக்கைகளும் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (த)

## தனியார் உயர்கல்வி நிலையங்களில்

# பட்டப்படிப்புக்கு வங்கிக் கடன்கள்

கொழும்பு, ஏப்.5

அரசு சாரா உயர் கல்வி நிலையங்களில் பட்டம் வழங்கும் செயற்றிட்டங்களுக்கு நிதி ஆதாரங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பட்டம் பெறுபவர்கள் தேசிய மற்றும் மாகாண மட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் தொழிலை மேற்கொள்வார்கள் என்ற நிபந்தனையில் அவர்களுக்கு 8 லட்சம் ரூபா வரை கடன் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை இவ்வாண்டு நடுப் பகுதியில் செயற்படுத்துவதற்கான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் உள்நுழைவுக்கான சந்தர்ப்பங்களை இழந்துள்ள மாணவர்களுக்கு உதவுவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜி.ஜயசிங்க இது பற்றித் தெரிவிக்கையில், பட்டம் பெற்ற பின்பு ஆசிரியர் தொழிலைப் பெற்று அதே பாடசாலையில் ஒருவர் ஐந்து வருட காலம் பணிபுரிவாரானால் அவருக்கு வழங்கப்பட்ட முழுக் கடன் தொகையும் தள்ளுபடி செய்யப்படும் - என்றார். விஞ்ஞானம், கணிதம், ஆங்கில மொழி, தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அரச மற்றும் மாகாண மட்டப் பாடசாலைகளில் நிலவுகின்ற பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதற்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்படவிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 15,000 இளையோர் பயன் பெறுவார்கள் என அரசு நம்புகின்றது - என்றார். (த-ப)

# ஐ.நா. சபையை ஏமாற்றுகின்றது நல்லாட்சி அரசு

## ராஜிதவின் கருத்துக்கு செல்வம் எம்.பி. கண்டனம்



கொழும்பு, ஏப். 5

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்த கருத்தானது ஐக்கிய நாடுகள் சபையை ஏமாற்றும் செயற்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரின்போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகச் சொல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது என மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதெனவும், அது இறுதிப் போரின்போது அதிகளவில் இடம்பெற்றதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பதாகவும், ஏனைய நல்லிணக்கப் பொறிமுறைகள் உட்பட ஐ.நா மனித உரிமைகள் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகவும் கூறி இலங்கை அரசு மேலும் இரண்டு வருட கால அவகாசம் கோரியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிபந்தனைகளுக்கு இணைந்து கால அவகாசத்தைப் பெற்ற அரசு, போர்க்குற்றங்களை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், வடக்கு மாகாணத்துக்குத் தேவையான அதிகாரத்தை வழங்கியுள்ளதாகவும் பெரும் பொய்யைக் கூறியுள்ளது. அரசின் முக்கிய அமைச்சராக உள்ள ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிங்கள மக்கள் வாழ்வது போன்றே தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சகல உரிமையையும் சலுகைகளையும் வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இன்று வடக்கு-கிழக்கில் நில மீட்புப் போராட்டங்களும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான போராட்டங்களும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்களும் இடம்பெற்று வரும் நிலையில் எதனைச் சாதித்துவிட்டதாக அரசு பறைசாற்ற முயல்கின்றது என்பது கேள்விக்குரியவிடயமாகும்.

தெற்கில் ஓர் கதையும் வடக்கில் ஓர் கதையும் பேசும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும், இலங்கை அரசும் மனித உரிமைகள் சபையினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுகின்றதா என்பது தொடர்பில் ஆய்வை மேற்கொண்டு இலங்கை அரசின் மீது ஐ.நா. அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் - என்றுள்ளது. (த)

# கிராம அலுவலர்களின் இடமாற்றம் இடைநிறுத்தம்

ஒரே பிரிவில் தொடர்ந்து மூன்று வருடங்கள் பணியாற்றிய கிராம அலுவலர்களை இடமாற்றம் செய்வதற்கான தீர்மானம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இடமாற்றம் தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச் சின் செயலாளர் கடந்த வாரம் விடுத்த சுற்றறிக்கை அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் தாங்கள் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்கத் தலைவர் எம்.பீ.டி.வன்னியாராச்சி தெரிவித்தார்.

அரச சேவை ஆணைக்குழுவின் இடமாற்றக் கொள்கைக்கு முரணாகத் தங்களுக்கு அமைச்சின் செயலாளர் இடமாற்ற உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும், அமைச்சருக்கு விளக்கிக் கூறிய பின்னர் அவர் அந்த சுற்றறிக்கையை விலக்கிக் கொள்ளுமாறு செயலாளருக்குப் பணிப்புரை விடுத்ததாகவும் வன்னியாராச்சி மேலும் கூறினார். (த)

**வித்தியா படுகொலை வழக்கு;**

# 10ஆவது சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் 10ஆவது சந்தேகநபருக்கு எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறி யல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா பாடசாலைக்குச் சென்றவேளை கடத்தப்பட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 12 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர்.

இவர்களில் 10ஆவது சந்தேகநபர் பிணை கோரி ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் திகதியிடப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் மன்றில் முன்னிலையான எதிரி, தனக்கும் இந்தச் சம்ப வத்துக்கும் தொடர்பில்லை என்றும், தான் வித்தியாவுக்கு அஞ்சலி செய்யவே போயிருந்ததாகவும், ஒருவரது உடலுக்கு அஞ்சலி செய்வது தவறா என்றும் கேள்வியெழுப்பினார்.

இதற்கு மேல் மன்றின் நீதிபதி மா.இளஞ்செழியன், இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்போது யார் குற்றவாளி? யார் குற்றவாளி இல்லை என்பது புலனாகும் - என்றார் நேற்றும் இந்த வழக்கு மேல்நீதிமன்றுக்கு வந்தது. இதன்போது மன்றில் கருத்துரைத்த அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந்,

சந்தேகநபருக்கு தற்போது பிணை வழங்க வேண்டாம் எனக் கூறி அதற்கான காரணத்தையும் மன்றுக்கு முன்வைத்தார் இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து வருகின்றன. மிகவிரைவாக இவ்வழக்குக் குரிய குற்றப்பகர்வுப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பேன். இந்தத் தவணையை இறுதித் தவணையாக எடுத்துக்கொள்ளுமாறும் கூறினார்.

இவற்றைப் பரிசீலனை செய்த நீதிபதி, இந்த வழக்கு விசாரணைகள் முடியும் தருணத்தில் உள்ளன என்று கூறி சந்தேகநபரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-12)

# ஹெரோயினுடன் 9 பேர் ஹற்றனில் நேற்றுக் கைது

நுவரெலியா, ஏப். 5

ஹற்றன் குடாகம பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் ஒன்பது பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதல் இரவுவரை மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தகவலொன்றை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர்களைச் சோதனையிட்டபோது 645 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ய-43)

# நீராவிப்பிட்டியில் தொடரும் முஸ்லிம்களின் போராட்டம்



முல்லைத்தீவு, ஏப். 5

தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் முள்ளியவளை நீராவிப்பிட்டியில் முன்னெடுத்துள்ள தொடர் போராட்டம் ஐந்தாவது நாளாகவும் நேற்றுத நடந்தது.

இது குறித்து அந்த மக்கள் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டதில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் முல்லைத்தீவுக்கு மீள்குடியேற வந்துள்ளனர். இவ்வாறு வந்துள்ள பல குடும்பங்களுக்குக் காணிகள் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. எனவே கடந்த காலத்தில் வழங்கப்பட்ட காணிகளுக்குக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியே போராடி வருகின்றோம் என்றனர். (த-7)

# சிறைச்சாலைக்குள் செல்போன் கடை

## 17 கைத்தொலைபேசிகளும் உதிரிப்பாகங்களும் மீட்பு

கொழும்பு, ஏப். 5

தும்பர சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூடமொன்றில் நடத்தப்பட்டுவந்த கைத்தொலைபேசி விற்பனை நிலையமொன்று அங்கு நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்து 17 கைத் தொலைபேசிகளும் ஏனைய பல உதிரிப்பாகங்களும் மீட்கப்பட் டன.

25 ஹெரோயின் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைக்கூட மொன்றிலேயே இவை மீட்கப்பட்டிருப் பதாகவும், தும்பர சிறைச்சாலை வரலாற்றில் ஒரே தடவையில் மீட்கப்பட்ட பெருந்தொகை கைத்தொலைபேசிகளும், உதிரிப்பாகங்களும் இவையே எனவும் சிறைச்சாலைப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார். இந்தச் சிறைக்கூடத்துக்குள் பல்வேறு வகையான சட்டவிரோதச் செயல்கள் நடைபெறுவதாகக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே திடீர் சோதனை நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். (த)

## யாழ்...

அவரது நியமனம் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் பதவிக்காலம் எதிர்வரும்23ஆம்திகதியுடன்நிறைவடைகின்றது. அடுத்த துணைவேந்தருக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையால் மூவரின் பெயர்கள் அரச தலைவருக்குப் பரிந்துரைக்கப்பட்டன. இந்த நிலையில் புதிய துணைவேந்தராக பேராசிரியர் சிறி சற்குணராசாவை அரச தலைவர் நியமித்துள்ளார். (வ - 101)

## அரசுடன்...

பிழையென்றே எனக்குப் படுகின்றது. அது வன்முறைக்கே வித்திடும். வன்முறையால் ஏற்பட்ட அவதிகளையும் இடர்களையும் அல்லல்களையும் அனுபவித்தவர்கள் எமது மக்கள். மீண்டும் பொறாமை, துவேசம், வெறுப்புணர்ச்சி போன்றவற்றின் பாதையில் பயணிப்பது எமக்கு அழிவையே ஏற்படுத்தும். எமது சிந்தனைகள் மாறவேண்டும். அரசில் தமிழ் மக்களின் உரிமைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்வோருடன் கூட்டுச் சேரவேண்டும் என்று நினைக்கின்றேன். அதன் ஊடாக எங்கள் பொருளாதார வலிமையையும் மேம்படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண தொழிற்றுறைத் திணைக் களத்தால் நிறுவப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையத் திறப்பு விழா, மண்கும்பானில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு முதலமைச்சர் தெரிவித்ததாக, அவரது அமைச்சின் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இப்போது எளிமையானதும் மலிவானதுமான பொருள்களையே விரும்புகின்றனர். அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ற வகையில், நவீனத்துமான அதேவேளை எளிமையாள பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இளையோர் அரச உத்தியோகத்தில் மாத்திரம் நாட்டம் உடையவர்களாக இருக்கக் கூடாது. எமது வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடவும் முயற்சிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், இரண்டு பட்டங்களைப்பெற்ற இளையோர் ஒருவர் இவ்வாறான முயற்சி மூலம் பல லட்சம் மாத வருமானம் பெறுவதையும் உதாரணமாகக் குறிப்பிட்டார்.

### கொழும்புடன் ஒத்துழைப்பது தவறல்ல

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், அமைச்சர் மலிக் சமரவிக்ரம அண்மையில் இங்கு வந்திருந்தார். 2 ஆயிரம் தொழில் முயற்சியாளர்களை நாடு முழுவதும் உருவாக்கவேண்டும். அவர்களுள் இருநூறுபேரை வட மாகாணத்தில் உருவாக்க முயற்சிகள் எடுத்து வருவதாகவும் கூறினார். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் கொழும்பு அரசின் அமைச்சர்களுடனும் அபிவிருத்திச் சபைகளுடனும் கைகோர்த்து நன்மைகள் பெற்று எமது உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்வதும், ஏற்றுமதிகளை விருத்தியடைய உழைப்பதும் தவறல்ல என்று நான் கருதுகின்றேன்.

எம்முள் பலர் வெறுப்பின் அடிப்படையிலேயே அரசியலிலும் ஈடுபடுகின்றார்கள். மற்றைய துறைகளிலும் செயற்படுகின்றார்கள். சதா குற்றம் கூறிக் கொண்டிருக்கவே விரும்புகின்றார்கள். எந்த முன்னேற்றத்திலும் ஈடுபடாமல் இருப்பதே தோதானஅரசியல் என்று நினைக்கின்றார்கள். இது தவறு. எமக்கு அரசியல் ரீதியாகத் தவறு இழைக்கப்பட்டுள்ளது உண்மையே. அதற்காக நாம் எம் மனதில் வெறுப்பையும் துவேசத்தையும் வளரவிடுவது பிழையென்றே எனக்குப் படுகின்றது. அது வன்முறைக்கே வித்திடும். வன்முறையால் ஏற்பட்ட அவதிகளையும் இடர்களையும் அல்லல்களையும் அனுபவித்தவர்கள் எம்மக்கள். மீண்டும் பொறாமை, துவேசம், வெறுப்புணர்ச்சிபோன்றவற்றின் பாதையில் பயணிப்பது எமக்கு அழிவையே ஏற்படுத்தும். எமது சிந்தனைகள் மாறவேண்டும்.

நாம் எடுத்துக்கொண்ட செயலின் தன்மையையும், எங்கள் வலிமையையும், மாற்றான் வலிமையையும் எம் இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்து செயற்படவேண்டும் என்று வள்ளுவர்கூறியுள்ளார். அண்மைய ஜெனிவா நாடகத்தில் எம் வலிமையும், மாற்றானின் வலிமையும் எமக்குத் துணையாக இருப்பவர்களின்வலிமையையும் தெரிந்து கொண்டோம். காலத்துக்கு ஏற்றவாறு எமது சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுவது அவசியம். வெறும் ஆத்திரமும் ஆசூயையும் ஆண்மையென்று எம்முள் பலர் நினைக்கின்றார்கள். அது தவறு.

எமது துணை வலிமையை மேம்படுத்த வேண்டும். அதனால் தான் கொழும்பு அரசில், தமிழ் மக்களின் உரிமைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்வோருடன் கூட்டுச் சேர வேண்டும் என்று நினைக்கின்றேன். அதன் ஊடாக எங்கள் பொருளாதார வலிமையையும் மேம்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். இதைச் செய்வதாக இருந்தால் நாங்கள் தனிப்பட்ட விதத்தில் அரசிடம் இருந்து நன்மைகளைஎமக்கென்றுஎதிர்பார்க்கக்கூடாது. அவ்வாறான பொறியில் நாங்கள் அகப்பட்டுக் கொண்டோமானால்எமது கோரிக்கைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விடும் என்றார். (த-5)

## அதிகாரப்...

பாட்டுக்கு வந்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என்று மகிந்த ஆதரவுஅணிநாடாளுமன்றஉறுப்பினரும்,வழிநடத்தும் குழுவின் உறுப்பினருமான தினேஸ் குணவர்தன நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

"அதிகாரப் பகிர்வுக்கு பரந்தளவிலான இணக்கம் என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் நேர்காணல் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. வழிநடத்தும் குழுவில் அப்படி எதுவும் நடக்கவில்லை. அதிகாரப் பகிர்வை மையப்படுத்தியே வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியாகும். இந்தத் தகவலில் உண்மை இல்லை. இப்படியான தகவலை வெளியிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்படவில்லை. அவர் கூறியதுபோல் வழிநடத்தும் குழுவில் இணக்கம் எட்டப்படவில்லை"என்றார் தினேஸ்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "குறித்த செய்தி சரியானது. வழிநடத்தும் குழுவின் விடயங்களைத் தவறாகக் குறிப்பிடுகிறேன் என்று நினைத்தால் அது பற்றி வழிநடத்தும் குழுக் கூட்டத்தில் தினேஸ் கேள்வி எழுப்ப முடியும். பத்திரிகையில் வெளியான செய்தி சரியாகவே இருக்கின்றது" என்றார்.

இதன் பின்னர் இந்தப் பிரச்சினையை வழிநடத்தல் குழுக் கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தன எழுப்பினார். அங்கும்அவருக்குத்தனதுமறுப்பைதெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். (உ-5)

## சு.கவால்...

இடைக்கால அறிக்கையை விரைந்து இறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் இந்தப் புதிய பின்னடைவு தோன்றியுள்ளது.

வழிநடத்தல் குழுவின் 52ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர்களான சுசில் பிரேமஜெயந்த, நிமல் சிறிபால டி சில்வா, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மகிந்த அணி சார்பில் தினேஸ் குணவர்த்தன, ஜாதிக ஹெல உறுமய சார்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் இதுவரை எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் ஆரம்பத்திலேயே சர்ச்சை எழுந்தது. அதிகாரப் பகிர்வு தொடர்பில் வழிநடத்தல் குழுவில் ஆராயப்பட்டு அனைத்து விடயங்களிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் தவறான செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன சர்ச்சையைக் கிளப்பினார்.

அதனைச் சுமந்திரன் மறுத்தார். கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் வழிநடத்தல் குழுவின் கூட்டங்களிலும் எட்டப்பட்ட இணக்கங்கள் தொடர்பிலேயே தான் தெரிவித்தார் என்றும் அந்த ஊடகச் செய்திகளில் தவறு ஏதுமில்லை என்றும் அவர் கூறினார். இதை அடுத்து புதிய அரசமைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு விடயங்களில் சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிக்கப்போவதாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கூறினார்.

"புதிய அரசமைப்பு என கருத்துகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. அதனுடன் உடன்பட முடியாது. நடைமுறையிலுள்ள அரசமைப்பில் திருத்தங்களே மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு செய்தால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிய நிலையும் ஏற்படாது" என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறினார். இதே பாணியில் அமைச்சர் நிமலும் கருத்து வெளியிட்டார்.

சுதந்திரக் கட்சியின் இந்தத் திட்டவட்டமான எதிர்ப்பை அடுத்து "இதுவரையில் நடைபெற்ற அமர்வுகளின்போது ஏற்படுத்தப்பட்ட இணக்கத்தை மையப்படுத்தி இடைக்கால அறிக்கையை வெளியிடுவோம். அறிக்கை தயாரிப்புப் பற்றி நாளை (இன்று) நடைபெறும் கூட்டத்தில் பேசலாம்" என்றார்.

இதற்குப் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். வழிநடத்தும்குழு இன்று பகல் மீண்டும் கூடவுள்ளது. நேற்றைய கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன, புதிய அர்சமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி தொடர்பில் அரசுக்குள்ளேயே ஒருமித்த இணக்கப்பாடு இல்லை என்றார்.

"புதிய அரசமைப்பு என்ற பதத்தையே சுதந்திரக் கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதுள்ள அரசமைப்பில் தேவையான திருத்தங்களைச் செய்தால் பொது வாக்கெடுப்புக்குச் செல்லத் தேவையில்லை என்று அவர்கள் தெரிவிப்பதால் கூட்டத்தில் ஒரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. அரசுக்குள்ளேயே இது தொடர்பில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை. இப்படிஒருமித்தநிலைப்பாடுஇன்றிஇடைக்கால அறிக்கைஒன்றைவழிநடத்தல்குழுவின்அறிக்கையை எப்படி வெளியிட முடியும் என்று நான் கேள்வி எழுப்பினேன்" என்றார் அவர். சில மாதங்களுக்கு முன்னரும் சுதந்திரக் கட்சியினர் இப்படிக் குழப்பங்களை உருவாக்கினர். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குஎதிரான கருத்துக்களை அவர்கள் பொது வெளியில் பேசிவந்தனர். அதிகாரப் பகிர்வுக்கு இணங்கப்போவதில்லை என்றும் தெரிவித்து வந்தனர். வழிநடத்தல் குழுவிலும் இணங்கிப்போகாத பிடிவாதக் குணத்தை வெளிப்படுத்தி வந்தனர். பின்னர் இந்த விடயத்தில் அரச அதிபர் மைத்திரி பால சிறிசேன தலையிட்டு, சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுடன் பல மட்டக் கலந்துரையாடல்களை நடத்தியதை அடுத்து நிலைமை கட்டுக்குள் வந்தது. சுதந்திரக் கட்சியினர் எதிர்ப்பைக் கைவிட்டு இணங்கிப்போகத் தொடங்கியிருந்தனர். ஆனால், மீண்டும் இப்போது அவர்கள் குழப்பங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளனர். (உ)

## ஐ.நா...

னத்தை அப்படியே அச்சுப்பிசகாமல் நடைமுறைப்படுத்த ஒப்பேற்றுவதற்கு கொழும்பு அரசு இணங்கினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்கும். இவ்வாறு தன்னைச் சந்தித்த ஜேர்மனிய நாடாளுமன்றத்தின் தலைவரிடம் எடுத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

இலங்கை வந்துள்ள ஜேர்மன் நாடாளுமன்றத்தின் தலைவருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் 'உதயன்' பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன்,

தமிழ் மக்களின் அபிலாசைகள் வேணவாக்கள் புதிய அரசமைப்பின் ஊடாகப் பூர்த்தி செய்யப்படவேண்டும். நீடித்து நிலைத்து நிற்கும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். இவற்றைவென்றெடுப்பதற்குப்பன்னாட்டுச்சமூகம் எங்களுக்குத் துணை நிற்க வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளும் சுட்டிக்காட்டப்பட்டன. காணி விடுவிப்பு மந்த கதியில் நடைபெறுகின்றது. அரசியல் கைதிகள் விடுவிப்பு முழுமை பெறவில்லை. காணாமற்போனோர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. காணி விடுவிப்புக்காகத் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தொடர்பில் அவர்கள் கேள்வி எழுப்பினர். அது தொடர்பில் அரசு கரிசனை காட்ட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பிலும் பேசப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (த-5)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 04.04.2017 | வெற்றி வாரம் 2117 | வர்ணம் நீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 22 29 37 60
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 2, 366, 008/=
2017.04.07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சீட்டிழுப்பு வாரம்: 121
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 04.04.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 82,019,912/-
P 06 13 57 70
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 554 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 04.04.2017
வெற்றி இலக்கங்கள் 11 33 54 55 N
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 25,196,843/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தவநாகேஸ்வரன்(ராசன்)



மண்கும்பானை பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தவநாகேஸ்வரன் (ராசன்) 04.04.2017 செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தவமணி தம்பதியரின் அன்பு மகனும் பஞ்சாட்சரதேவியின்(மலர்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற பிரதீபன் (பிரபா) அவர்களின் பாசமிகு தந்தையும் டயானாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வசந்தா மற்றும் சாந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாதனின் மைத்துனரும் ஜிந்துஷனின் (யாழ் பல்கலைக்கழகம்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமைபி.ப3.00மணியளவில்அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவாணர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
076 667 9157

விற்பனையாளர் தேவை
தேசிய லொத்தர் சபை ரிக்கெற் விற்பனையாளர் வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு தேவை .சம்பளம் / கொமிசன் வழங்கப்படும். தொடர்பு.0775164928

# குடும்பத்தலைவர் மீது மர்ம நபர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 5

இராணுவபுலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்திய ஒருவர் இரவு வீடு புகுந்து குடும்பத் தலைவரைத் தாக்கியதாக பருத்தித்துறைப் பொலிஸில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.

குடத்தனையில் நேற்று முன்தினமிரவு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

"தன்னை இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறியே அந்த நபர் தாக்குதல் நடத்தினார். பொலிஸில் முறையிட்டால் மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்பதாகவும் அவர் அச்சுறுத்தினார்" என்று முறையிடப்பட்டிருக்கிறது. (வ-4-26)

## ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 5

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் ஆன்மிகநிகழ்வு வரிசையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு "யோக ஆன்மிகம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-173)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய மாணவர்கள் கடந்த வருடம் (2016) நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 23 மாணவர்களும் கணித பாடத்தில் விசேட சித்தி பெற்று 19 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகைமை பெற்றுள்ளனர். இவர்களின் உன்னதமான பரீட்சைப் பெறுபேற்றுக்கு அச்சாணியாக விளங்கிய அதிபர், கணித ஆசிரியர், சக ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் **அனலைதீவு கோட்டைதுறைமுகம் ஸ்ரீ கௌரி அம்பாள் பரிபாலனசபையினரும் அனலைதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பையா செல்வரத்தினமும் பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.**

## சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
## ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

Table Mat - 2400/= 1550/=
Kitchen Rack - 2000/= 1500/=
Iron Board - 1300/= 1000/=
மெத்தை - 6 x 3 - 2400/= 1800/=
6 x 3 - 2800/= 2450/=
பிரம்பு செற் - 16500/= - 14750/=
லைதர் சோபா செற் - 41500/= - 34500/=
6 கதிரை (ரீப்போ இலவசம்) - 5500/= - 4050/=
ஸ்ரீல் அலுமாரி - 11500/= - 9600/=
கட்டில் 6 x 4 - 10500/= - 8750/=
T.V.ஸ்ராண்ட் - 10500/= - 8950/=

இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்) 021 492 7791, 076 821 9418, 076 821 9415, 076 821 9413

## விசேட விலைக்கழிவு !!!

நீர் சுத்திகரிப்புத் துறையில் அதி சிறந்த தொழில்நுட்பவியலாளர்களை தன்னகத்தே கொண்டு யாழ் மண்ணில் இயங்கிவரும் தன்னிகரற்ற Everpure Hi-Tec (Pvt) Ltd. நிறுவனமான நாங்கள் பிறக்கவிருக்கும் புதுவருடம் உங்கள் அனைவருக்கும் அமைதியையும், சுபீட்சத்தையும் அள்ளித்தரும் ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

இப்பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்துங்கள்!

Discount
5,000/= to 50,000/=
Valid untill 30.04.2017

**சுத்தமான குடிநீருக்கான எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள மாசுக்கள், கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**




Tiles, Bathroom Fittings, Washing Machine களில் படியும் கல்சியம், மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!



**Swimming Pool**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து, நிறுவி, பராமரித்துத் தரப்படும்.



**Waste Water Treatment**

வீடு, தொழிற்சாலை, உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

WE ACCEPT VISA MasterCard

WARRANTY

Everpure Hi-Tec (Pvt) Ltd.
#341, K.K.S. Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

# வாணி
## ரெக்ஸ் இன்



## 10% - 30%
விசேட விலை கழிவில் விற்பனை



**தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு**

சகலவிதமான ஆடைகளுக்கும்
10% தொடக்கம் 30% வரை
அசத்தலான விலைக்கழிவுகள்
வழங்கப்படும்.
எமது அனைத்து
வாடிக்கையாளர்களும்
தங்களுக்குத் தேவையான
சகலவிதமான ஆடைகளையும்
தெரிவு செய்து
அள்ளிச்செல்லுங்கள்

இல.81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578, 021 222 9286

ABI Fashion World

# அபி பஷன் வேல்ட் இன்
## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

**சித்திரை தள்ளுபடி**
**10% to 60%**

தமிழ்ப் புத்தாண்டை
மகிழ்ச்சியுடன்
கொண்டாட குடும்பத்தில்
உள்ள அனைவரும்
விரும்பும் ஆடைகள்
ஒரே இடத்தில்...



சல்வார்
1500/= முதல்

சல்வார் துணிகள்
800/= முதல்
(ரொப் 01 இலவசம்)

சேட் 600/= முதல்
(01 வாங்கினால்
01 இலவசம்)

ஹொட்டன் சாறி
800/= முதல்

பட்டுப்புடைவை
2000/= முதல்

ரீசேட் 500/= முதல்
(01 வாங்கினால்
01 இலவசம்)

பான்சி சாறி
1000/= முதல்
(01 வாங்கினால்
02 இலவசம்)

இச்சலுகை
23.03.2017
13.04.2017 வரை

அபியின்
வாடிக்கையாளர்
அட்டைக்கு
5% விசேட
விலைக்கழிவு.
(விலைக்கழிவுகள்
நிபந்தனைகளுக்கு
உட்பட்டது)

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738
077 324 6503
abifashionworld

# மாணவனை மோதிய ஹைஏஸ் சாரதி கைது

தென்மராட்சி, ஏப். 5

பாடசாலைக்கு முன்பாக மாணவனை மோதித் தள்ளிய ஹைஏஸ் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நாவற்குளி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று மு.ப. 11.15 மணிக்கு இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்த 8 வயதுடைய மாணவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பாடசாலையிலிருந்து வெளியேறியபோது வேகமாகப் பயணித்த குறித்த வாகனம் பாடசாலைக்கு முன்பாகவே வைத்து மாணவனை மோதியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர். அதன்பின்னர் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர். குறித்த வாகனம் புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4- 9)

# யோகர் சுவாமிகள் குரு வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 5

யோகர் சுவாமிகளின் 53ஆவது குருவழிபாடு நாளை வியாழக்கிழமை கொழும்புத்துறையிலுள்ள அவரது சமாதிக் கோவிலிலும் சிவதொண்டன் நிலையத்திலும் நடைபெறும் என்று யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினர் அறிவித்தனர்.

குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் சிவதொண்டன் நிலையத்து ஆச்சிரமவாழ்வு நாள்களாக கடைப்பிடிக்கப்படும். இந்த நாள்களில் நற்சிந்தனை முற்றோதல் இடம்பெறும். குருபூசை நாளன்று மு.ப. 9 மணி முதல் முழுக்கு ஆராதனைகள் நிகழும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)



# மாட்டின் எச்சங்கள் பற்றைக்குள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் உள்ள பற்றைக்குள்ளிருந்து மாட்டின் தலை மற்றும் எலும்புகள் நேற்று மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் உள்ள மாட்டுப் பண்ணையாளரின் ஒருவரின் வீட்டில் உள்ள மாடு ஒன்று நேற்று முன்தினம் காணாமற்போனது. மாட்டு உரிமையாளர் மாட்டைத்தேடிச் சென்றபோது வீட்டில் இருந்து அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் மாட்டின் தலை மற்றும் எலும்புப் பகுதி காணப்பட்டன. அது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-10-26)


## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 07.04.1936 மறைவு 01.04.2017

### அந்தோனிப்பிள்ளை அந்தோணியாப்பிள்ளை
(சோட் மாமி)

பிள்ளையார் கோயிலடி, மயிலிட்டியை பிறப்பிடமாகவும் கடற்கரை வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அந்தோணியாப்பிள்ளை (01.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சில்வேஸ்திரி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் (சோட் மாமா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மேரிப்பிள்ளையின் சகோதரியும், திரேசம்மா (இந்தியா), விஜி (ஜேர்மனி), அன்ரனி ஈடின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜோன் ஞானேந்திரன் (ஜேர்மனி), கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசல்யா (ஜேர்மனி), அஜந்தா (லண்டன்), துஷ்யந்தன், நிசாந்தன் (சுவிஸ்), றஜி, சுஜீவா, றஜிதா (லண்டன்), நிஷாந்தினி, பிரபு, நித்தியா, திவாகர் (ஜேர்மனி), கவாஸ்க்கர் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், டினுசன், டிலக் ஷி, டிஷாந், அஸ்மிதா, அஸ்வின், திவானா, நிலக்ஸ், நிகேஷ், லதிகாஷ், அக் ஷயா, ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கடற்கரை வீதி,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 293 6544

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 16.07.1931 இறப்பு 01.04.2017

### திருமதி நாகம்மா இராசய்யா

யாழ் மட்டுவில் கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா இராசய்யா 01.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளை - ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மகளும், மரியாம்பிள்ளை - சவியேற்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசய்யா அவர்களின் அன்பு மனைவியும், தர்மலிங்கம் (யாழ் மல்லாகம்), கோபாலசிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம் (ஜேர்மனி), கமலாவதி (யாழ் கல்வயல்), கமலாம்பாள் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னப்பு அவர்களின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம் (யாழ் கல்வயல்), இரவிச்சந்திரன் (ஜேர்மனி), வரலட்சுமி (ஜேர்மனி), ஜமுனாதேவி (யாழ் மல்லாகம்), சுகந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபாஸினி, சுஜேந்திரன், தர்சினி, விஜிதா, கவிதா, தாரணி, பிரபாகரன், பிரசாத், சோபிகா, துஸ்யா, தினேஸ், கிரிசாந், சுஜிதா, அனிதா, சுனித்திரா, நிஸாந், சுஜீந், சசிகாந், தனுகா, விதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிரிசாந், கஸ்தூரி, கஜீபன், இந்துயன், யசிந்திரன், சயன், யனோதினி, கிருத்திகா, பிரிதா, கயன், பினிசியா, கார்த்திகா, தீசன், காயத்திரி, கயனிகா, சந்தோஷ், நிஸானா, இலக்கியா, சுவாதி, அஸ்வினி, அக்ஸயன், யுஜீபன், ஹரினி, லெயோன், ஜனிக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.04.2017) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1st மைல் போஸ்ட்,**
**கல்வயல் (ஐயனார் கோயிலடி)**
**சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 579 4531



### கந்தசாமி மனோன்மணி அம்மாள்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சக்கலாவோடை காரைநகர், தெஹிவளை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி மனோன்மணி அம்மாள் 02.04.2017 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், இந்திராதேவி, நாகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாராயணன், மனோகரி ஆகியோரின் மாமியாரும், சரவணபவன், கார்த்திகேயன், பகீரதன், பிரசாந்தன் - லக்ஷ்மிபிரதா, குகசாந்தன், துளசி - சிவபிருந்தன், சுபசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம், வைட்ஹவுஸ் மலர்ச்சாலையில் இன்று (05.04.2017) புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (06.04.2017) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் சக்கலாவோடை இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சக்கலாவோடை,**
**காரைநகர்.**

தகவல்:
**நாகேந்திரன்** (மகன்)

077 377 0455



### திருமதி அன்னம்மா அகஸ்ரீன்

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா அகஸ்ரீன் 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன் - மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சென்றோக் - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகளும், சென்றோக் அகஸ் ரீன் அவர்களின் அன்பு மனைவியும், அனாஜோர்ஜ் (யோய் - பிரான்ஸ்), ஜெயமார்ஷல் (டயஸ்-லண்டன்), நோயல் விஜயகுமார் (விஜி - கனடா), அனஸ்ரேசியஸ் நிமால் (ஆஸ்திரேலியா), திருமதி அனஸ்ரேசியஸ் யாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், றோசா, பிறேமிளா, பென்சியா, யூடி, வின்சன்ற் ஆகியோரின் அன்பு மாமியாரும், றொசானி, இவோன், கத்தறின், அன்ரோனியா ஜெவ்றின், மைக்கல், கனா, செறமி, ஜெனற் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை, அலெக்சாண்டர், வஸ்தியாம்பிள்ளை, தவமணி மற்றும் அக்னெஸ், பிரகாசி, அலெக்சாண்றா, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.04.2017) வியாழக்கிழமை இல. 54, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள இல்லத்திலிருந்து, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 54, ஈச்சமோட்டை**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**


# நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.5

இராமநவமி விழாவும் நூல்கள் வெளியீடும் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு வல்லைவெளி ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# வராஹி அம்பாளுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

கொக்குவில் மேற்கு வராஹிபுரம் ஸ்ரீ வராஹி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

யழ்ப்பாணம்,ஏப.5

மலரும் மலர்கள் முன்பள்ளி விளையாட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு அராலி மேற்கு சனசமூக நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி சத்தியசீலன் சிவறஞ்சினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை உடற்கல்விக் கல்விப்பணிப்பாளர் திருமதி நடராஜா மனோறஞ்சிதமலர் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# அனலைதீவு சதாசிவம் ம.வி. மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 5

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கணித பாடத்தில் 100 வீத சித்தி பெற்ற தீவகக் கல்வி வலயத்தின் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் 23 மாணவர்களும் அதிபர் மற்றும் ஆசிரியர்களும் கல்விச் சமூகத்தினராலும் வித்தியாலய சமூகத்தினராலும் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். தீவகக் கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலன் நேற்றுமுன்தினம் வித்தியாலயத்துக்குச் சென்று வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை வித்தியாலய சமூகத்தின் முன்னிலையில் கௌரவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ 9)

# பட்டப்பகலில் வீடுடைத்து நகைகள், பணம் திருட்டு

## மானிப்பாயில் சம்பவம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் வீட்டுக்காரர் கோயிலுக்குச் சென்றபோது வீட்டிலிருந்த 6 பவுண் நிறையுடைய நகைகளும் ஒரு லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"மானிப்பாய் மகளிர் கல்லூரியை அண்மித்த வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் மதியம் திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. வீட்டுக்காரர் கோயிலுக்குச் சென்றிருந்த போது திருட்டு இடம்பெற்றது. வீடு திரும்பிய போது வீட்டின் பின் கதவு பிரிக்கப்பட்டதோடு, பொருள்கள் சிதறுண்டு காணப்பட்டுள்ளன. நகைகளைப் பார்த்தபோது அவை திருடப்பட்டிருந்தன என்று விசாரணையில் கூறப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை இடம்பெறுகிறது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-4)

## தொழிலுக்கு சென்ற மீனவர் சடலமாக மீட்பு

மன்னார்- தாழ்வுபாட்டிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்கப்பட்டார். கடலில் தவறி விழுந்து அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பேசாலையைச் சேர்ந்த சத்தியா செபமாலை (வயது 65) என்பவரே உயிரிழந்தார்.

"திங்கட்கிழமை மாலை றோலர் படகில் குறித்த மீனவர் தொழிலுக்குச் சென்றிருந்தார். அவர் படகிலிருந்து தவறி விழுந்த போது, இயந்திரப் பகுதிக்குள் கை சிக்கிக்கொண்டது. அதனால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று விசாரணைகளில் கூறப்பட்டது" என்று மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் ராஜா குரூஸ் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பேசாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-4-101)


## கண்ணீர் அஞ்சலி

எமது தேசிய கல்வியியற் கல்லூரியின்
கல்விசாரா உத்தியோகத்தரான
திரு. தியாகராஜா சிற்றம்பலம்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **பத்மலீலாவதி தியாகராஜா**

அவர்கள் 03.04.2017 இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 05.07.1942 மறைவு 03.04.2017

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்.

## ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 10 . 01 . 1956



இறப்பு 16 . 03 . 2016

**சண்முகம் மகேஸ்வரநாதன்**
(இத்தாலி அங்கிள்)
(நயினாதீவு)

ஓராண்டு கடந்து போனாலும் நீங்கள் எம்முடன்
வாழ்ந்த நாள்களை மறக்க முடியுமா? சடுதியாய்
ஆயுள் முடிந்து கண்ணுறங்கினாலும் நீங்காதப்பா
உங்கள் நினைவுகள் ஆயுள் முழுவதும் உங்களை
நினைப்போம் ஆண்டவன் பாதம் நீங்கள்
அமர்ந்திட வணங்குகிறோம்
எவ்வேளையிலும் உங்கள் நினைவுகளைச் சுமந்து
வாழும் எங்களது கண்ணீர்த்துளிகள் - தினமும்
உங்கள் திருப்பாத மலர்களுக்கு சமர்ப்பணம்

அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

குடும்பத்தினர்.
077 917 4878


# அடாவடிக் குற்றச்சாட்டில் அல்வாயில் இருவர் கைது

கரணவாய் ஏப் 5

அல்வாய், பட்டியோடைப் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாய் மாலிசந்தி, அல்வாய் பட்டியோடைப் பகுதிகளைச் சேர்ந்த இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பட்டியோடைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் நுழைந்த கும்பல் ஒன்று அங்கிருந்தவர்கள் மீது பொல்லுகள் தலைக்கவசம் என்பவற்றால் சரமாரியாகத் தாக்கினர் .இதில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். நான்கு பேரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-108)


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

அமரர்
**அருணாசலம் சுப்பிரமணியம்**

கடந்த 08.03.2017 புதன்கிழமை
இறைவனடி சேர்ந்த
அமரர் அருணாசலம் சுப்பிரமணியம்
அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக்
கிரியைகள் இன்று (05.04.2017)
புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்
கரையிலும். வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் 07.04.2017
வெள்ளிக்கிழமை அன்னாரது
இல்லத்திலும் நடைபெறும். அதனைத்
தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
077 368 2787
இல.1118, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.



## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 11 . 1935



மறைவு 03 . 04 . 2017

**Dr.(Mrs) தனலட்சுமி சரவணபவானந்தன்**

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் ராஜகிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி சரவணபவானந்தன் (ஓய்வுபெற்ற பேராசிரியர் Pharmacology, மருத்துவ பீடம். யாழ். பல்கலைக்கழகம்) 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Prof.N. சரவணபவானந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மரகதவல்லி தம்பதியரின் அன்பு மகளும், துவாரகா. காலஞ்சென்றவர்களான சிவபாலன், பார்வதி ஆகியோரின் பாசமிகு தாயும் நிமால், முரளிதரன் (USA) ஆகியோரின் மாமியும் பவித்ரா, விசாகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ராஜலட்சுமி மகேஸ்வரன், ப்ரகசுந்தரகுசாம்பாள் கந்தையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை அவரது ராஜகிரியை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.00 மணியளவில் பொரல்லை கனத்தை இந்து மயானத்திற்கு கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1161, Kotte Road, Rajagiriya,
077 377 1222

தகவல்:
மகள் - குடும்பத்தினர்

# தந்தை விபத்தில் சிக்கிவிட்டார் என பதறியடித்து ஓடிய மகளும் விபத்து

தென்மராட்சி, ஏப். 5

சாலை விபத்தில் தந்தை காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என அறிந்து, பதைபதைத்து சைக்கிளில் ஓடிச் சென்ற மகளை மற்றொரு வாகனம் மோதியதில் அவரும் படுகாயமடைந்தார்.

கைதடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நாவற்குழிதச்சன்தோப்பைச் சேர்ந்த ந.இராசதுரை (வயது-55) என்பவர் நேற்றுமுன்தினம் காலை சம்பளம் பெறுவதற்காக சாவகச்சேரிக்கு சைக்கிளில் சென்றார். அவரை மோட்டார் சைக்கிள் மோதியது. விபத்தில் அவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த வவுனியா நம்பைக்குளத்தைச் சேர்ந்த குமாரன் சயந்தன் (வயது-27) என்பவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தந்தை விபத்தில் சிக்கிக் காயமடைந்துள்ளார் என அறிந்த அவரது 16 வயது மகள் சைக்கிளில் வைத்தியசாலைக்குச் சென்ற போது சாலையில் வாகனம் மோதியது. விபத்தில் அவரும் காயமடைந்தார். தற்போது தந்தையும் மகளும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ- 9)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

01. அச்சகமொன்றில் கமடா மெசின் ஓடுவதற்கு முழு நேர அல்லது பகுதி நேர வேலைக்கு ஆள் தேவை.
02. அச்சகமொன்றில் புத்தகம் கட்டுவதற்கு ஆள்கள் தேவை.

அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

**17, சட்டநாதர் வீதி, நல்லூர்.**

077 716 5589

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல மருத்துவ ஆய்வு கூடத்திற்கு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தேவை. (MLT)

**077 433 5079/ 076 603 7358**

**வீடு வாடகைக்கு**

A9 வீதி கிளிநொச்சி நகரில் வீடு வாடகைக்கு உண்டு.

077 698 5317

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 09.05.2017.

**LIBRARY**

Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian

**Note 1**:

Preference will be given to those who have**degree in Social Sciences/Engineering** for the Post of Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Assistant Librarian Gr.I | Rs.87415 – 7x2020– 101555/-p.m |
| Senior Assistant LibrarianGr.II | Rs.76275 – 11x1520– 92995/-p.m |
| Assistant Librarian | Rs.53235 – 10x1240 – 65635/-p.m |

**Note 2:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paidin the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:

   i)Academic allowance

   Senior Assistants Librarian Gr.I/Gr.II – 136%
   Assistant Librarian – 100%

   ii) Additional monthly allowance – 20% of the basic salary

   iii) Research allowance - 35% (based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

*1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Assistant LibrarianGr.II and above*

*2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system*

*3) Gratuity payments*

*4) Employees Trust Fund benefits*

*5) Free Medical Services*

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
03.04.2017

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஏப். 5

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயத்தின் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## ஆலோசனை கூட்டம்

அச்சுவேலி,ஏப்.5

அச்சுவேலி மத்தியகல்லூரியின் 125ஆவது ஆண்டு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று புதன் கிழமை பி.ப. 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-11)

## வெள்ளைப்புற்றடி விநாயகருக்கு நாளை கொடி

யாழ்ப்பாணம்,ஏப்.5

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை 6ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## நாய்களுக்கு கர்ப்பத் தடை

சாவகச்சேரி, ஏப். 4

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்புப் பெண் நாய்களுக்கு இலவச கர்ப்பத் தடை சத்திர சிகிச்சையை சுகாதாரத் திணைக்களத்தினர் இன்று காலை 8.30 மணி தொடக்கம் நகரசபை அலுவலகத்தின் முன்பாக மேற்கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. பெண் நாய்களை வளர்ப்போர் அவற்றை அழைத்த வந்து இலவசமாக கருத்தடைச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (வ -9)

# பாஷையூர், மணியந்தோட்டம் பங்குகளின் சிலுவைப் பாதைப் பேரணி வெள்ளியன்று

கொழும்புத்துறை, ஏப். 5

பாஷையூர், மணியந்தோட்டம் பங்குத் தந்தையர்களின் ஏற்பாட்டில் தவக்காலத்தை முன்னிட்டு மாபெரும் சிலுவைப் பாதை பேரணி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து நாளை மறுதினம் பி.ப. 3 மணிக்கு இயேசு சிலுவை சுமந்த திருச்சொரூபம் தாங்கிய ரதத்துடன் ஆரம்பமாகும் பேரணி சென். அன்ரனிஸ் வீதி, கடற்கரை வீதி, துண்டி வீதி, கொழும்புத்துறை வீதி, மணியந்தோட்டம் வீதி வழியாக மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தைச் சென்றடையும்.

குறித்த வீதிகளில் அடையாளமிடப்பட்ட இடங்களில் தரித்து நின்று இயேசுவின் பாடுகள், இறப்பை நினைவுபடுத்தும் சிலுவைப்பாதைத் தியானங்களின் சிந்தனைகள் இடம்பெறும். சிலுவைப் பாதையின் இறுதியில் மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் திருப்பலி இடம்பெறும்.

இந்தத் தவக்கால பக்தி முயற்சியில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகள், மணியந்தோட்டம் கர்த்தர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி செபஸ்ரியன் அடிகள் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள் ளனர்.

மணியந்தோட்டம் புதிய பங்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பின் இடம்பெறும் முதலாவது சிலுவைப்பாதைப் பேரணி இது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை, மணியந்தோட்டம் கர்த்தர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள வியாகுல அன்னை கெசியில் வியாகுல அன்னை நினைவுத் திருப்பலி நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ- 135)

**காணி விற்பனைக்குண்டு**

இல.820, ஆஸ்பத்திரிவீதி (முலவை சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள 4பரப்பு 1 ½ குளி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தரகர்கள் தேவையில்லை நேரில் வரவும்.

தொடர்பு: **071 707 3631**

**நாகபூசணி திருமணசேவை**

நீங்கள் விரும்பும் டாக்ரர், எஞ்சினியர், எக்கௌண்டன், சட்டத்தரணி, வங்கி உத்தியோகத்தர், ஆசிரியர், அரசஉத்தியோகத்தர், தனியார் துறையினர், உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். பொருத்தமான ஜாதகங்கள் போட்டோக்களுடன் உடன் தெரிவு செய்து தரப்படும். ஏழு நாள்களும் திறந்திருக்கம்.

**383/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)**
**021 222 9306/ 077 138 7596**
Email: nakapoosany@gmail.com

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
(தேசிய பாடசாலை)
**க.பொ.த (உ/த) - 2019 மாணவர் அனுமதி**

எமது கல்லூரியில் பொறியியல் தொழில்நுட்பம், உயிர்முறைமை தொழில்நுட்பம், கணித விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளுக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

தகுதியான மாணவர்கள் இன்று முதல் விண்ணப்ப படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவு திகதி 28.04.2017.**

**குறிப்பு :**

- தொழில்நுட்ப பிரிவுக்கு மாணவிகளும் இணைத்துக் கொள்ளப்படுவர்.
- கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் விசேட திறன்மயினை வெளிப்படுத்துகின்ற மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படும்.
- வெளிமாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.

**- அதிபர் -**

# தாலிக்குளம் - செட்டிக்குளம் வீதியை சீரமைக்குமாறு நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஏப். 5

வவுனியா தாலிக்குளம் ஊடாக செட்டிகுளம் செல்லும் பிரதான வீதி மிகவும் சேதமுற்ற நிலையில் உள்ளது. வீதியைச் சீரமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காலை 7 மணிக்கு வாரிக்குட்டியூர் சந்தியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஒன்று கூடினர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஊர்வலமாக தமது பாடசாலையான கணேஸ்வரா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் சென்றனர்.

"1958 ஆம் ஆண்டு இங்கு குடியமர்ந்தோம். அப்போதிலிருந்து வீதி சீரமைக்கப்படவில்லை. அதனால் எமது கிராமம் முன்னேறாதுள்ளது.

கிராமத்துக்கு வரும் அரசியல்வாதிகள் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை." என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானது. தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 'ஐ' கருத்திட்டத்தில் மறுசீரமைப்புக்காக உள்வாங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ற - 5)

# வேரவிலில் யானைகள் அட்டகாசம் அச்சத்துடன் விழித்திருக்கும் மக்கள்

## நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 5

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வேரவிலில் யானைகளின் அட்டகாசம் திடீரென அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

முன்னிரவில் கூட்டமாக வரும் யானைகள் பயன்தரு மரங்களை வேருடன் பிடுங்கி எறிந்து அட்டகாசம் செய்கின்றன. அச்சத்துடனேயே இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"வேரவில் கிராமம் சிறு காட்டுடன் இணைந்ததாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் அந்தப் பிரதேசத்தில் ஓரிரு யானைகளே இருந்தன. அவை கிராமத்துக்குள் புகுவதில்லை.

கடந்த சில வாரங்களாக, திடீரென யானைகள் கிராமத்துக்குள் புகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன். கிட்டத்தட்ட 10 யானைகள் வரையில் கூட்டமாக வருகின்றன.

தென்னை மரங்கள் உள்ளிட்ட பயன்தரு மரங்களை அவை பிடுங்கி எறிகின்றன. இரவில் நிம்மதியாக தூங்க முடியவில்லை. அதிகாலை 2 மணி வரை தினமும் விழித்திருந்து அதன் பின்னரே நித்திரை கொள்கின்றோம். இதுவரை காலமும் வராத யானைகள் இப்போது திடீரென கூட்டமாக வருவது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு அவை இங்குஇறக்கி விடப்பட்டுள்ளனவா என்று எண்ணத் தோன்று கின்றது." என்று அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொன்னாவெளி கமக்கார அமைப்பின் பொருளாளர் சாரதா தெரிவித்தார்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிர்ணய விலையில் அரிசி விநியோகிக்க முடியாது

## அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கம் கூறுகின்றது

கொழும்பு, ஏப். 5

வரிச்சலுகை நீடிக்கப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் அரிசியை அரசின் நிர்ணய விலையில் விநியோகிக்க முடியாது என்று அத்தியாவசியப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹேமக பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. அரிசி இறக்குமதியில் அதிக செலவினத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. பண்டிகைக்காலத்தில் நுகர்வோருக்குத் தேவையான அளவு அரிசி கையிருப்பில் உள்ளது - என்றார்.

அதேவேளை, பண்டிகைக் காலப்பகுதியில் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன என்று வர்த்தக விவகார அமைச்சு குறிப்பிட்டது.

நாடு முழுவதும் சிறப்பு சுற்றிவளைப்புக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சின் செயலர் சிந்தக லொக்குஹெட்டி தெரிவித்தார்.

(ற - 10)

# சிவில்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத அரசியல்வாதிகள்

யாழ். மாவட்ட சிவில் குழுக் கூட்டம் மாவட்ட செயலர் தலைமையில் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அரசியல்வாதிகளில் ஒருவர் மட்டுமே அதில் கலந்து கொண்டார்.

மாவட்ட செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு 25க்கும் மேற்பட்ட அரசியல் வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் தவிர்ந்த எவருமே அதில் பங்கு கொண்டிருக்கவில்லை.

அரச உத்தியோகத்தர்கள், பொலிஸார் மட்டும்பங்குகொண்டிருந்த நிலையில் கலந்துரையாடல் நடைபெற்றது. (ற - 101)

நினைவு



திருமதி இராஜேஸ்வரி
கருணை ஆனந்தன்
திதி: ஸ்ரீ ராம நவமி

பத்தாண்டுகள் எப்படித்தான் பறந்ததுவோ - எம் உயிரே
எப்போதும் உனை நினைந்து உருகாத நாளில்லை
அப்போதும் இப்போதும் எம்முடனே சிரிக்கின்றாய்
நற்கதி அடைந்த - நீ எமை நோக்கி வாராயோ!

14A டிக்மன்ஸ் வீதி,
பம்பலப்பிட்டி. - 011 255 5108
கணவர், மக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## சட்டத்துக்கு முரணாக ஆளுநர் தீர்மானம்; விளக்கமளிக்குமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்.5

வடக்கு மாகாண ஆளுநர் சட்டத்துக்கு முரணாகத் தீர்மானம் எடுத்ததன் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனுத் தொடர்பில் உரிய காலத்துக்குள் விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி.

வடக்கு மாகாண ஆளுநர் சட்டத்துக்கு முரணான தீர்மானத்தை எடுத்துள்ளார் என வடக்கு மாகாண மேலதிகமாகாணக்கல்விப் பணிப்பாளர் எம்.ஜெகு கடந்த 2வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்தார்.

மனு நேற்று முன்தினம் மன்றில் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்குறித்த உத்தரவு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழகத்தில் பொதுக்கொள்கைகள் தொடர்பான முதுமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப் பரிசில் பெற்று வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ஜெகு சென்றார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி தலைமைச் செயலரிடம் இருந்து அனுமதி கிடைத்தது. செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி இவர் வெளிநாட்டுக்குப் பயணமானார். 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மீண்டும் நாட்டுக்கு வருமாறு ஆஸ்திரேலிய அரசின் ஊடாக ஆளுநரின் செயலாளரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணை செய்ய வேண்டும் என்றும் மேலதிக மாகாணப் பணிப்பாளர் சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்மனுதாரர்களாக வட மாகாண ஆளுநர், வட மாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாணக்கல்விப்பணிப்பாளர், வடமாகாண பிரதி தலைமைச் செயலாளர் (பயிற்சியும் ஆளணியும்) ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் வெளிவாரி வழங்கல் திணைக்களத்தில் இருந்து முறையாக அனுமதி பெறவேண்டும். அதை அவர் பெறவில்லை. அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்காகவே இவர் மீண்டும் நாட்டுக்கு அழைக்கப்பட்டார். ஆளுநருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று எதிர்மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

மாகாண அரசின் இவ்வாறான செயற்பாடுகள் இனி வரும் காலங்களில் அரச அதிகாரிகளுக்கு கிடைக்கும் புலமைப் பரிசில்களில் பாதிப்புச் செலுத்தும். பாதிக்கப்பட்ட நபர் உரிய அனுமதிகளைப் பெற்றுத்தான் வெளிநாடு சென்றுள்ளார். அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும் - என்று வழக்குத் தொடுநர் தரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி எதிர் மனுதாரர்கள் ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காக 26ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (ற - 12)

# வடக்கு மாகாண மருத்துவத் துறை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

"வடக்கு மாகாண மருத்துவத் துறையை முன்னேற்றுவதற்கு நான் பக்கபலமாக இருப்பேன். வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் காணப்படும் தாதியர் பற்றாக்குறை விரைவில் தீர்க்கப்படும்."

இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.

அமைச்சர் ராஜித வடக்கு மாகாண மருத்துவத் துறை சார்ந்தவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தார். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் வைத்தியசாலைகளில் உள்ள பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

"யாழ். மாவட்டத்தில் குறிப்பாக தீவகத்தில் நோயாளர் காவு வண்டிகள் குறைவாக உள்ளன. வேலணைப் பிரதேச வைத்தியசாலை, நயினாதீவு பிரதேச வைத்தியசாலைகளில் நோயாளர் காவு வண்டிகள் பழுதடைந்துள்ளன. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரு நோயாளர் காவு வண்டிகளே உள்ளன. மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நோயாளர்களைக் கொண்டு செல்லும்போது இங்கு பற்றாக்குறை ஏற்படுகின்றது.

மருத்துவ ஆலோசகர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கான விடுதிகள் அமைத்தல் அவசியம். யாழ். மாவட்டத்தில் 54 மருத்துவ அதிகாரிகளுக்கான வெற்றிடங்களும், 44 தாதியர்களுக்கான வெற்றிடங்களும், 9 மருந்தாளர்களுக்கான வெற்றிடங்களும், 20 சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்களும், 6 மருத்துவ ஆய்வு கூட அதிகாரிகளுக்கான வெற்றிடங்களும் உள்ளன. அவை நிரப்பப்படவேண்டும்."

என்று யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் சுட்டிக்காட்டினார்.

"கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விபத்து சேவை பிரிவு நீண்டகாலமாக இல்லை. அதிதீவர சிகிச்சைப் பிரிவில் போதியளவு மருத்துவ உபகரண வசதிகள் இல்லை. சத்திர சிகிச்சைப் பிரிவில் அதிதிறன் வாய்ந்த திரைத் தொகுதி இல்லை. வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றனர். அதனால் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகள் தீர்வுகள் எட்டப்படாதுள்ளன. எமக்கு நிரந்தரமான பணிப்பாளர் வேண்டும்." என்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் குறிப்பிட்டனர்.

"முல்லைத்தீவு வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சைப் பிரிவு தற்காலிகமான கட்டடத் தொகுதியிலேயே இயங்குகின்றது. அதற்கான நிரந்தர கட்டடத் தொகுதி எமக்கு வேண்டும். வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை உரிய வசதிகள் அற்றுள்ளது. அதைச் சீர் செய்ய வேண்டும். 15 மருத்துவ அதிகாரிகள் வெற்றிடங்கள் உள்ளன. தேவிபுரம், துணுக்காய் பகுதிகளுக்கான நோயாளர் காவு வண்டிகள் வேண்டும்" என்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

"2020ஆம் ஆண்டு ஆரோக்கியமான வடக்கு மாகணத்தை உருவாக்குவதில் எமது சுகாதார அமைச்சர் தனது பங்கைச் சிறப்பாக வழங்குகின்றார். 9 ஆயிரம் பில்லியன் ரூபாவை எமக்கு ஒதுக்கியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையைத் தரம் உயர்த்துவதற்காக வைத்தியசாலையின் சந்திர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு என்பன நவீன மயப்படுத்தப்படவுள்ளன. நெதர்லாந்து நாட்டின் நிதி உதவியில் வடக்கு மாகாணத்துக்கான இந்த மருத்துவத் துறை சார்ந்த செயற்பாடுகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படும்"-என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அனைவரின் கருத்துக்களையும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கேட்டறிந்தார்.

இரண்டு நாள் பயணமாக வடக்குக்கு வந்தேன். சுகாதாரம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறைகளில் வடக்கு மாகாணத்தை முன்னேற்ற நான் உங்களோடு இருப்பேன். மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நெதர்லாந்தில் இருந்து 9 பில்லியன் ரூபா நிதி கிடைத்தது. அதில் 500 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாணத்தின் மருத்துவம் சார்ந்த அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ளேன்.

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை மிகக் குறுகிய காலத்தில் தீர்த்து வைக்கப்படும். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தாதியர் கல்லூரிகளில் இருந்து மூன்று தாதியப் பிரிவினர் பயிற்சிகளை முடித்து வெளியேறுகின்றனர். அவர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நியமிக்கப்படுவர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை நான் எடுப்பேன். இந்த வைத்தியசாலையின் இணைப்பாக இணுவிலில் சிறுவர் மற்றும் பெண்களுக்கான விசேட வைத்தியசாலைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாணத்தின் மருத்துவம் சார்ந்த அபிவிருத்திப் பணிகள் மற்றும் பிரச்சினைகளை மாவட்டப் பணிப்பாளர்கள் மூன்று மாதத்துக்குள் சரி செய்வதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டும்"-என்று அமைச்சர் ராஜித குறிப்பிட்டார். (ற - ரி)

## சிறியோருக்கு நல்வழி காட்டுவோம்

குழந்தைகளுக்கு பெற்ற தாயே நடை பயிற்றுவிப்பதும், தாலாட்டி தூங்க வைப்பதும், உணவூட்டி செல்லப் பெயர் சூட்டி அழைப்பதும் மலையேறிப்போன காலமாகவே காணப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் தாயன்பை சுவைக்க முடியாத மழலை வளர்ந்து ஆளானதும் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் ஒப்படைத்து விட்டு விலகிக் கொள்கின்றனர். குடும்ப உறவுமுறை இடைவெளியை ஏற்படுத்தும். இந்த நிலைமாற பெற்றோர் குழந்தைகளுக்குள் இறுக்கமான நெருக்கம் பேணப்பட வேண்டும்.

சோர்ந்து போகும் குழந்தைகள் சிறுவர்களுக்குத் தாயும் தந்தையுமே ஆதாரம். தீமையின் பிடிகளிலிருந்து பிள்ளைகளை விடுவிக்கும் போராளிகள் பெற்றோர்களே. கடவுளின் மக்களாக வாழவேண்டுமென ஆலயங்கள் தோறும் திருப்பலிகள், செபமாலை, நேர்த்திகள் செய்துவிட்டு பெருமளவு நேரத்தை தொலைக்காட்சி, அலைபேசி, குடிவெறி, ஊர்வம்பு என்பவற்றில் செலவிடுகின்றோம். இந்த நிலை மாறவேண்டும். தியாகம், அர்ப்பணிப்பு, அவதானிப்பு என்பவற்றால் அவர்களின் வாழ்வை இறைபாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.



அப்போது பெற்றோர்கள் வெறும் மனிதரல்ல. தாயும் தந்தையுமான தெய்வங்கள் எனப் போற்றுவார்கள்.

பெற்றோர், பெரியோர் இந்தக் கடமைகளிலிருந்து தவறும்போது கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி கடலில் போடுங்கள் என இறைவன் கூறிய வார்த்தையை நினைவில் கொள்வோம்.

*எஸ்.யேசுதாஸ்*

### நாரந்தனை கொலைச் சம்பவம்:

## குற்றவாளிகளை இலங்கைக்கு கொண்டு வருமாறு மன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

ஊர்காவற்றுறை இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய இருவரை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்று யாழ். மேல் நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

2011ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது நாரந்தனைப் பகுதியில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இருவர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

அந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். மேல் நீதிமன்றால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நெப்போலியன் என்று அழைக்கப்படும் எஸ்.ரமேஸ், மதன் என்று அழைக்கப்படும் நடராஜா மதனராசா ஆகியோர் பிரிட்டனில் தலைமறைவாக உள்ளனர். அவர்களுக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றால் பன்னாட்டுப் பிடி விறாந்து பிறக்கப்பட்டுள்ளது.

அவர்களைப் பிரிட்டனில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவருக்கும், நீதி அமைச்சர், நீதி அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு யாழ். மேல் நீதிமன்று பணிப்புரை விடுத்திருந்தது.

குற்றவாளிகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம் என்பற்றைக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு அனுப்பினால் அவர்கள் எந்தக் காலப்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறினார்கள் என்பதை மன்றுக்குத் தெரியப்படுத்த முடியும் என்று குடி வரவு, குடியகல்வுத் திணைக்களம் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியிருந்தது. அந்த விவரங்களை அனுப்பி வைக்குமாறு நீதிமன்று பணித்தது.

குற்றவாளிகளை நாடு கடத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் மற்றும் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் ஆகியோருக்கும், பிரிட்டன் உள்விவகார அமைச்சுக்கும் தெரியப்படுத்துவதற்கான தகவல்களை அனுப்புமாறும் நீதிபதி பணித்தார். (ற - 12)

## முல்லையடி மக்களின் முன்மாதிரி: உருவாகிறது நுளம்பு அற்ற கிராமம்



யாழ்ப்பாணம், ஏப்.5

பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முல்லையடிக் கிராம மக்கள் "நுளம்புகள் அற்ற கிராமம்" என்ற செயற்றிட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தத்தமது வீடுகள், அயல் பகுதிகளைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் தமது கிராமத்தை நுளம்புகள் அற்ற கிராமமாக மாற்றும் முன்னுதாரணச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழல் உள்ளதா எனத் தத்தமது வீட்டையும், சுற்றுப்புறத்தையும் வாரம் ஒருமுறை சோதனை செய்து பதிவு செய்து, மாதம் ஒருமுறை கிராம மக்கள் ஒன்று கூடி அனைத்து வீடுகளின் பதிவுகளையும் ஆராயும் நடைமுறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்களது எண்ணக்கருவில் உருவான இந்தச் செயற்றிட்டத்துக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், பரிசோதனை அட்டைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றுக்குத் தேவையான அனுசரணையைக் கிளிநொச்சி றோட்டறிக் கழகமும் வழங்குகின்றன.

செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பச்சிலைப் பள்ளி அபிவிருத்தி மையத்தில் இடம்பெற்றது. (ற - 5)

# சரத் பொன்சேகாவுக்கு ஐ.தே.கவில் முக்கிய பதவி?

கொழும்பு, ஏப்.5
கிரிபத்கொடவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில், கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு இணையாக, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








பேரணியைப் பார்வையிடும் மேடையில், ஐ.தே.கவின் ஏனைய தலைவர்களுடன், ரணில் விக்கிரமசிங்கவும், சரத் பொன்சேகாவும் அருகருகே அமர்ந்திருந்தனர்.
மேடையில் கட்டப்பட்டிருந்த பதாகையின் ஒரு பக்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் படமும், மற்றொரு பக்கத்தில் சரத் பொன்சேகாவின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது.
அத்துடன், பேரணி நடத்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த பதாகைகளிலும், இவர்கள் இருவரின் படங்களே பொறிக்கப்பட்டிருந்தன.
போரை வெற்றி கொண்ட பின்னர், அலரி மாளிகையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்டோரின் முன்னிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேக் வெட்டி கொண்டாடுவதைக் காட்டும் படமும் அந்தப் பதாகைகளில் இடம்பெற்றிருந்தன.
ஐ.தே.கவில் பெரிய மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், சரத் பொன்சேகாவுக்கு கட்சியின் உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.
நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணியில் சரத் பொன்சேகாவுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததானது, அவருக்கு முக்கிய பதவியை வழங்க ஐ.தே கட்சித் தலைமை முடிவு செய்திருப்பதையே வெளிப்படுத்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## களுத்துறை சிறைப்பேருந்து மீது சூடு; வெலிக்கடைச் சிறையில் விசாரணை

கொழும்பு,ஏப்.5
களுத்துறைசிறைச்சாலைப் பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக, சிறைச்சாலைகள் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசாரணைக்குழு கடந்த மாதம் 28ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர்.
துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட சமயங் உட்பட்ட குழுவினர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படுவதற்கு முன்பு தங்கியிருந்த வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த விசாரணைக் குழுவினர், அங்கிருந்த கைதிகளிடம் விசாரணை நடத்தினர்.
சிறைச்சாலைகள் பணிப்பாளர் நாயகம், வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள், காவலர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரிடமும் அவர்கள் வாக்குமூலங்கங்களைப் பதிவுசெய்தனர்.
அத்துடன், துப்பாக்கிப் பிரயோகம்நடந்த இடத்தில்தீவிர பரிசோதனைகளை மேற்கொண்ட விசாரணைக்குழுவினர், களுத்துறை சிறைக்கைதிகள் உள்ளடங்கலாக இதுவரை 50 பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருப்பதாகச்சிறைச்சாலைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.
விசாரணைக்குழுவில் முன்னாள் நீதிவான் ரூம் மர்சூக், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ். மெதவல ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ஐ)

## ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக் குழுவின் பதவிக்காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு அரச தலைவர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.
கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு, மூன்று மாதங்களுக்குள் தனது விசாரணை அறிக்கையை அரசதலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும், விசாரணைகள் இன்னும் நடந்து வருவதால் அதன் பதவிக்காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு அரச தலைவர் தீர்மானித்திருப்பதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மாலி செல்லும் ராணுவத்தின் கள ஒத்திகை நிறைவு



கொழும்பு, ஏப். 5
மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்காகச் செல்லவுள்ள இலங்கை இராணுவத்தினர், காங்கேசன்துறையில் ஆரம்பித்த பெரியகளப்பயிற்சி ஒத்திகை சூரியவெவவில் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
மாலியில் ஐ.நா. அமைதிப்படையின் வாகனத் தொடரணிக்கான பாதுகாப்பில் ஈடுபடவுள்ள இலங்கை இராணுவ அணி, கடந்த மார்ச் 21 ஆம் திகதி காங்கேசன்துறையில் களப்பயிற்சியை ஆரம்பித்தது. 9 நாள்கள் களப்பயிற்சி ஆயிரம் கி.மீ. தூரப் பயணத்தின் பின்னர் நேற்று முன்தினம் மாலை அம்பாந்தோட்டை சூரியவெவ வில் நிறைவடைந்தது.
வெள்ளை நிறம்பூசப்பட்ட, நீலக் கொடி பறக்கவிடப்பட்ட நிலையில், ஐ.நாவின் வாகன அணியைப் பிரதிபலிக்கும் வகையில், விநியோக வாகனங்கள், கவச வாகனங்களை உள்ளடக்கியதாக பெரிய இராணுவ வாகனத் தொடரணி இதன் போது இடம்பெற்றிருந்தது.
9 நாள் களப்பயிற்சியில் இராணுவ வாகனத் தொடரணிகள் மாலியில் எதிர்கொள்ளும் பாதுகாப்பு நெருக்கடிகள் தொடர்பான பயிற்சிகளும் அளிக்கப்பட்டிருந்தன. அடுத்த மாதம் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 200 படையினர் மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்காக அனுப்பப்படவுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (ஐ-10)

## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

பெறுகைகளுக்கான அழைப்பு

**அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி மற்றும் சான்றுபெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் - அச்சுவேலி என்பவற்றிற்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் - 2017/2018**

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/EB-06/Food/2017-01 | அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம், கைதடி | 50,000 |
| 02. | NP/30/02/EB-06/Food/2017-02 | சான்று பெற்ற பாடசாலையும் தடுப்புகாவல் இல்லமும் அச்சுவேலி | 50,000 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்துக்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பெறப்பட்டு பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாத முறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ஒவ்வொன்றுக்கும் **ரூபா.1,000/=** இனை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **06.04.2017** தொடக்கம் **20.04.2017** வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **19.04.2017** காலை **10.00** மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் **25.04.2016** ஆம் திகதி **14.00** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் பிற்பகல் **14.30** மணியளவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321)
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா.**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பேசி -021 205 7102 தொலைநகல் - 021 205 7103**

## கோக் றிக்கர் கப்பல் இலங்கை வந்தடைந்து

கொழும்பு, ஏப். 5
உலகின் மிகப்பெரிய மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கப்பலான "கோக் றிக்கர்" அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

நோர்வே, ஒஸ்லோவைச் சேர்ந்த கோக் ஓட்டோ லைனர்ஸ் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த கப்பல் கடந்த மார்ச் மாதம் 31ஆம்திகதிஅம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது. 14 தட்டுகளைக் கொண்ட இந்தக் கப்பல் ஒரு தடவையில் 8 ஆயிரத்து 500 மோட்டார் வாகனங்களைக் காவிச் செல்லும் திறனைக் கொண்டதாகும். இலங்கைக் கப்பல் வரலாற்றில் மற்றுமொரு முக்கிய மைல் கல்லை எட்டும் வகையில் இது அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## ஓய்வு பெற்ற பின்னர் பேருந்தில் வீடு சென்றார் மாவட்டச் செயலர்

கொழும்பு, ஏப். 5
மாத்தளை மாவட்டச் செயலர் குமாரசிறி பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், தனது அதிகாரபூர்வ வாகனத்தை அதிகாரிகளிடம் கையளித்து விட்டு, பேருந்தில் ஏறி வீட்டுக்குச் சென்ற சம்பவம் அரச அதிகாரிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

33 ஆண்டுகள் அரச சேவையில் பணியாற்றிய குமாரசிறி, நேற்று முன்தினம் மாத்தளை மாவட்டச் செயலர் பதவியில் இருந்து ஐந்து மாதங்கள் முற்கூட்டியே ஓய்வு பெற்றார்.

நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்துக்கு வந்த அவர், உரிய ஆவணங்கள் மற்றும் வாகனங்களை முறைப்படி அதிகாரிகளிடம் கையளித்து விட்டு, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

அதிகாரபூர்வ வாகனத்தையும் அதிகாரிகளிடம் ஒப்படைத்த அவர், பேருந்தில் ஏறி வீட்டுக்குச் சென்றார். இது அரச அதிகாரிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவர் மாத்தளை மாவட்டச் செயலராகப் பணியாற்ற முன்னர், அனுராதபுர மற்றும் நுவரெலிய மாவட்டங்களின் செயலராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# அன்று திருடிய சிலரும் இன்று அரசியலில்

## அர்ஜுன ரணதுங்க சாடல்



கொழும்பு, ஏப். 5
அன்றுதுறைமுகங்களில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சிலர், இன்று அரசியலில் இருக்கின்றனர். அவர்களால் துறைமுகங்களுக்குப் பெரும் நட்டமும் ஏற்பட்டது. துறைமுகங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது. அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரால் மாத்திரம் இயலாது. நாம் அனைவரும்இதற்குஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர் தமீர மஞ்சுவினால் எழுதப்பட்டு தயாரிக்கப்பட்ட ரெஜிமயக்க ரிதும் (ஓர் ஆட்சி காலத்தின் பாடல்கள்) பாடல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இரவு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கும் பொருட்டு செயலாளர்கள் குழுவால், முன்வைக்கப்பட்ட முதற்கட்ட ஒப்பந்தத்தில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. நாம் ஏற்படுத்திய இந்த மாற்றமே நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். கடந்த ஆட்சியை மாற்றியமைக்க வேண்டுமெனக் கூறியவர்கள் என்ற வகையில் நாமும் பல தாக்குதல்களுக்கு முகங் கொடுத்துள்ளோம். நாடென்ற வகையில் இதனை எம்முடைய பொதுமக்கள் மறந்து விட்டார்கள். இந்த இன்னல்களால் பாதிப்புற்ற ஒரு சிலருக்கு மாத்திரமே இந்த விடயம் தொடர்பாக நினைவிருக்கும். நாம் இன்று அமைச்சரவைக்குச் சென்றவுடன், அரசதலைவரோ அல்லது தலைமை அமைச்சரோ முன்வைக் கும் அமைச்சரவைப் பத்திரங்களை விமர்சிக்கும் உரிமை எமக்குள்ளது. அதன் பொருட்டு ஜனநாயக உரிமைகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

நான் முதன் முறையாக அநுர பண்டாரநாயக்கவின் அமைச்சிலேயே பிரதி அமைச்சராக செயற்பட்டேன். சந்திரிகாவின் காலத்தில் நான் ஒரு சில தடவைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு எமக்கு நல்ல வரவேற்பிருந்தது. இந்த நிலையானது 2005ஆம் ஆண்டில் மாற்றங்கண்டது. இந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் எவருக்கும் விமர்சனங்களை முன்வைப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. விமர்சனங்களை முன்வைக்க முன்வரும் பொழுது அதனைத் தடுப்பதற்கு வேறு குழுக்கள் இருந்தன. தற்போதைய அரசின் கீழ் இன்று பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று எம்மால் கருத்துக்களை வெளியிடலாம். நாட்டில் அழிவொன்று ஏற்படுமாயின் அதனைத் தடுத்து நிறுத்தலாம்.என்றார்.

இந்த நிகழ்வில் ராஜபக்ச ஆட்சி காலத்தில் மக்கள் எதிர்க்கொண்ட பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாடல்கள், ரெஜிமயக்க ரிதும் (ஓர் ஆட்சி காலத்தின் பாடல்கள்) இசைக்கப்பட்டன. வெள்ளை வான் கலாசாரம், மரங்களில் கட்டும் வன்முறைகள், அம்பாந்தோட்டை அழிப்பு , ஊழல்மோசடிகள் ஆகியன இந்தப் பாடல்களை எழுதுவதற்கு தூண்டிய அனுபவங்களாகும். (ஐ-10)

## பிரசன்ன ரணதுங்கவின் வரி விவரம் ஆராய்வு

கொழும்பு, ஏப். 5
நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க வருமான வரி செலுத்தியதற்கான விவரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க வருமான வரி செலுத்திய விவரங்களை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு குறித்த அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது.

"கடந்த பல வருடங்களாக நான் உரிய முறையில் வருமான வரியைச் செலுத்தி வருகின்றேன். உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் இவ்வாறான அறிவித்தலை எதற்காக கையளித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. எனினும் அவர்களின் கோரிக்கைப் பிரகாரம், எனது வருமான வரி செலுத்தல் விவரங்களை வருமான வரித் திணைக்களத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பேன்" என்று பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ஐ-10)

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நிஜமாக 29 . 09 . 1941



நிழலாக 15 . 03 . 2008

அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)


(விநாயகர் ஸ்ரோர்ஸ், முன்னாள் பங்குதாரர் - குகன் ஸ்ரோர்ஸ், குகன் எரிபொருள் நிலையம், மீனாட்சி அரிசி ஆலை)

இதயத்தை ஆண்ட இதய தெய்வமே!!!
நினைத்தாலே நிறைவாய் உங்கள் நினைவுகள்!!!
சிலிர்த்திடும் காயங்கள் நிஜமாய் பூமியில்
சொர்க்கம் காட்டிய தூய மனிதனே!!!

"மணியம் வாசம்"
144/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.

## கொழும்பு நிதி நகரத் திட்டத்தால் இலங்கை வரைபடத்தில் மாற்றம்



கொழும்பு, ஏப். 5
கொழும்பு துறைமுக நகரம் அல்லது நிதி நகரத்தை அமைக்கும் பணிகளால் இலங்கைத் தீவின் வரைபடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

தற்போது துறைமுக நகரப் பணிகள் நடந்து வரும் நிலையில், கொழும்பில் காலிமுகத்திடலை ஒட்டியதாக, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு, இலங்கைத் தீவின் வரைபடத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இதனால் இலங்கைத் தீவின் புதிய வரைபடத்தை வரையும் பணியில், நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். துறைமுக நகரத் திட்டம் நிறைவடைந்த பின்னரே, இலங்கைத்தீவின் இறுதி வரைபடம் வெளியிடப்படும். (ஐ-10)

## தபால் நிலையங்களை இயங்கவைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.5
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் இயங்காதிருந்த தபால் நிலையங்கள், உப தபால் நிலையங்களை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன என்று தபால்துறை அமைச்சர் எம். எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.
அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
போரால் செயலிழந்த தபால் நிலையங்கள் மீள செயற்படுத்தப்படவுள்ளன. மீள்குடியமர்வு நடைபெற்ற பகுதிகளின் நலனைக் கருத்தில் கொண்டு புதிய தபால் நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது." என்றுள்ளது. (ற-5)

### விவசாயக் கிணறுகளில் வீழ்ந்து

# கால்நடைகள் இறப்பதை தடுக்கத் துரித நடவடிக்கை

### தரவுகளை வழங்க வேண்டும் என்று கிளி. மாவட்ட செயலாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.5
விவசாயத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட கிணறுகளால் கால்நடைகள் உயிரிழப்பதை அனுமதிக்க முடியாது. கால்நடைகளுக்கு ஆபத்தானவை என்று இனங்காணப்படும் கிணறுகள் தொடர்பாகத் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம்.
கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் வறட்சியில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க 60 கிணறுகள் அண்மையில் அமைக்கப்பட்டன. பாதுகாப்பற்ற அந்தக் கிணறுகளில் வீழ்ந்து கால்நடைகள் இறப்பது அதிகரித்துள்ளது என்று கால்நடை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதுவரை 10க்கும் மேற்பட்ட கால்நடைகள் இவ்வாறு உயிரிழந்துள்ளன. தமக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டே அவசர அவசரமாகக் கிணறுகள் அமைக்கப்பட்டன. அவை மற்றையோரின் வாழ்வாதாரத்தை அழிப்பனவாக இருக்கக்கூடாது. கால்நடைகள் உயிரிழப்பதைத் தடுக்கும் கடப்பாடு உண்டு. இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்படும். ஆபத்தான கிணறுகள் என்று இனங்காண்பவற்றின் விவரங்களை கால்நடை உரிமையாளர்கள் வழங்க வேண்டும். கிடைக்கும் தரவுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளக் கூடிய மாற்று ஏற்பாடுகள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடை உரிமையாளர்கள் இவை தொடர்பான தகவல்களை இன்றே சமர்ப்பிக்கலாம். - என்றார். (ற-101)

## சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி சிறுபோகம் செய்யக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.5
கிளிநொச்சி, அக்கராயன் குளத்து நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை தொடர்பான கலந்துரையாடல் நேற்று அக்கராயன் நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியில் நடைபெற்றது.
குளத்தில் தற்போதுள்ள நீரின் அளவைக்கொண்டு ஆயிரத்து 186.5 ஏக்கர் பரப்பில் சிறுபோகச் செய்கை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. முதலாவது நீர் விநியோகத் தினமாக எதிர்வரும் முதலாம் திகதியும், இறுதி விதைப்புத் திகதியாக எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதியும் தீர்மானிக்கப்பட்டது.
கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நீர்ப்பாசனப் பொறியியலாளர்களான என். சுதாகரன், செந்தூரன் ஆகியோரும், மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர், விதைகள் திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ய)



## காணாமல்போன கிணறு மீள மக்கள் பாவனைக்கு

வவுனியா, ஏப்.5
வவுனியாவில் காணாமற் போயிருந்த கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக் கையளிக்கப்பட்டுள்ளது என்று நகர சபைச் செயலாளர் ஆர். தயாபரன் தெரிவித்தார்.
வவுனியா மையப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த குழாய்க் கிணறு அந்தப் பகுதியில் கொப்பேக்கடுவ சிலை அமைக்கப்பட்ட பின்னர் காணாமல்போனது. சமூக ஆர்வலர்கள் இந்த விடயத்தை நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். நகர சபைச் செயலாளர் அந்தப் பகுதியில் முன்னர் கிணறு இருந்ததை உறுதிப்படுத்தினார்.
அதையடுத்து அந்தப் பகுதியில் குழாய் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

### நாயாற்றில் தொழில் செய்யும்

## உள்ளூர் பாமர மீனவரை வஞ்சிக்கின்றது பொலிஸ்

### தனிநபருக்குச் சார்பாக செயற்படுகிறது என்று சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஏப்.5
முல்லைத்தீவு, நாயாற்றில் உள்ளூர் மீனவர்கள் தமது படகுத் துறையில் அமைத்த கொட்டகையை அகற்ற வேண்டும் என்று பொலிஸார் அச்சுறுத்துகின்றனர். இது கண்டிக்கத்தக்கது.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சாந்தி சிறிஸ்கந்தராஜா.
அவர் தெரிவித்ததாவது:
நாயாறுப் பிரதேசத்தில் உள்ள சங்கத்தில் பதிவுள்ள திணைக்கள அனுமதி பெற்ற உள்ளூர் மீனவர்கள் தமது படகுத்துறைப் பகுதியில் வலைகளைப்ப பாதுகாக்க 20 அடிக் கொட்டகை அமைத்தனர். அதை உடனடியாக அகற்ற வேண்டும் என்று பொலிஸார் அச்சுறுத்துகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டதைச் சேராத தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர், மாவட்டத் திணைக்களங்களுக்கோ அல்லது சங்கங்களுக்கோ தெரியாது 67 படகுகளை வைத்துத் தொழில் செய்கின்றார். சட்டவிரோதமாகத் தொழில் செய்யும் அவரைப் பாதுகாக்கும் நோக்கிலேயே பொலிஸார் இவ்வாறு செயற்படுகின்றனர்.
பக்கச்சார்பாகச் செயற்படும் பொலிஸாரின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. கடற்கரையில் அரச நிலத்தில் வாடி அமைக்கப்பட்டிருந்தால் பிரதேச செயலருக்கும் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். தனியார் நிலத்தில் அமைக்கப்பட்டிருந்தால் உரிமையாளர் சட்ட நடவடிக்கையும் எடுத்திருக்க வேண்டும். இவை எதுவுமில்லாது பொலிஸார் நேரடியாகத் தலையிடுவது அவர்கள் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றனர் என்பதையே காட்டுகின்றது.
67 படகுகளை வைத்துத் தொழில் செய்யும் தனிநபர் ஒருவருக்குச் சார்பாகச் செயற்பட்டு, ஒரு படகில் தொழில் செய்யும் பாமரத் தொழிலாளியை வஞ்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொலிஸார் இவ்வாறு பக்கச் சார்பாகப் பல தடவைகள் செயற்பட்டுள்ளனர். அதனால் இந்த விடயம் தொடர்பில் எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படுகின்றது - என்றார். (ற-101)

## பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள்

கொழும்பு, ஏப்.5
வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் முன்னெடுப்புக்கள் "மனதை ஆற்றுப்படுத்தல் மூலம் மதிப்புக்குரிய வாழ்வு" என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி இந்தத்திட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது.
வறுமைக் கோட்டிக் கீழ் வாழ்கின்ற போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், ஊனமுற்ற கணவரைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், இடம்பெயர்ந்த பெண் தலைமைத்துவக் குடுமப்ங்கள், தாயகம் திரும்பும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும்.
விவசாய உபகரணங்கள், கடற்றொழில் சார்ந்த உதவித் திட்டங்கள், சுயதொழில் உதவித் திட்டங்கள், கைவினை கைப்பணி சார்ந்த உதவித் திட்டங்கள், கால்நடை மற்றும் கோழிவளர்ப்பு, சிறுதொழில் முயற்சிகள், விவசாய நடவடிக்கைகள் போன்றவை இவற்றுக்குள் அடங்கும்.
முதற்கட்டமாக 132 குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ளனர். எதிர்காலத்தில் பல குடும்பங்கள் இணைக்கப்படும். என்றுள்ளது (ற-10)

## கர்ப்பிணிப் பெண் தாக்கப்பட்ட விவகாரம்; மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

### யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5
வடமராட்சி கிழக்கில் கர்ப்பிணிப் பெண் பொலிஸாரால் காலால் உதைக்கப்பட்டார் என்பதற்கான மருத்துவச் சான்றிதழ் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.
இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார்.
யாழ். குடாநாட்டின் சிவில் நிலைமை தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்றது.
அதில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவ் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வெளிநாட்டில் இருந்து வருபவர்களிடம் கப்பம் கேட்கும் செயற்பாடு அந்தப் பகுதியில் நடக்கின்றது என்று தகவல்கள் கிடைத்தன. அண்மையில் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் இது தொடர்பாக முறையிட்டார்.
சந்தேக நபர்களை இனங்காட்ட முடியும் என்றும் தெரிவித்தார்.
"முறைப்பாட்டாளரை அழைத்துச் சென்று அவர் அடையாளம் காட்டியோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தப் பகுதிப் பெண்கள் சந்தேக
நபரைக் கைது செய்ய விடாது தடுத்தனர். பொலிஸாரின் வாகனம் மீது கற்களால் தாக்கினர். அந்தப் பகுதியில் இது வழமையாக உள்ளது. சந்தேகநபர்களைக் கைது செய்யச்சென்றால் பெண்கள் தடுக்கின்றனர்.
தாக்குதலுக்குள்ளானார் என்று கூறும் பெண் மறுநாள் முறையிட்டுள்ளார். வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளார். அந்தப் பெண் தொடர்பான மருத்துவ அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை - என்றார்.
அந்தப் பகுதியில் பெண்கள் தொடர்ந்தும் இடையூறு ஏற்படுத்துகின்றனர் எனில் ஏன் பெண் பொலிஸாரை அழைத்துச் செல்லவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டது.
கைது நடவடிக்கைகளுக்குப் பெண் பொலிஸாரை அழைத்துச்செல்வதில்லை. கைதுசெய்யப்பட வேண்டியவர் பெண் என்றால் மட்டுமே பெண் பொலிஸார் அழைத்துச் செல்லப்படுவர். அல்லது சோதனை நடவடிக்கைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவர்." என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ற-101)

## கோஷ்டி மோதலில் 6 பேர் படுகாயம்

வவுனியா ஆச்சிபுரத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தகராறு காரணமாக இரு பெண்கள் உட்பட 6 பேர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
ஆச்சிபுரம் பகுதியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறு தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இரு தரப்பினரும் கலந்து பேச இணங்கியிருந்தனர். நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினரின் பகுதிக்குச் சென்று பேச்சில் ஈடுபட்டனர். அதில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இரு தரப்பினரும் பரஸ்பரம் வாள்வெட்டில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வவுனியா வைத்தியசாலைக்குள் தாக்குதல் நடத்த வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்." என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

## தேசிய மீலாத் விழா யாழ்ப்பாணத்தில்


யாழ்ப்பாணம், ஏப்.5
தேசிய மீலாத் விழா இந்த முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது என்று அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கி இந்த தேசிய விழா நடத்தப்படவுள்ளது. இங்குள்ள பள்ளிவாசல்களின் விவரங்களைத் திரட்டும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (ற- 5)



## கொலம்பிய நிலச்சரிவு இடரில் உய

போகோட்டா, ஏப். 5
கொலம்பியாவில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்காலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவாலும் சாவடைந்தோரின் எண்ணிக்கை 270 ஆக உயர்ந்தது.
தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் உள்ள புட்டுமயோ மாகாணத்தில் பெய்த கனமழை காரணமாக அப்பகுதியில் உள்ள ஆறுகளில்

## அட! இப்படிக்கூட வரைய முடியுமா!




நைஜர், ஏப். 5
நைஜீரியாவைச் சேர்ந்த அரின்ஸ் ஸ்டான்லி என்பவர் மனித முகங்களை துல்லியத் தன்மையுடன் வரைவதில் மிகச் சிறந்தவராகத் திகழ்கிறார். பென்சில் மூலம் இவர் வரையக்கூடிய மனிதத் தலைகளைக் கண்டு ஆச்சரியத்தில் உறைந்து போகாதவர்களே இல்லை என்று நைஜீரிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.
அரின்ஸின் குடும்பம் காகித நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தது. சின்ன வயதிலிருந்து காகிதங்களுடன் பழகியவர், ஒருகட்டத்தில் பொழுது போக்குவதற்காக வரைய ஆரம்பித்தார். 2012ஆம் ஆண்டுதான் இவருடைய ஓவியங்கள் தத்ரூப ஓவியங்களாக மாற்றமடைந்தன. அன்றுமுதல் கூடுதல் உழைப்பைச் செலவிட்டார். தன்னுடைய ஓவியத் திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டார். கடந்த ஆண்டு தொழில்முறை ஓவியராக மாறினார். இதுவரை முறையாக ஓவியங்களை வரைவதற்கு எவரிடமும் இவர் கற்றுக் கொண்டதில்லை!
"பயிற்சி, பொறுமை, விடாமுயற்சி இந்த மூன்றைத்தான் என்னுடைய மந்திரமாக வைத்திருக்கிறேன். இவற்றால்தான் என்னால் மேலும் மேலும் சிறந்த படைப்புகளை உருவாக்க முடிகிறது. ஓவியத்தை முடிப்பதற்கு 200 மணி நேரங்களை எடுத்துக் கொள்கிறேன். பகலில் நான் வேலைக்குச் சென்றுவிடுவதால் இரவில் மட்டுமே வரைய முடியும். எவ்வளவு நேரம் ஆகிறது என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எவ்வளவு நன்றாக வரைய முடியும் என்பதில்தான் கவனமாக இருப்பேன். என்னைச் சுற்றியிருக்கும் அத்தனை விடயங்களையும் உன்னிப்பாகக் கவனிப்பேன். நான் வரையக்கூடிய முகங்களை விதவிதமாக ஒளிப்படங்கள் எடுத்துக்கொள்வேன். எல்லாவற்றையும் ஆராய்ந்து, அறிந்து கொண்ட பிறகே ஓவியம் தீட்ட ஆரம்பிப்பேன்" என்கிறார் அரின்ஸ். புகைப்படத்தைப் பார்த்து வரையும்போது ஒருவரின் தலைமுடி எவ்வளவு அடர்த்தியாக இருக்கிறது, எவ்வளவு நீளமாக இருக்கிறது, எந்த வகையான முடி என்றெல்லாம் ஆராய்கிறாராம் அரின்ஸ். (ம)

# இலக்குத் தவறிய தாக்குதல் 28 பொதுமக்கள் உயிரிழப்பு

## சிரியாவில் அவலம்



டமஸ்கஸ், ஏப். 5
சிரியாவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவைக் குறிவைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதல்கள் இலக்குத் தவறியதை அடுத்து 28 பொதுமக்கள் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரிய அரசு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு என்று இருமுனைப் போரில் சிக்கித் தவிக்கிறது. ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் அமெரிக்காவும், கிளர்ச்சிக் குழுவுக்கு எதிரான போரில் ரஷ்யாவும் பக்கபலமாக உள்ளன. டோவுமா, சாப்குவா ஆகிய பகுதிகளில் அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சிக் குழுவை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்து 28 பொதுமக்கள் சாவடைந்தனர் என்று சிரியாவில் உள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது. இந்தப் போரில் இதுவரை 3 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் சாவடைந்தனர். 10 லட்சம் மக்கள் அகதிகளாக உள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைய அறிக்கையொன்று சுட்டிநிற்கிறது. (ம)



பராகுவே நாட்டில் முயல்களுக்கான ஓட்டப்பந்தயம், தடைதாண்டல் ஆகிய போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. நூற்றுக்கணக்கான முயல்கள் போட்டியில் கலந்துகொண்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் போட்டிகளை நேரில்சென்று பார்வையிட்டனர். (ம)

## நடுங்கியது போட்ஸ்வானா

கபரோன், ஏப். 5
தென்னாபிரிக்க நாடுகளில் ஒன்றான போட்ஸ்வானாவில் நேற்றுமுன்தினம் பயங்கர நில அதிர்வு ஏற்பட்டது என்று பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன.
போட்ஸ்வாம்னா நாட்டின் தலைநகரான கபரோனில் இருந்து வடமேற்கே சுமார் 238 கிலோமீற்றர் தூரத்தில், ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுக்கோலில் 6.5 ஆக பதிவானது என்று அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்தது. கிட்டத்தட்ட 30 செக்கன்கள் நீடித்த இந்த நிலநடுக்கத்தின் பாதிப்பு அயல்நாடுகளான சிம்பாப்வே, ஸ்வாசிலாந்து உள்ளிட்ட நாடுகளில் உணரப்பட்டது. எனினும் சுனாமி எச்ச ரிக்கை எதுவும் விடுக்கப்பட வில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## மியன்மாரில் தீ விபத்து; 15 பேர் உயிரிழப்பு



நைபிடா, ஏப். 5
மியன்மார் நாட்டின் மாக்வே நகரில் உள்ள இசைக்கூடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து 15 பேர் உடல்கருகிச் சாவடைந்தனர். அவர்களில் நான்கு பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.
இசைக் கருவிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்சாதனங்களில் இருந்து ஏற்பட்ட மின்கசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. விபத்து குறித்து தகவலறிந்து வந்த மீட்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்து சாவடைந்தவர்களின் சடலங்களைப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.
விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் அந்தக் கட்டடத்தின் உரிமையாளரைக் கைது செய்தனர். போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாததாலேயே தீ விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# ிரிழந்தோர் 270 ஆக உயர்வு

வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனால், ஆற்றங்கரைகளின் ஓரமுள்ள கிராமப் புறங்களில் கடந்த சனிக்கிழமை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 254 பேர் சாவடைந்தனர் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணிகள் தொடர்ந்த காரணத்தால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. மேலும் 16 சடலங்கள் கண்டெடுப்பட்டதைத் தொடர்ந்து சாவு எண்ணிக்கை 270 ஆக உயர்ந்தது.

100 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். மீட்புப் பணிகள் தொடர்கின்றன. இதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று புட்டுமயோ மாகாண வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ம)



# வீதி வீதியாகச் சென்று தி.மு.க. பரப்புரை

சென்னை, ஏப். 5

ஆர்.கே. நகரில் வெற்றிபெறுவதற்காக தி.மு.கழகத்தின் செயல்தலைவர் ஸ்டாலினும் அந்தக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் வீதிவீதியாகச் சென்று பரப்புரை செய்கின்றனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவடையடுத்து அவர் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.கே. நகரில் எதிர்வரும் 12ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

தி.மு.கழகத்தின் சார்பில் மருதுகணேஸ் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எம்.ஜி.ஆர். - அம்மா - தீபா பேரவையில் இருந்து தீபாவும், ஓ.பி.எஸ். தரப்பில் இருந்து மதுசூதனனும், சசிகலாவின் தரப்பில் இருந்து தினகரனும் களத்தில் உள்ளனர். ஒவ்வொருவரும் கடும் பரப்புரைகளில் ஈடுபட்டு வரும்நிலையில் தி.மு.கழகம் வீதிவீதியாகச் சென்று தற்போது பரப்புரை செய்ய ஆரம்பித்துள்ளது.

ஜெயலலிதாவின் கோட்டை என்று ஆர்.கே. நகரம் முன்பெல்லாம் வர்ணிக்கப்பட்டது. அந்த அளவுக்கு அங்கு அ.தி.மு. கழகம் வேரூன்றியிருந்தது. ஜெயலலிதாவின் சாவை அடுத்து கட்சி மூன்றாக உடைந்துள்ளதால் தி.மு.கழகத்துக்கு அங்கு தற்போது பேராதரவு உள்ளது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)



# பீற்றர்ஸ்பேர்க் குண்டுவெடிப்பு தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பம்

*அதிபர் புடின் அறிவிப்பு*

மொஸ்கோ, ஏப். 5

ரஷ்யாவின் செயின்ட் பீற்றர்ஸ்பேர்க் நகரில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

செயின்ட் பீற்றர்ஸ்பேர்க் நகரின் மையத்திலுள்ள சென்னாயா பிலோசாட் ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் 10 பேர் சாவடைந்தனர். கிட்டத்தட்ட 50 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிட்டப்பட்டது.

சாவடைந்தவர்களுக்கு ரயில் நிலையத்தில் மலர்கள் வைத்தும், மெழுகுவர்த்திகள் ஏற்றியும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

ரயில் நிலையத்துக்கு வந்து அஞ்சலி செலுத்திய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே புடின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்ற தகவலைத் தெரிவித்தார். (ம)


## வடமராட்சி மக்களின் நலன் கருதி

## P.P.T Express இன் மகத்தான சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் முன்னணி வகிக்கும் P.P.T எக்ஸ்பிரஸ் நிறுவனம் புத்தம் புதிய அதி சொகுசு பஸ்களை (விமானத்தில் இருப்பது போன்றது) சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்பு மக்களுக்காக அதி உன்னத சேவை நடாத்தும் P.P.T நிறுவனம் பிரயாணிகளின்நலன் கருதி தனது சேவையை மேம்படுத்தியுள்ளது.

யாழ் - கொழும்பு
கொழும்பு - யாழ்
12 மணித்தியால
பொதிகள் சேவை

முதலாவது பேருந்து: யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8.00 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இரண்டாவது பேருந்து: பருத்தித்துறையிலிருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு கொழும்பை நோக்கிப் புறப்படும்.

அதேபோல் - முதலாவது பேருந்து வெள்ளவத்தையில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை வீதி வழியாக காங்கேசன்துறையைச் சென்றடையும்.

இரண்டாவது பேருந்து - வெள்ளவத்தையில் இருந்து இரவு 9.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறையை சென்றடையும்.



ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்: 0775731318
183,கே.கே.எஸ் வீதி, 021 492 3240

பருத்தித்துறை: 0775736003
அரசடி லேன் பருத்தித்துறை, 021 492 3724

கொழும்பு: 0775755175
182,சென்றல் றோட், கொழும்பு -12
0112 320336

வெள்ளவத்தை: 0766036204
296, A1, காலி வீதி, கொழும்பு -06
0112364999

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# புலிகளுக்கு ஒரு நீதி படைகளுக்கு தனி நீதியா?

போர்க்குற்ற விசாரணை நடக்காது என்று நேற்றுத்தான் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அதனை மேலும் உறுதிப்படுத்துவது போன்று, போர்க்குற்றமே நடக்கவில்லை, பிறகெதற்கு அது பற்றிய விசாரணை என்று எடுத்தெறிந்து பேசியிருக்கிறார் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தின. அதுவும் யாழ்ப்பாணத்தில் நின்று கொண்டே அவர் இதனைக் கூறினார்.

அதுமட்டுமல்ல, போர்க் குற்றங்களுக்காக விடுதலைப் புலிகள் தரப்பில் யாரை விசாரிப்பது, தலைவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? தயா மாஸ்ரர் போன்றவர்களைத்தான் விசாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர் மட்டுமல்ல அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் இது போன்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். போர்க்குற்ற விசாரணை பன்னாட்டு மட்டத்தில்தான் நடைபெறவேண்டும் என்றுதமிழர்கள்வலியுறுத்தினால், தடுப்புக்காவலில்வைக்கப்பட்டுவிடுவிக்கப்பட்ட 12ஆயிரம் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களையும்மீண்டும்கைது செய்துவிசாரிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர்கள் ராஜித, சம்பிக்க இவர்களின் கருத்துக்களில் தொனிப்பதெல்லாம் தமிழர்களாகிய நீங்களும் தவறு செய்திருக்கிறீர்கள், எனவே எமது தவறைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டும், அப்படியில்லையேல் உங்கள்தவறுகளையும் நாம் தூக்கிப் பிடிப்போம் என்பதுதான்.

தவறுக்குத் தவறு சரியாகப்போய்விட்டது என்று இந்த விடயத்தைத்தமிழர்கள்தாண்டிச்சென்றுவிட வேண்டும்என்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். போரின்போது பொதுமக்கள்கொல்லப்பட்டார்கள் என்பதற்காக படையினர் மீது சாதாரண சட்டங்களின் கீழ்கூட வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லையாயினும், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் மீது பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றங்களில் அவை விசாரிக்கப்பட்டுள்ளன. சிலவற்றின் விசாரணைகள் தொடர்கின்றன. பல வழக்குகளில் விடுதலைப்புலிகள்இயக்கஉறுப்பினர்களுக்கு வருடக்கணக்கான சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

போர்இலக்குகள்மீதும், போர்க்களத்துக்கு வெளியேபொது மக்கள் இலக்குகள் அல்லது அரச சொத்துக்கள் மீதும் தாக்குதல்நடத்தினார்கள்என்று குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்துப் புலி உறுப்பினர்கள் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதுபோன்று படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை.

இன்னும்அரசியல்கைதிகளாகச்சிறையில்அடைபட்டுள்ள தமிழர்களில் அனேகமாக எல்லோருமே ஏதோவொருவிடயத்தில் போரில் ஈடுபட்டமைக்காக வழக்குகளை எதிர்கொண்டுள்ளவர்கள்தான். அப்படியிருக்கும்போது போரில் இடம்பெற்ற குற்றங்களுக்காக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள்எவரையும்தண்டிக்கவில்லைஎன்று அமைச்சர்கள் வாதாட முடியாது. ஆனால், இதற்கு நிகராகப் படையினர் மீது வழக்குகள் பாயவில்லை.

இதைவிடவும்ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள்சபையின் பரிந்துரையில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் புரியப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. கலப்பு நீதிமன்றம் ஒன்றை நிறுவினால் அதன் மூலம் விடுதலைப் புலிகள் புரிந்தார்கள் என்று அரசு கூறும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரிக்க முடியும். அப்படியிருக்கும்போது இந்த அமைச்சர்கள் ஏன் போர்க்குற்ற விசாரணைக்குப் பயப்பட வேண்டும்?

அமைச்சர் சம்பிக்க சொல்வதைப் போன்று 12ஆயிரம் புலிகளையும் மீண்டும் கைது செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் போர் முடிந்த கையோடு அனைவரையும்தடுப்பு முகாம்களில்அடைத்து அவர்களைக்கொழும்பு அரசுதண்டித்துவிட்டது. இலங்கைஅரசமைப்புச்சட்டத்தில் இதற்கு எந்தவிதத்திலும் ஏற்பாடுகள் இல்லாதபோதிலும் மறுவாழ்வுப் பயிற்சி என்ற போர்வையில் புலிகள் இயக்க அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதை கொழும்பு மறுக்க முடியாது.

அப்படி, போரில்ஈடுபட்ட ஒருதரப்புக்குமட்டும்தண்டனை கொடுத்த கொழும்பு அரசு, தனது இனத்தைச்சேர்ந்தவர்கள் என்பதற்காகமட்டும்சிங்களப்படையினர்மீதுநடவடிக்கை எடுக்கமறுப்பதுதான் வேடிக்கை. அதுதான்அநியாயம். அதனால்தான்உலக நாடுகளிடம் நீதி கேட்கிறார்கள்தமிழர்கள்.



# திருகோணமலை துறைமுக அபிவிருத்தி இலங்கை இந்திய புரிந்துணர்வு ஒப்பந்தம்

## அமைச்சர்கள் ஒப்புதல்

## புதுவருடத்துக்குப் பிறகு அமைச்சரவையில் பெரும் மாற்றம்

## அரச தலைவர் அறிவிப்பு

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும், ஒரு பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தையும் வேறு தொழில் நிறுவனங்களையும் அங்கு அமைப்பதற்கும் இலங்கையும் இந்தியாவும் கூட்டாக முதலீடுகளைச் செய்வதற்குமாறு இந்திய கம்பனிகளை ஊக்குவிக்கவும் இருநாடுகளும்சம்மதித்துள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இந்த வருடத்தில் கையெழுத்திடப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்த விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமாக வர்ணிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை, இலங்கையின் அபிவிருத்திகளுக்கான மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சு கையாள்வதாக இருக்கும் என குறிக்கப்பட்டிருந்தாலும். இந்தியாவின் தரப்பில் யார்கையாள்வார்கள் என்பது இனிமேல் தான் தெரியவரும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவை உபகுழுவினால் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இறுதிவடிவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதிகாரபூர்வ குழுவொன்றினால் தயாரிக்கப்படவிருக்கும் செயல்பாட்டு வழிமுறைகள் இப்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றன.

> பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவை உபகுழுவினால், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதிகாரபூர்வ குழுவொன்றினால் தயாரிக்கப்படவிருக்கும் செயல்பாட்டு வழிமுறைகள் இப்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றன.

இணக்கப்பாடுகள் கண்டுள்ளன. அதேபோல் கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன்களுக்கான இறுதிக்கட்டடத் தொகுதி (Container Terminal) ஒன்றை அமைப்பதில் ஈடுபடு

இரு நாட்டு மக்களுக்கிடையில் சமத்துவம், மற்றும் பரஸ்பர நன்மைகளின் அடிப்படையில் கூட்டுமுயற்சிகள் மற்றும் ஒத்துழைப்பு செயற்பாடுகளின் வாயிலாக முன்னேற்றகரமான முறையில் பொருளாதாரம், முதலீடு, அபிவிருத்தி போன்ற துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது. ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கிய சில அம்சங்களின் சுருக்கம் பின்வருமாறு.

01. கெரவலபிட்டிய என்ற இடத்தில் இயற்கை வாயு ஆலை மற்றும் மிதக்கும் கொள்கலன் அமைப்புகளை நிறுவுதல்

02. கொழும்பிலும் மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் குழாய் மூலம் எரிவாவு வழங்குவதை விஸ்தரிக்கும் திட்டத்துக்கு இந்தியா இலங்கைக்கு உதவி புரியும்.

03. சம்பூரில் 100 மெகவாட் வரைவிரிவாக்கக்கூடிய 50 மெகவாட் சூரிய சக்தி ஆலையை நிறுவுவது.

> புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எதையும் நீக்குவது அல்லது புதிதாகச் சேர்த்துக்கொள்வதற்கு இருதரப்பும் இணங்கிப்போவதில். பிரச்சினைகள் எழுமானால் இருதரப்பும் பரஸ்பர கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக் கொள்ளவும் எந்தத் தரப்பாகிலும் ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்வதாயின் மூன்றுமாதகால முன் அறிவித்தல் வழங்கப்படுவதற்கும் இணங்கப்பட்டுள்ளது.

04. திருகோணமலையில் உயர்நிலை தாங்கி பண்ணைகள் (Upper Tarnk Farms) அபிவிருத்திக்கு கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளல். அதேசமயம் தாங்கி பண்ணைக்கென இலங்கை இந்திய எண்ணெய்க்கூட்டுத்தாபனத்தின் சார்பில் 50 வருடகாலத்துக்கான நிலம் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

05. திருகோணமலையில் துறைமுகம் மற்றும் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் வேறு தொழில்களை ஆரம்பிப்பதற்கான கூட்டுமுயற்சியில் ஈடுபடுதல்

06. இலங்கையில் இனங்காணப்படும் சௌகரியமான இடங்களில் தொழில் வலயங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார வலையங்களை அமைப்பதற்கான முயற்சிகள்

07. மன்னார்-யாழ்ப்பாணம், மற்றும்



மன்னார்- திருகோணமலை நெடுஞ்சாலைகள் உற்பட இலங்கையில் நெடுந்தெருக்களை அபிவிருத்தி செய்தல்

08. இலங்கையில் ரயில்வேத் துறையைமேம்படுத்தல்

09. கொழும்புத்துறைமுகத்தில் கொள்கலன் தொகுதியை நிறுவுவதற்கு இந்திய நிறுவனங்களுக்கு ஊக்கமளித்தல். கொழும்பு துறைமுகத்தில் கப்பல் ஏற்றுமதி இறக்குமதியில் இந்தியாவே பெரும்பாலும் சம்பந்தப்பட்டிருப்பது இதல் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எதையும் நீக்குவது அல்லது புதிதாக சேர்த்துக் கொள்வதற்கு இரு தரப்புக்களும் இணங்கிப்போதல். பிரச்சினைகள் எழுமானால் இருதரப்பும் பரஸ்பர கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும், எந்தத்தரப்பாகிலும் ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்வதாயின், மூன்றுமாதகால முன் அறிவித்தல் வழங்கப்படுவதற்கும் இணங்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப்பெரும் போரின் போது பெரும் பயன்பாட்டிலிருந்துள்ள எண்ணெய் சேகரிப்பு தாங்கிகளை இருதரப்பும் இணைந்து அபிவிருத்தி செய்வது இதில் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். 850 ஏக்கர் காணியில் பத்து லட்சம் கலன் கொள்ளக்கூடிய 101 தாங்கிகள் பிரிட்டனால் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் 99 தாங்கிகள் இப்போது நல்ல நிலையிலுள்ளன. ஒன்று 1942 ஜப்பானிய குண்டுதாரி ஒருவர் பாய்ந்து தாக்கியதால் நொறுக்கப்பட்டு விட்டது.

இன்னொன்று 1960 ஆம் ஆண்டில் விமானப்படை விமானம் ஒன்று அதன் மீது வீழ்ந்து நொறுங்கியதால் நிர்மூலமாக்கப்பட்டது. இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் எண்ணெய் சேகரித்து வைப்பதற்காக 15 தாங்கிகளைப் பயன்படுத்தி வருகின்றது. கொழும்புத் துறைமுகத்தைவிட பத்துமடங்கு பெரிதான தென்கிழக்கு துறைமுக மான திருகோணமலைத் துறைமுகம் இந்திய உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டவிருக்கின்றது.

சீன நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் தெற்குதுறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுக அபிவருத்தித் திட்டமானது காலத்தைக் கடத்திச் செல்வதாகக் காணப்படுகின்றது. சீனநிறுவனத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கான அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டபோதிலும். இன்னமும் பல சிக்கல்கள் நீக்கப்படவேண்டியிருக்கின்றது. பெரும்பாலும் எல்லாவித சிக்கலும் தீர்க்கப்பட்டு இரண்டொரு வாரங்களில் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விடும் என்று சில அரசு சார் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**அமைச்சரவை சீர்திருத்தம்**


தமிழ் சிங்கள புதுவருடத்தை யடுத்து அமைச்சரவையில் சீர்திருத்தங்களை செய்யவிருப்பதாக மாகாணசபைகளின் முதலமைச்சர்கள்கூட்டமொன்றின்போது அரச தலைவர் சிறிசேன அறிவித்தார். அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவிருப்பதற்கான முதன்முதல் அதிகாரபூர்வ அறிவுறுத்தலாக இதைக்காண முடிகின்றது. சில அமைச்சுகளில் பிரச்சினைகள் காணப்படுவதால் அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்த மாற்றங்களைப் புதுவருடத்துக்குப் பிறகு செய்யலாம் என்று இருக்கி றேன் என்று அவர் கூறினார்.

வடமத்திய மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் மற்றும் கிழக்குமாகாணம் ஆகிய மூன்று மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்தவும் தாம் கருதுவதாக அரசதலைவர் கூறியதாக தென்மாகாண முதலமைச்சர் விஜயலால் டி.சில்வா தெரிவித்தார்.

அரசின் செல்வாக்கைப் பரீட்சித்துப் பார்க்கும் வகையில் முதல் இந்த மூன்று மாகாணசபை தேர்தல்களையும் நடத்தியதன் பின்னர், உள்ளூர் ஆட்சிமன்றங்களது தேர்தல்களை நடத்தலாம் என்று அரசு கருதுவதாகத் தெரிகின்றது.

புதுவருட விடுமுறைகளையடுத்து அமைச்சரவை மாற்றங்களைச் செய்யவிருப்பதாக அரசதலைவர் அறிவித்திருப்பதால் எதிர்வரும் மேதின வைபவங்களில் புதிய அமைச்சர்களைக் காணக் கூடியதாகவிருக்கும் என்று கருத முடிகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சி என்பவற்றின் அமைச்சர் பொறுப்புகள் மாற்றி அமைக்கப்படவிருப்பதாக ஏற்கனவே தெரியவந்துள்ளது. பல அதிர்ச்சிகளும் எதிர்ப்புக்களும் மேல் எழக் கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.





# வாசகர் திருமுகம்

## பிரதேச காணி அலுவலகம் மந்தகதியில் செயற்படுவதேன்?

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகள், இடம்பெற்ற போர் காரணமாக தங்கள் காணி அனுமதிப் பத்திரங்களைத் தொலைத்துவிட்ட நிலையில் அதற்குப் பதிலாகப் புதிய அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காகப் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்து, பிரதேச செயலகத்தால் அதற்குரிய விசாரணைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுத் தற்போது இரண்டு வருடங்களுக்கு மேலாகியுள்ள போதிலும் குறிப்பிட்ட காணி உரிமையாளர்களுக்கு இன்றுவரை புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

இது மாத்திரமன்றி சேதமடைந்த காணி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்காக ஒட்டு சுட்டான் பிரதேச செயலகக் காணிப்பிரிவில் ஒப்படைத்த எவருக்குமே இன்றுவரை புதிய அனுமதிப் பத்திரங்கள் குறித்த பிரதேச செயலகத்தால் வழங்கப்படவில்லை. பிரதேச செயலகத்தின் காணிப்பிரிவு இவ்விதம் மிகவும் மந்தகதியில் இயங்குவதற்கு ஆளணிப் பற்றாக்குறை காரணமா? அல்லது உரிய பொருத்தமான உத்தியோகத்தர்கள் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவில்லையா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. முல்லைத்தீவுமாவட்டத்தில்ஏனைய பிரதேச செயலகங்கள் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் விடயத்தில் துரிதமாகச் செயல்படுகின்றன என்பதை இந்த வேளையில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

*ச.கந்தையா*
*கர்சிலைமடு, ஒட்டுசுட்டான்*

## பயனளிக்கத்தக்க முடிவு இது

பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு அதன் பாவனையைத் தடைசெய்ய வேண்டுமென்ற கருத்து பல ஆண்டுகள் காலமாகப் எம் மத்தியில் பகிரப்பட்டு வருவது நாமறிந்ததே. ஆயினும் அது செயலுருப் பெறுவதில் பின்னடைவுகளை எதிர்நோக்கியதே இற்றைவரை நாம் கண்ட அனுபவம். பல ஆண்டுகள் காலமாக பழக்கப்பட்டுப் போன பழக்கமொன்றை இலேசில் கைவிட எம்மில் பலரும் விரும்பாமையே அதற்குக் காரணமாகும்.

ஆயினும் பொலித்தீன் பாவனையில் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைப் போக்கும் நடவடிக்கையாக சாவகச்சேரி நகரசபை நிர்வாகம், இந்த மாதத்தின் கடைசிவாரம் முதல் சாவகச்சேரிபொதுச் சந்தைக்குள் பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளமை ஒரு முன்னுதாரண நடவடிக்கையாகக் கொள்ளத்தக்கது; பாராட்டப்பட வேண்டியதொன்று. அதேவேளை மறுபுறத்தில் நுகர்வோரது தேவையை ஈடுசெய்யும் விதத்தில் வெற்றுச் சீமெந்துப்பை கடதாசியிலிருந்தும், காய்ந்த பனையோலைக் குருத்துக்களிலிருந்தும் தயாரிக்கப்பட்ட பைகளை வாங்குவதற்கு வழிவகை செய்திருப்பது கைவினைப் பொருள் உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதொன்றாகக் கொள்ளத்தக்கது.

*கே.தவராசா, சாவகச்சேரி*

# சங்க இலக்கியத்தில் தோழி

1



எஸ்.மல்லிகா

தலைவன் – தலைவியர்வாழ்வுசெல்நெறியில் செல்வதற்கு அன்பு, அறிவு, அறன் என்ற மூன்றையும் மனதிலும் சொல்லிலும் செயலிலும் கொண்டு இயங்கும் நட்பின் வடிவமே தோழி. தலைவன்– தலைவியர்காதல்வாழ்வில்பெரும்பங்குஎடுத்துத் துணைபுரியும் இவள், அகத்திணை நாடகத்துக்கு உயிர்நாடியாகச் செயற்படுபவள்.

சங்ககால அக இலக்கியத்தில் அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, கலித்தொகை ஆகிய ஐந்தும் தோழி பற்றிய செய்தியைவிவரமாகவும்விளக்கமாகவும்கூறுகின்றன. குறிஞ்சிப்பாட்டும் தோழியின் செயலைச் சிறிதளவு கூறுகிறது. தோழமைப் பண்பின் பெண் வடிவமான தோழிக்கு இந்த இலக்கியங்கள் அளித்த முக்கியத்துவம், வேறெங்கிலும் காணமுடியாது. அதேநேரம், தலைவிக்கும் தோழிக்கும் இடையேயுள்ள நட்புரிமையைத் தலைவனுக்கும் பாங்கனுக்கும் (தோழன்) இடையே காணவியலாது.

தலைவியுடன் ஒன்றிய மனத்தினை உடையவளாகவும், தலைவன் தலைவியரிடத்தே நல்லறிவுச் சுடர் ஏற்றுபவளாகவும், தலைவனது குறைபாடுகளை இடித்துரைத்துத் திருத்துபவளாகவும், தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைப் பலவகையிலும் உடனிருந்து தேற்றுபவளாகவும், தலைவன் தலைவியர் திருமணத்திலே பேரார்வம் கொண்டவளாகவும் சங்க இலக்கியங்கள் தோழியைக் காண்பிக்கின்றன.

**களவொழுக்கம்**

யாருக்கும் தெரியாமல் தலைவன் தலைவியர் சந்திப்பதனைக் களவொழுக்கம் என்று சங்க அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு தலைவனைச் சந்திக்கும் தலைவியின் நடவடிக்கையில் மாற்றம் தென்படுகிறது. அவளது மேனி வேறுபட்டு இருத்தலைக் கண்ணுற்று, அதற்குரிய காரணத்தைத் தனது மதிநுட்பத்தால் அறிந்துகொள்கிறாள் தோழி. அதனை நாகரிகமான முறையில் தலைவிக்கு எடுத்துரைக்கிறாள். இதனை நற்றிணை இலக்கியத்தில் காணலாம்.

*"எழாஅ யாகலின் எழில் நலந் தொலைய*
*வாழாஅ தீமோ நொதுமலர் தலையே*
*ஏனல் காவலர் மா வீழ்த்துப் பறித்த*
*பகழியன்ன சேயரி மழைக்கண்*
*நல்ல பெருந்தோளோயோ கொல்லன்*
*பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே*

"விலங்கினங்களைக் கொன்ற குருதிதோய்ந்தஅம்பினைப் போல விளங்கும் செவ்வரி ஓடிய கண்களையும் நன்றாகப் பருத்த தோள்களையும் உடைய பெண்ணே! என்று தலைவியைத் தோழிவிளித்து, சுனையாடியதாலும்பொழிற்கண் விளையாட்டினாலும் கண்கள் சிவந்தன என்று குறிப்பாகஅதேநேரம்நாகரிகமான முறையில்தலைவியின் களவினைக் கண்ணுற்று அவளுக்குப் புலப்படுத்துகிறாள். அழுதால் தலைவியின் களவுறவை அயலவர்கள் அறிந்துவிடுவர். அவளைவீட்டில்பூட்டி (இற்செறிப்பு) வைத்துவிடுவர். இதனால், தலைவனைத் தலைவி சந்திக்க இயலாத நிலை ஏற்படும் என்றும்தோழிஅவளுக்குஅறிவுறுத்துகிறாள்.இங்கே தோழியின் மதிநுட்பம் புலப்படுத்தப்படு கிறது.

**காதல் வசப்படும் நங்கையர்**

காதல் வயப்படும் தலைவன் தலைவியர் மணம் புரிந்து வாழ்வதையே தோழி விரும்புபவள். அவ்வாறு அவர்கள் மணம் புரியத்தக்க காலம் நேராதபோது, அவர்களின் களவுறவு நீடிக்கும். தலைவன் தலைவியைச் சந்திக்காவிட்டால் தலைவி ஆற்றாமை மீதூரப்பெற்று மேனிநலம் வாடுவாள். அதனைப் பார்க்கச் சகிக்காத தோழி, அவர்கள் சந்திப்பதற்குக் குறியிடம் (பிரத்தியேக இடம்) அமைத்துக் கொடுப்பாள். இந்தக் குறி பகற்குறி, இரவுக்குறி என இருவகைப்படும். குறுந்தொகை இலக்கியத்தில் வரும் பகற்குறி பற்றிய பாடல் இது.

*"ஊர்க்கும் அணித்ததே பொய்கை*
*சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே*
*இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்*
*துன்னல் போகின்றாற் பொழிலே யாம் என*
*கூழைக்கு ஒருமண் கொணர்கஞ் சேறும்*
*ஆண்டும் வருவள் பெரும் பேதையே*


பொய்கை ஊருக்கு மிகவும் அண்மையில் உள்ளது எனவும், அவ்விடத்தில் சோலையோ இரை தேடித் திரியும்வெண்ணிறநாரையோவன்றிவேறுஎவ்வுயிரும் அணுகுதல் இல்லை. பேதமையுடைய தலைவியும் அங்கு வருவாள்என்றுதலைவனிடம்தோழிகூறி, தப்புஏதும்நேர்ந்துவிடாத அளவுக்குத் தலைவியைப் பாதுகாத்துக் கொள்கிறாள். இந்த இடத்தில் தோழியின் தாய்மைப் பண்பு வெளிப்பட்டு நிற்கிறது. தலைவன் தலைவியர் சந்திப்பு நீடிக்கும் பட்சத்தில் அவர்களிடையேதப்புஇடம்பெறுவதற்குவாய்ப்புஅதிகமாகும்எனநினைக்கும் தோழி, தனது மதிநுட்பத்தால் அவர்கள் சந்திப்பைத் தடுத்து நிறுத்துவதை நற்றிணை இலக்கியத்தில் காணலாம்.

*"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி*
*மறந்தனம் துறந்த காழ்முளை அகைய*
*நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது*
*நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று*
*அன்னை கூறினள் புன்னையது நலனே*
*அம்ம நாணுதும் நும்மொடு நகையே*

தலைவி புன்னை மரத்தின் கீழ் இருந்து அதன் காய்களை எடுத்து விளையாடினாள். அது மாத்திரமன்றி நெய், பால் என்பவற்றை ஊற்றி அம்மரத்தை வளர்த்தமையால் அது தலைவியின் தங்கை போன்றது.

உறவுடையோர் (புன்னை மரம்) அருகிருக்க தம் காதலரோடு சிரித்து மகிழ்வதற்குப் பெண்கள் நாணுவர் என நாகரிகமான முறையில் தலைவன் தலைவியர் சந்திப்பை (பகற்குறி) விளக்கும் தோழியின் மதிநுட்பம் பாராட்டுக்குரியது.

*(தொடரும்)*



**காதல் வயப்படும் தலைவன் தலைவியர் மணம் புரிந்து வாழ்வதையே தோழி விரும்புபவள். அவ்வாறு அவர்கள் மணம் புரியத்தக்க காலம் நேராதபோது, அவர்களின் களவுறவு நீடிக்கும். தலைவன் தலைவியைச் சந்திக்காவிட்டால் தலைவி ஆற்றாமை மீதூரப்பெற்று மேனிநலம் வாடுவாள். அதனைப் பார்க்கச் சகிக்காத தோழி, அவர்கள் சந்திப்பதற்குக் குறியிடம் (பிரத்தியேக இடம்) அமைத்துக் கொடுப்பாள்.**

# திரையிசைப் பாடல்களில் கண்ணன் பற்றிய வர்ணனை



இரா. நிஷாந்தன்

தமிழ்த் திரைப்படங்களில் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் எண்ணற்ற பாடல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறான பாடல்கள் பல வகையான தன்மைகளை கொண்டிருக்கின்றன. அவற்றை மெல்லிசைப் பாடல்கள், சோக உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள், கானாப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், என வேறுபடுத்தி அறியலாம். ஆனால் இவற்றுக்கு மேலாக திரையிசைப் பாடல்களில் (சினிமாப் பாடல்கள்) பக்தி உணர்வை வெளிப்படுத்தும் பாடல்களையும் நாம் காணமுடியும். பெரும்பாலும் கண்ணன், முருகன் முதலிய கடவுள்களை மையப்படுத்தி பல பாடல்கள் வெளிவந்துள்ளன. அதிலும் அதிகமான திரையிசைப் பாடல்கள் கண்ணனைப் பற்றியே வர்ணித்துப் பாடியிருக்கின்றன. கடவுள்களைப் பாடும் பக்திப் பாடல்கள் இருப்பினும் தமிழ் சினிமாவில் வெளிவந்த பல பாடல்களில் கண்ணன் பற்றிய பக்திச் சுவை இழையோடி இருப்பதனை காணலாம். அது பற்றி இங்கு ஆராய்வோம்.

**கண்ணனைப் பிடிக்காதவர்கள் இல்லை**

கண்ணனைப் பிடிக்காதவர்களே இருக்கமுடியாது. அதிலும் குழந்தைக் கண்ணன் என்றால் அனைவருக்கும் கொள்ளைப்பிரியம். அவனது சிறுவயதுக் குறும்புகள், லீலைகள் அனைவர் மனங்களிலும் என்றும் நிலைத்திருப்பன. மேலும் காதல் வெளிப்பாட்டிலும் கண்ணனையும், ராதையையுமே அதிகளவில் உதாரணம் காட்டுவர்.

'சிநேகிதியே' எனும் திரைப்படத்தில் "ராதை மனதில் ராதை மனதில்.." எனும் பாடல் வைரமுத்துவின் கவிவரிகளில் வெளிவந்த பாடல். கண்ணன் மீது ஒரு மங்கை கொண்ட காதல் உணர்வு அப் பாடல் வரிகளில் அழகுற வெளிப்படுகிறது.

கண்ணன் ஊதும் குழல் காற்றைத் தூண்டி விட்டு காந்தம் போல இழுக்கும். மங்கை வந்தவுடன் மறைந்து கொள்வது மாயக்கண்ணன் வழக்கம்

இங்கு மங்கை எனக் குறிப்பது ராதையை. கண்ணனின் புல்லாங்குழல் ஓசை கேட்டு அவன் இருக்குமிடம் ராதை முதலிய மங்கையர் வரும்போது அக் கண்ணன் மாயமாய் மறைந்து விடுவான். இது தினமும் நடக்கும் செயலாகும் என இப் பாடல் வரிகள் கூறுகின்றது. மேலும், கண்ணனின் நினைப்பில் தன்னை மறந்த மங்கை தன் கன்னங்களை வருடியது கண்ணன் எனக் கருதி இறுதியில் அது கண்ணன் அல்ல-அது காற்று என ஏமாற்றமடைகின்றாள்.

கன்னம் தீண்டியதும் கண்ணன் என்று அந்தக் கன்னி கண்ணைவிழித்தாள் . கன்னம்தீண்டியதும்கண்ணன் இல்லை வெறும் காற்று என்று திகைத்தாள்

'கனவே கலையாதே' திரைப்படத்தில் கண்ணன் பற்றியஅழகியபாடல்ஒன்றுபின்வருமாறுஅமைகின்றது.

'கண்ணில் உன்னை கண்டு கொண்டேன் கண்ண பெருமானே . கண்களுக்கு நன்றி சொன்னேன் கன்னி இள மானே'

கங்கைக் கரை காற்றை கேளு கண்ணபெருமானே காதல் செய்த காலம் எல்லாம் காதில் கூறும் தானே.

இதுவும் பெண் ஒருத்தி பாடும் பாடலே. கண்ணனை தன் கண்களில் கண்டு கொண்டதாகவும் கண்ணனைத் தனக்கு காட்டியதால் தன் கண்களுக்கும் நன்றி சொல்லுகிறாள். மேலும், அப் பாடலில்,

கண்ணா மழை வண்ணா கண்ணா மழை வண்ணா எனசெம்மாங்குயில்போல்கூவுகின்றேன்

கண்ணனே மழையை பெய்விப்பவன். மேலும் கரிய முகில் போன்ற திருமேனி அழகைக் கொண்டவன். ஆகவே-தான் இங்கு கண்ணனை மழை வண்ணா என குயிலைப் போல் தினமும் அழைப்பதாக அம் மங்கை பாடுகின்றாள்.

பரமசிவன் படத்தில் இடம் பெறும் பாடலொன்று கண்ணன் புகழைப் பாடுகிறது. சிறு பாடலாயினும் அவ்வரிகள் அனைத்தும் அழகுற இடம்பெற்றுள்ளன.

கண்ணன் மணிவண்ணன் அவன் அருமை சொல்ல போவோம் மன்னன் மழை வண்ணன் அவன் மகிமை எளியதாமோ

ஆயன் அலங்காரன் கடல் பாயில் துயிலானோ வாயன் மலர் தூயன் என் இசைக்கே இசையானோ..

அதாவது, கண்ணனது அருமை, பெருமைகளை சொல்வதாகவும், அவனது மகிமைகள் எளிமையானதல்ல, என்பதும் இங்கு வெளிப்படும் பொருளாகும். மேலும் அவன் அலங்காரப்பிரியன், பாற்கடலில் பாம்பணையில் துயில் கொள்பவன், துளசியை சூடியோன் என்றவாறெல்லாம் இப்பாடல் கண்ணனை வர்ணிக்கிறது.

நீ வேணும்டா செல்லம் திரைப்படத்தில் கண்ணன் பற்றிய ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது.

கண்ணனை நினைக்காமல் என் கண்ணிமை உறங்காதே கள்வனை திருடாமல் என் கைவிரல் அடங்காதே...

அதாவது, கண்ணனை நினைக்காது தன் கண்ணிமை மூடிக்கொள்ளாது, கள்வனாகிய அக் கண்ணனை தீண்டாது தன் கைவிரல்கள் அடங்காது என ஒரு மங்கை பாடுவதாக இப்பாடல் உள்ளது.

மேலும், அப் பாடலில் உள்ள சில வரிகளை நோக்குவோம்.

"கண்ணா கண்ணா என் மன்னா மன்னா இவளை புரிந்திடுவாய் இந் நாள் இந் நாள் வாழ்வில் பொன் நாள் பொன் நாள் இதை நீ அறிந்திடுவாய்..."

**மன்னர்களின் சிறந்தவன்**

மன்னர்களில் சிறந்த மன்னனாகிய கண்ணனிடம் தன் நிலையை புரிந்து கொள்ளும் படி அந்த மங்கை வேண்டுகிறாள். அவ்வாறு தன்னிடம் கண்ணன் வரும் நாள் இனிய பொன் நாளாகும் எனவும் அவள் கூறுகிறாள். பெண்கள் எல்லோரும் உன்னைச் சுற்றி உன் மீது அன்பு கொள்ள அவர்களுடன் நீராடி விளையாடி மகிழும் செல்லக் கண்ணன் அவன் எனவும் அம் மங்கை பாடுகிறாள்

மேலும் தனது இதழ்களும், கண்ணனது புல்லாங்குழலும் ஒன்று சேர்ந்தால் அது அழகிய இசையாகும் என அம் மங்கை கண்ணன் மீது கொண்ட தன் ஈர்ப்பினை பாடுகின்றாள்.

"என் இதழும் உன் குழலும் அது ஒன்றானால் இசை ஆகும்...."

கண்ணனுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களில் முகுந்தன் என்பதும் ஒன்றாகும். அவன் வளர்ந்த இடம் பிருந்தாவனமாகும். அந்தக் கண்ணன் சிறு வயதில் வெண்ணெய் திருடி உண்டவன், அவ் வாயிலே மண்ணையும் உண்டவன், ஆயர்பாடியில் கோபியர்கள் அன்பினை பெற்றவன் அந்தக் கண்ணன். அவ்வாறு கண்ணன் மீது காதல் வயப்பட்ட மங்கையொருத்தி தன் காதல் நோய் நீக்கும் மருந்து அக் கண்ணனே என பாடுகிறாள். தசாவதாரம் திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள பாடல் இதுவாகும். முகுந்தா முகுந்தா வரம்தா வரம்தா பிருந்தாவனம்தா வனம் தா வெண்ணை உண்ட வாயால் மண்ணை உண்டவா

உண்ட காதல் நோய்க்கு மருந்தாக வா

மேலும் அப் பாடலில் கண்ணன் எடுத்த அவதாரங்களும் அவ் அவதாரங்கள் எடுக்கப்பட்ட பின்னணிகளும் அழகுற பாடல்வரிகளாக வெளிப்படுகின்றன.

மச்சமாக நீரில் தோன்றி மறைகள் தன்னை காத்தாய்
கூர்மமாக மண்ணில் தோன்றி பூமி தன்னை மீட்டாய்
வாமணன் போல் தோற்றம் கொண்டு வானளந்து நின்றாய்
நரன் கலந்த சிம்மமாகி ஹிரணியனை கொன்றாய்
ராவணன் தன் தலையை கொய்ய ராமனாக வந்தாய்
கண்ணனாக நீயே வந்து காதலும் தந்தாய்."

இதுவே அப்பாடல் வரிகள்.

'ஒரு நாள் ஒரு கனவு' எனும் திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள கண்ணன் பாடலில், தென்றலில் தவழ்ந்து இனிய கீதத்திடம் கண்ணனைக் கண்டாயா என வினவப்படுகிறது. அக் கண்ணனின் அழகிய வாயில் வைத்து ஊதப்படும் புல்லாங்குழல் இசையானது அமுதம் போல் வெளிவரும். "காற்றில் வரும் கீதமே என் கண்ணனை அறிவாயா... அவன் வாய் குழலில் அழகாக அமுதம் ததும்பும் இசையாக.. ........

கோகுலத்தில் சீதை எனும் திரைப்படத்தில் கோகுலத்துக் கண்ணா கண்ணா சீதை இவள் தானா... என கண்ணனை வர்ணிக்கும் பாடல் ஒன்று இடம்பெறுகின்றது. அப் பாடலில், "ஆசைக்கொரு ஆளாகினான் கீதை எனும் நூலாகினான். யமுனை நதி நீராடினான் பாண்;டவர்க்கு போராடினான். ஆடை அள்ளி கொண்டாடினான் திரௌபதிக்கு தந்தாடினான்...

அதாவது, அனைவரின் விருப்பத்துக்குரியவன் கண்ணன், அவனே அர்ச்சுனனுக்கு கீதையை உரைத்தவன், யமுனை நதியில் கோபியருடன் நீராடியவன், பாண்டவர்களுக்காக குரு சேத்திரத்தில் போரிட்டவன் அதாவது அர்ச்சுனனுக்கு தேரோட்டியவன், கோபியர் நீராடும் போது அவர்களின் ஆடைகளை திருடி ஒழித்தவன், சபையில் திரௌபதியின் மானம் காக்க பல்லாயிரக்கணக்கான ஆடைகளை வழங்கியவன் அந்த மாயக் கண்ணன்.

கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் எனும் திரைப்படத்தில் வைரமுத்துவின் வரிகளில் கண்ணன் பற்றிய பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. "கண்ணாமூச்சி ஏனடா என் கண்ணா.." எனத் தொடங்கும் பாடல்.

வைரமுத்துவின் வரிகள் என்றாலே நிச்சயம் ஒரு தனி இரசனை இருக்கும். அது போலவே இப் பாடலிலும் அவரின் வரிகள் கண்ணனின் வர்ணனையை சிறப்பித்திருக்கின்றன. படத்தில் வரும் ஒரு விழாவில் நாயகனும் நாயகியும் ஒளிந்து ஒளிந்து பார்க்கும் போது வரும் பாடலிது. பிருந்தாவனத்து கோபிகைகள் பாடியது போல உள்ளது இப் பாடல். அந்த நதியின் கரையை நான் கேட்டேன் அந்த காற்றை நிருத்தியும் கேட்டேன் வான் வெளியைக் கேட்டேன் விடையே இல்லை இறுதியில் உன்னைக் கண்டேன் இருதயப் பூவில் கண்டேன்

கண்ணனை எங்கெங்கும் தேடி இறுதியில் தன் இதயத்தில் கண்டுகொள்ளுதல். மேலும், ஏன் என்னை உன் நினைவால் படுத்துகிறாய் என வினவுதல் என்னை ஏன் இன்னும் வந்து சேரவில்லை என விசனப்பட்டு வசைப்பாடுதல் நீ வந்து என் உயிரை தீண்டிக் காப்பாயோ என இறைஞ்சுதல்... என கோபாலனின் திவ்ய வதனமும் வனப்பும் தலைக்கிறுக்கேறிய பேதை ஒருத்தி பாடியாதாக இப்பாடல் உள்ளது.

கண்ணன் மாயம் செய்பவன். லீலைகள் புரிபவன். அத்தகைய அவனது நினைவுகளால் உள்ளம் தடுமாற்றமடைதல், உயிர் வேதனை கொள்ளுதல் கண்ணனின் ஒரு தூண்டுதலே தன் உயிர் துடிக்காமல் இருப்பதற்கு காரணமாகும் என கண்ணனை தன் இதயத்தில் வரித்துக் கொண்ட மங்கை பாடுவதாக இப்பாடல் வரிகள் அமைகின்றன.

(21 பக்கம் பார்க்க)



# அதிர்ஷ்டக் கற்கள்

## கனக புஷ்பராகம்

**எவர் கனக புஷ்பராகம் அணியலாம்?**

இந்த புஷ்பராகக் கல்லை 3,12, 21, 30 போன்ற எண்களில் பிறந்தவர்கள் தங்கத்தில் பதித்து ஆள்காட்டிவிரல் அல்லது மோதிர விரலில் உடலில் படும்படி அணிந்து கொள்வது நல்லது. மற்றும் தனுசு, மீன ராசிகளில் பிறந்தவர்களும், குருதிசை நடப்பில் உள்ளவர்களும் இந்தப் புஷ்பராகக் கல்லை அணியலாம். இதனால் தொழிலில் தடை, திருமணத்தடை, குழந்தைப் பேறின்மை போன்றவை விலகும். அசுரபரான செவ்வாயை அடக்கி செவ்வாய் தோஷத்தை விலக்கும், மஞ்சள்காமாலை போன்ற ஈரல் தொடர்பான நோய்களை போக்கும். மற்ற இயற்கை கற்களை போலவே கனக புஷ்பராகத்திற்கும் ஓர் அதிர்வு உண்டு. இந்த அதிர்வானது போலிக் கற்களுக்கு இருக்காது. குருவின் ஆதிக்கத்திலிருந்து வரும் கதிர்களை உறிஞ்சி குருவின் திருவருளை கனக புஷ்ப ராகம் பெற்றுத் தருகிறது.

கனகபுஷ்பராககல்லுக்குப் பதில் ஏமிதிஸ்ட் என்றகல்லையும் அணியலாம். இது இந்தியாவில் இருந்தே கிடைக்கிறது. வெண் பவளத்தையும் ஒயிட் கோரல் 3ஆம் எண்ணின் ஆதிக்கத்தை உடையவர்கள் அணியலாம்.

ஸ்படிக வகையைச் சேர்ந்த கோல்டன் டோபஸ்ட் என்ற கல்லையும் அணியலாம். ஆனால் இது எடைகுறைவாகவும், நாளடைவில் பளபளப்பு குன்றியும் காட்சியளிக்கும்.

புஷ்பராகக் கல்லை அணியும்போது வியாழக்கிழமைகளில் குரு ஓரையில் 7 அல்லது 13 ரத்திகல் எடையில் உடலில் படும்படி அணிந்து கொள்வது நல்லது. கனக புஷ்பராக கல்லானது இயற்கை அளித்த அற்புதமான பரிசாகும்.

### நாளை

பங்குனி-24
வியாழக்கிழமை -06.04.2017
திதி: தசமி பி.ப.12.15
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.01.20
சுபநேரம்:07.38-09.08 வரை
ராகுகாலம்:01.38-03.08 வரை
யோகர்சுவாமி குருபூஜை





## நடனப் பள்ளியின் ஆண்டு விழா

அம்பிகா சிற்சபேசனின் தமிழ் நியூசிலாந்து நடனப் பள்ளியின் ஆண்டு விழா அண்மையில் ஆக்லாந்தில் நடைபெற்றது. "வேலவன் வந்தானடி" என்னும் நாட்டிய நாடகம் அன்றைய நிகழ்வின் சிறப்பு அம்சமாக இடம்பெற்றது. நிகழ்வின் சில காட்சிகளைப் படங்களில் காணலாம். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஆளும்நஷனல்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பக்ஷி, டாக்டர் பாமர் மற்றும் லேபர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கல் வூட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.








## சிறுகதைத் தொகுதி வெளியீடு

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக ஆசிரிய ஆலோசகர் க.சிவகரனின் "இரங்கி" சிறுகதைத் தொகுதி நூல்வெளியீடு இந்த மாதம் 15ஆம் திகதி பி.ப.3 மணிக்கு இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் கவுஸ்) நடைபெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவ ராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல்வெளியீட்டு விழாவில் வாழ்த்துரைகளைச் சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்த ராஜாவும், தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலமும் பத்திரிகை ஆசிரியர் சி.க.செந்திவேலும் வழங்கவுள்ளனர். வெளியீட்டுரையை ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் வழங்கவுள்ளார். மதிப்பீட்டுரையை எழுத்தாளர் ஐ.சாந்தன் வழங்கவுள்ளார்.

ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் க.சிவகரன் ஆற்றவுள்ளார். கலை இலக்கிய ஆர்வலர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் தேசிய கலை இலக்கியப் பேரவை அன்புடன் அழைக்கிறது.



## ஏழிசை மாலை நிகழ்வு

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வரணி மத்திய கல்லூரியில் 18ஆவது ஏழிசைமாலைநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரியின் பிரதானமண்டபத்தில் கல்லூரிமுதல்வர் ப.செல்வவிநாயகம் தலைமையில் ஆரம்பமாகியது. பிரதம விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும், சிறப்புவிருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் ஓய்வுநிலை அதிபர்.சி.துரைராஜா கல்லூரியின் முன்னாள் ஓய்வுநிலை இசை ஆசிரியர்களான திருமதி நாகம்மா மகாலிங்கம் மற்றும் திருமதி தே.நாகதேவனும் கலந்துகொண்டனர். வரணி மத்திய கல்லூரி, மிருசுவில் அ.த.க பாடசாலை. திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களின் குழுப்பாடல் நிகழ்வுகளுடன் ஓய்வுநிலை இசை ஆசிரியரான திருமதி நாகம்மா மகாலிங்கத்தின் சிறப்பு இசைக்கச்சேரியும், வரணி மத்திய கல்லூரியின் இசை ஆசிரியர் செல்வி பாமிலா செல்லத்துரையின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. இசை ஆசிரியர் திருமதி சூரியவதனி யோகராசாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# திரையிசைப் பாடல்களில் கண்ணன் பற்றிய வர்ணனை

19 ஆம் பக்கத் தொடர்ச்சி

தினம் ஊசலாடுது என் மனசு அட ஊமையல்ல என் கொலுசு என் உள் மூச்சிலே உயிர் வீங்குதே என்னுயிர் துடிக்காமலே காப்பது உன் தீண்டலே உயிர் தர வா....... என்பதே அப் பாடல் வரிகளாகும்.

மனதில் உறுதி வேண்டும் எனும்திரைப்படத்தில் வாலியின் அற்புத வரிகளில் இடம் பெற்ற கண்ணன் பாடல். கண்ணன் மீது அன்பு செலுத்திய மங்கையருள் மீராவும் ஒருத்தி. கண்ணனுக்காக தன் உயிரையும் தியாகம் செய்யத் துணிந்தவள். அம் மீரா கண்ணன் தன்னிடம் வருவனா என அவன் வரும் வழியினை எதிர்பார்த்து மாலை நேரத்தில் அழகிய சோலைகளையுடைய நதிகளின் ஓரமெல்லாம் நடந்து கண்ணன் வருகைக்காக காத்திருக்கின்றாள்.

கண்ணா வருவாயா மீரா கேட்கிறாள்
மன்னன் வரும் பாதை மங்கை பார்க்கிறாள்
மாலை மலர் சோலை நதி ஓரம் நடந்து...

மேலும், ஆழ்வார் எனும் திரைப்படத்தில் ஓர் பாடல் கண்ணன் பெருமையை பின்வருமாறு போற்றிப்பாடுகிறது.

அறிவும் மாதவன் பாதம் என்றும் சரணம் அவன் தான் நல்லருள் இன்றும் என்றும் தரனும் அருள்மா மலையை வார்க்கும் நீல நயனம்.அழியா மேன்மை வாழ்வு வாசல் வரணும் அவன் தான் ரங்கன் அரங்கன் மறை நூல் ஞானச் சுரங்கன் மதுசூதன் மணிவண்ணன் திருநாமம் பாடப் பாட இன்பம்............

என்பதே அப் பாடல் வரிகளாகும்.

அதாவது, மாதவனாகிய கண்ணன் திருவடிகளை சரணடைகின்ற எமக்கு என்றும் நல்லருளை அவன் தரவேண்டும் என அடியவர்கள் வேண்டுவது நிதர்சனம். அக் கண்ணன், அருளை மலை போல் பொழிகின்ற நீல நிற விழிகளை கொண்டவன், அவனது அவ் விழிகள் என்றும் குறைவில்லாத மேன்மையினை அருளவல்லவை. அவனே ஸ்ரீரங்கத்தில் பாம்பனைத் துயில் கொள்ளும் அரங்கநாதன். வேதங்களால் போற்றப்படுபவன், ஞான் வடிவானவன். மேலும், மது எனும் அரக்கனை வதைத்தவன் ஆகயால் மதுசூதனன் எனும் நாமம் பெற்றவன், மணிவண்ணன் எனும் நாமமும் கொண்டவன். இத்தகைய கண்ணனின் திருநாமங்களை பாடப் பாட இன்பமே கிடைக்கப்பெறும்.

சீனு திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்றில், கண்ணன் மாதவன் எனும் நாமம் உடையவன். அவன் கையில் உள்ள புல்லாங்குழல் தானே என ஓர் பக்தன் பாடுகின்றான். மேலும் தன் மாதா, பிதா, குரு அனைத்தும் கண்ணனே. அவன் கோகுலத்தை வந்தடைந்தவன். கோபியரால் என்றும் விரும்பி அழைக்கப்படுபவன், கோவர்த்தன மலையை குடையாக பிடித்தவன் என கண்ணனது பெருமைகளை அப் பாடல் காட்டுகிறது.

மாதவா சேது மாதவா உன் கையில் உள்ள புல்லாங்குழல் நான் மாதவா மாதவா என் மாதவா என் அம்மை அப்பன் ஆசான் நீதான் மாதவா கோகுலம் மேவிய மாதவா கோபியர் கூவிய மாதவா குன்றினை ஏவிய மாதவா

என்பதே அப் பாடல் வரிகளாகும்.

கங்கைக் கரையின் அருகில் உள்ள தோட்டத்தில் கன்னிப் பெண்களாகிய அழகிய கோபியர்கள் கூட்டம் நிறைந்திருக்க கண்ணன் அக் கூட்டத்தின் நடுவில் நிற்கின்றான். ஆயர்பாடியில் கண்ணன் கோபியர்களுடன் ராசலீலை புரிந்த நிகழ்வினை இப் பாடலடிகள் வெளிப்படுத்துகிறது. காலையில் தவழ்ந்து வரும் இளங்காற்று, பாடும் இனிய பாடல், அனைத்திலும் கண்ணன் குரலே என்பதும் இங்கு புலப்படுகிறது.

கங்கை கரை தோட்டம் கன்னிப் பெண்கள் கூட்டம் கண் நடுவினிலே காலை இளங்காற்று பாடி வரும் பாட்டு எதிலும் அவன் குரலே...............

இவ்வாறு மங்கையர் மனம் கவர்ந்த கண்ணபிரான் தமிழ் திரையிசைப் பாடல்களில் வர்ணிக்கப்பட்டுள்ள தன்மையானது அழகுற வெளிப்படுகின்றது. இப் பாடல் வரிகள் எம் உள்ளத்தில் பக்தியையும், அமைதியையும், இரசனையையும் ஏற்படுத்துகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்வாறு ஏராளமான பாடல்களை தமிழ் திரைப் படங்களில் இருந்து கண்ணனின் வர்ணிப்பை எடுத்துக் காட்டும் பாடல்களாக நாம் காணலாம். இன்று வெளிவரும் பெரும்பாலான பாடல்கள் இலக்கிய இரசனையுடனோ, அல்லது பக்திச் சுவையை வெளிக்காட்டும் பாடல்களாகவோ அமைவதில்லை. அவற்றை விரும்புவோரும் குறைவாகவே உள்ளனர். ஆனாலும் இத்தகைய பக்திச் சுவையை வெளிக்காட்டும் கண்ணன் பாடல்களில் தமிழ் திரையிசையில் இன்று மட்டுமன்றி என்றும் எம் உள்ளங்களில் நிறைந்திருக்கும்...

# கும்பாபிசேக மலர் வெளியீடு









திருகோணமலை அருள் மிகு சிறிபத்திரகாளிஅம்பாள்ஆலய மஹா கும்பாபிஷேக மாமலர் "பாதகமலர்" வெளியீட்டுவிழா கடந்த 28 ஆம் திகதி 5.30 மணியளவில் தேவஸ்தான திருமண மண்டபத்தில் கலாபூஷனம் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக எதிர்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்து கொண்டார்.

இதில்திருகோணமலைஅருள் மிகு சிறி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின்ஆதினகர்த்தாவும்பிரதம குருவுமான சிவ சிறி சோ.இரவிச்சந்திர குருக்கள் முதலாவது பிரதியினை எதிர்கட்சிதலைவரிடம்வழங்கி வைப்பதுடன் விசேட பிரதிகளை பிரதேசத்திலுள்ள குருக்கள்மார்களுக்குவழங்கிவைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

(45)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
11.12.1942

மறைவு
06.03.2017

அமரர்
**பீற்றர் பேரின்பநாயகம் (பேரின்பம்)**



**அன்போடு அரவணைத்து அனைத்துமே ஆகி நின்று
பண்போடு நாம் வாழ உமையுருக்கி ஒளி தந்த
குலவிளக்கே பாசமிகு அப்பாவே ஆருயிர் துணைவரோ
உம்பிரிவால் நினைவிழுந்து வாடுகின்றோம்.**

இரக்கம் உள்ள இறைவா உம்மிடம்
அழைத்துக் கொண்டபீற்றர் பேரின்பநாயகம் அவரை உம்
நித்திய பேரின்பவான் வீட்டில் என்றும் மகிழ்ந்திருக்க அருள்புரியும் - ஆமென்.

எமது குடும்பவிளக்கின் மரணச்செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் துண்டுபிரசுரங்கள், பதாகைகள் தபால் மூலமாகவும் பூமாலைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர் வீதியை அலங்கரித்தவர்களுக்கும் உற்றார், உறவினர், அயலவர்களுக்கும் இறுதி திருப்பலி நிறைவேற்றிய குருக்களுக்கும் இல்லத்தில் வழிபாடு செய்த பங்குத்தந்தை பங்குமக்களுக்கும் குழுவாக வந்து தனியாகவும் ஜெபித்த குருமார்களுக்கும், குருமாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவரின் ஆன்ம இளைபாற்றிற்காக கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று (05.04.2017) புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.**

# 'அக்கினியாய் வெளியே வா'

யோ.புரட்சி

அக்கினியை வெளித்தள்ளும் இராகலை தயானி படைத்த 'அக்கினியாய் வெளியேவா' கவி நூல்தன்னுள்பல கவிதைகளைக் கொண்டது. அரசியல்வாதியால் இலவசமாக நடத்தி வைக்கப்படும் கல்யாண வைபவத்தில், மணமக்களுக்கு இல்லாத முக்கியத்துவம் அந்த அரசியல்வாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். உச்சப் புகழ் விரும்பும்இலக்கியஅமைப்புக்களின் இலவச ஊக்கப்படுத்தல் செயற்பாட்டில், படைப்பாளியின் படைப்புக்கு இல்லாத முக்கியத்துவம் அந்த இலக்கிய அமைப்புக்கு வழங்கப்பட்டிருக்கும்.

'அதோ தெரிகிறதா
நான் வாழும்
மாட மாளிகை.
வாழை இலையின்
நிறத்தில்
வெளிர்ந்த வர்ணத்தில்
சுவர் சிரிக்கிறது.
கறையான்
பசிக்கு இரையாகியும்
அரைவாசி தெம்பாய்
தெரிகிறது
எங்கள் வீட்டுக்கதவு.

'மாடமாளிகை'கவிதையைஇவ்விதமாகத்தொடக்கியபடிமேலும்வரைகிறார் தயானி.

கவிதைகள் போடும் கவி விதைகள் அநேகமாகச்சமூகத்தின்பாடல்களே. வெறும் கற்பனைகளும், நடைமுறைக்கு ஒவ்வாததுமான கருப்பொருள்களை இந்தக் கவிதைகளில் காண இயலவில்லை.

'இராகலை தயானி' எனும் புனைபெயரில் எழுதிவரும் தயானி விஜயகுமார், இலங்கையின்நுவரெலியாமாவட்டத்தின் புறூக்சைட் தோட்டத்தைச் சேர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான சிறப்புக் கலைமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர், அந்தத் துறையிலேயே முதுமாணிப் பட்டத்துக்கான கற்கையைத்தொடர்கின்றார். மனித உரிமை டிப்ளோமாவையும் நிறைவுசெய்திருக்கும்இவர், தமிழ்த்தந்தி, தினக்குரல் போன்றபத்திரிகைகளில்தன்னுடையபல்வேறுபடைப்புக்களை உலாவரச்செய்தவர்.

அவர்தன்னுடையபெற்றோருக்குச் சமர்ப்பணமாக்கியிருக்கும்அக்கினியாய்வெளியே வா'எனும்கவிதைச்செடியில் சிறிதும் பெரிதுமாக ஐம்பத்து எட்டுக் கவி மொட்டுக்கள் பூத்திருக்கின்றன. பொருளடக்கம் முன்னிடப்படாமை, விரும்பும் கவிதைகளைத் தேடுவதற்கு இடம் கொடுக்கின்றது.

நூலின் பதிப்புரையை ஈழத்தின் 'கொழுந்து' சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவாவும் அணிந்துரையை இந்தியா'வளரி'எழுத்துக்கூட இயக்குநர் அருணா சுந்தரராசனும் வரைந்துள்ளனர். அட்டைப்படவடிவமைப்பு கவிஞர்மேமன்கவி. தன்னுரையை நூலாசிரியர் வரைந்துள்ளார்.

ஈழத்தின் 'புரவலர் புத்தகப் பூங்கா' தனது37ஆவதுவெளியீடாகஇதனை வெளிட்டிருக்கின்றது.

அருணாசுந்தரராசன்தனது அணிந்துரையில் இவ்விதம் உரைக்கின்றார். 'அக்கினியாய் வெளியே வா' என்கிற தயானியின் அறைகூவல் சமூகத்தின்தீமைகளையும்,வஞ்சகத்தையும் , ஏமாற்றுத்தனத்தையும் எரித்தழிக்கும்பிரகடனமாகவேதெரியவருகின்றது என்கிறார்.

இங்கு சேகுவரா எனும் கவிதையில் தயானி இப்படிச்சொல்கின்றார்.

'சே...
பெயர் கேட்டதுமே
செந்நீர் செந்தணலாய்க்
கொதிக்கிறது.
ஆர்ஜெந்தின
அன்னையொருத்தியின்
அடிவயிற்றைப்
பிளந்து விழுந்த
மாக்சிய
விருட்சம்...'

இவ்விதமாய் பயன்படுபொருள்களை, பாடற்பொருளாக்கிய கூடு இந்தக் கவி ஏடு. ஒப்புநோக்கல் சீராகஇடம்பெற்றமைக்குச்சான்றாக எழுத்துச் சீர்முறைமை அமைகின்றது. சின்னதான பிழைகள் சிரிக்கத்தான் செய்கின்றன.

கவிதையின் தொடக்க அமைப்பும், தொடர்அமைப்பும்ஏனையகவிநூல்களில் இருந்து தன்னை வித்தியாசமாக்காட்டுகின்றது.


'அக்கினியாய் வெளியேவா' எனும் தலைப்பில் அமைந்த கவிதைதான் நூலிலும்முதற்கவியாகிமுகம்காட்டுகின்றது. இராகலைதயானிசமைத்த அந்த 'அக்கினியாய்வெளியேவா'கவிதைச் சோற்றில் இருந்து இது ஒரு பருக்கை.

தூங்கும் பட்டம்
நஷ்டங்கள்
கஷ்டங்கள்தான் இதுவரை
இஷ்டங்கள் இன்னும்
நடைபெறவில்லை.
ஊரார் ஊதாரி எல்லோரின்
திட்டுதலைக் கேட்கத்தான்
கிரீடம் வாங்கினோமா?
பெற்றோரைப் பிள்ளையாய்
சீராட்டப் போராடும்
பிள்ளைகள்
எத்தனை பேர்?
உடன் பிறந்தோர்க்கு
சீதனம் சேர்க்க முடியாமல்
அவல மூச்சிடும்
அண்ணன்மார்
எத்தனை பேர்?
கடன் கட்ட
கவலையை
இரவலாய்ப் பெற்று
தினமும் இறக்காமல்
இறப்போர்
எத்தனை பேர்?
முதிர்கன்னியாகியும்
சொந்தக் காலில்நிற்காததால்
வாக்கப்படாமலே
சிலர் வாய்க்கு
அவலாகுவோர்
எத்தனை பேர்?
எத்தனையோ புலம்பல்கள்
ஏக்கங்கள்
எதிர்பார்ப்புக்கள்
எப்போதுதான்
வேலை கிடைக்கும்?
எல்லா கனவுகளும்
சுருண்டுவிட்டன.
சுருளில் தூங்கும்
எங்கள்பட்டங்களைப்போல.
நாங்கள் பட்டங்கள் பெற்றது
பட்டம்விடத்தான் போலும்.




"
கவிதையின் தொடக்க அமைப்பும், தொடர் அமைப்பும் ஏனைய கவி நூல்களில் இருந்து தன்னை வித்தியாசமாகக் காட்டுகின்றது. 'அக்கினியாய் வெளியே வா' எனும் தலைப்பில் அமைந்த கவிதைதான் நூலிலும் முதற்கவியாகி முகம் காட்டுகின்றது.

அ. அஜந்தன்



# வீசி மறைந்த தென்றல் நவாலியூரான்

## கலாபூசணம் நா. செல்லத்துரை

நவாலியூரான் என்றபுனைபெயரோடு1959களிலிருந்து கலை இலக்கியப் பணிகளை முன்னெடுத்துவந்த கலாபூசணம் நா. செல்லத்துரை, சோமசுந்தரப்புலவர், கலையரசு சொர்ணலிங்கம் போன்ற சான்றோரை எமக்களித்த நவாலியூரில் 1929ஆம் ஆண்டு தை மாதம் 6ஆம் திகதி பிறந்தவர். கந்தர்மடம் ஆத்திசூடியில் வசித்தவர்.

கண்டிதிருத்துவக்கல்லூரியில் 25ஆண்டுகள் ஆசிரியராகத்தன்னை அர்ப்பணித்தவர். மலையகக்கலையுலகத்துடன் நீண்டகால நட்புள்ளவர். தனது 88ஆவது வயதில் இவ்வுலகில் தன் பணிகளை நிறைவுசெய்து கடந்த 26ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரை நினைவுகூரும் முகமாக அவருடன் நான் கழித்த சில மணித்துளிகளின் கனதியான நினைவுகளோடும் பத்திரப்படுத்திய அவரது அறிவுரைகளுடனும் இந்தக் கட்டுரையில் அவரின் அளப்பெரிய கலைச் சேவையை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

நாடகங்களில் மக்கள் நாட்டம் காட்டிய 1960 தொடக்கம் இறுதிக்காலம் வரையில் இலக்கிய நாடகம், சமூக நாடகம், வரலாற்று நாடகம், சிந்துநடைக்கூத்து, திரைப்பட வசனம், நாவல், சிறுகதைகள், கீதங்கள், திருப்பாடல், கவிதைகள் எனப் பல்சுவைக் கலைப்படைப்புகளை உவந்தளித்தவர். இலக்கியத்தையும்இறையியலையும் ஒருங்கே நகர்த்தியவர். இவரது எழுத்துக்கள் வாசகரைக்கவரும்வகையில்மட்டும்அமைந்ததல்லமாறாக சமூகத்தின்பிரச்சினைகளைஉணர்வூட்டமாகவெளிக்காட்டும் கண்ணாடியாகவும் அமைந்திருந்தன. எம் சமூகம் மீளவேண்டும் என்ற துடிப்பான துணிந்த நற்சொற்பதங்களினூடாக அந்தக் காலகட்டத்தில் வேரூன்றியிருந்த மூடநம்பிக்கைகளையும், தவறான நடத்தைகளையும் களையெடுக்கும் கலைப் பயணமாகவுமே அவை அமைந்திருந்தன. கலை இலக்கியத்திற்கு அப்பால்தனக்கிருந்தசமூகப்பொறுப்பும், அழிவுற்றிருக்கும் சமூகப் பண்பின் மீதான ஆதங்கமும், புரிந்துணர்வும் இவர் எழுதி அரங்கேற்றிய ஒவ்வொரு நாடகங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை உணரமுடிகிறது. பல சந்தர்ப்பங்களில் இவரது நாடகங்கள் பொதுப்பணிகளுக்கானநிதிதிரட்டலுக்கும்பயன்பட்டதோடுபலரதுதேவைகளை நிறைவு செய்த மனநிறைவான ஓர் எழுத்தாளுமையாகவே இவரைத் தரிசிக்க முடிந்தது.

### மொழிப் புலமை

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், ஆங்கிலம், ஆங்கில இலக்கியம்ஆகியவற்றிலும்இவர்சிறந்துவிளங்கியவர். மொழிப்பற்றும் கலையார்வமும் அவரது வயதையும் தாண்டித் தொடர்ந்து அவரை எழுதத் தூண்டியவை எனலாம். அவரது எழுத்துக்கள் எப்பொழுதும் இளமையானதும், புதுமையானதும், பொறுப்பு மிக்கதுமாகத் திகழ்வதால் வாசகர்களை அவரது எழுத்தின் ஆழ்பொருளினுள் மூழ்கிச்செல்லத் தூண்டிவிடும். நாடகத்தின் வசனங்களைபல்வேறுபடிப்பினைகளாகவும்யதார்த்த வாழ்வியலின் விம்பங்களாகவும்தருவதனூடாகஆழ்மனதில் பதியவைத்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவரது சில நாடகங்களின் நறுமணத்தை வாசித்து நுகர சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்மூலம் அன்றிலிருந்து இன்றுவரை அந்தந்தக் காலத்திற்கேற்றபருவகாலமலர்களாககருப்பொருள்களை தேர்வுசெய்வதிலும் கருத்தாழம்மிக்க புரட்சி கரமானதலைப்பிடுதலிலும்மிகுந்தஅனுபவத்தைக் கொண்டிருந்தவர் என்பதை உணரமுடிந்தது. தலைப்பிடுவதென்பதேஒருதனித்திறமையாகும் அதுநீண்டஅனுபவத்தின்வாயிலாகவேபெறமுடியும். அதனைத் தன்னகத்தே வசப்படுத்தியிருந்தமைஅவரின்வாசகர்களைஇலகுவில்ஈர்க்கவல்லதாய் அமைந்திருக்கிறது.

1960 - 2005 வரையான காலப்பகுதியில் கண்டியிலும், யாழ்மண்ணிலும் மேடையேற்றிய "சதியின்பரிசு", "கெட்டகுமரன்", "நினைவுச்சின்னம்", "எதிர்பாராமுடிவு", "நல்லதீர்ப்பு", "அடிமைவிலங்கு", "புதியதொரு உலகம்", "எதற்கும் ஒரு தீர்ப்பு", "கேளுங்கள் கொடுக்கப்படும்", "நீதிருந்து உலகம் திருந்தும்", "சாபக்கேடு", "ஜீவவெளிச்சம்", "பழிக்குப் பழி", "அன்பைக் கடைப்பிடிச்சா", "விசுவாசம் ஓர் அற்புதமருந்து", "நாளைமலரும்", "சுதந்திரப்போர்", "பட்டமரம்", உம்முடைய சிலுவையிலே", "அன்பு இல்லம்", "குடும்பங்கள் பலவகை இது ஒரு வகை", "எங்கள் கிராமத்தின் இந்தக் கோலங்கள்", "வேற்றுமையில் ஒற்றுமைமுடிவு ஒருகற்பனை" போன்றசமூகநாடகங்களினூடாக சமூக அவலங்களுக்கெதிரான ஆக்கபூர்வக் கருத்துக்களையும், விதவைகள்சந்திக்கும்சவால்களை முறியடிக்கும் வாதங்களையும், மதுவின் சமூக ஆக்கிரமிப்புக்கெதிரான சாட்டைகளையும்மக்கள்மனங்களில் விதைத்தவர்.

"காசியப்பா", "தாய்நாடு", "தாய்மண்", "தாயகம்", "கண்டியம்பதிக் காவலன்", "அசோகன்" போன்ற வரலாற்று நாடகங்களையும், "நீதிகேட்டாள்சோழநாட்டாள்", "சிலப்பதிகாரத்தில் சிலையெடுத்த சேரன்", "உடன் பிறந்த உணர்ச்சி", "கண்ணீர்ப்படை", "விதியா இது சதியா" போன்ற இலக்கிய நாடகங்களையும் எழுதியதோடு சில நாடகங்களில்தானும்வேடமேற்றுநடித்துள்ளார். சிந்து நடைக்கூத்தக்களாக "சின்னவனாபெரியவனா", "சூழ்ச்சியும் வீழ்ச்சியும்" போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### தொலைக்காட்சியின் முற்றுகை

தொலைக்காட்சிகளின் முற்றுகையால் அழிந்து வரும் நாடகக் கலைக்கு இவரது பணியும் படைப்புக்களும் காத்திரமான பங்கை வகிக்கும் என்பது காலத்தால் தீர்மானிக்கப்பட்டது. இவரதுநாடகப்படைப்புக்கள்வெறும் பொழுதுபோக்குக்கான ஒன்றாக எவராலும் பார்க்கமுடியாதது. மாறாக அது சமூக மாற்றத்திற்கான படைப்பாகவும் மறுமலர்ச்சிக்கான படைப்புக்களாகவுமே அமைந்திருந்தன. இவரது நாடகங்களில் பழம்பெரும் கலைஞர்களை மட்டுமன்றி, சமகால இளைஞர்களையும் நடிக்கவைத்தமை அவரது கலைப் பயணத்தின் இன்னோர் பரிமாணமாகவே நோக்குதற்குரியது.

1961, 1962 களில் மலைமுரசில் வெளிவந்த "தாயைக் கொன்றவன்", "குருதி கண்ட கற்சிலை", "இடியும் உறவும்" என்ற சிறுகதைகளும், 1989, 1990 களில் சஞ்சீவியில் பிரசுரமான "நன்றி மறந்த சமுதாயமே", "தவறான முடிவுகள்", "புதிய பாதை", "றெஜினாவின் கருணை உள்ளம்", "இலட்சியத்தை நோக்கி" புரட்சி மலர்கள்", "தெய்வம்விடாது" போன்றசிறுகதைகளும், 1991இற்கு பிற்பட்டகாலப்பகுதியில்தினக்குரல், உதயதாரகையில் வெளிவந்த "24ஆம் திகதி நடுச்சாமம் பன்னிரண்டு மணி", "யாழ்நங்கை", "மாற்றம்", "காத்திருந்தாள்சுதேகி" என்றசிறுகதைகளும்மக்கள்மனதில்ஊன்றிநிற்பவை. மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைக் கல்வி, சமத்துவம், இன ஒற்றுமை, வளர்ப்புத்தாயின் கொடுமைகள், காதல் தோல்வியும் கன்னி வாழ்வும், வலிகாமஇடப்பெயர்வு, களவும்தண்டனையும், சீதனக் கொடுமை, நன்றிகெட்டசமூகம், குடியும்வெறியும், பிள்ளைகளின் தவறைதட்டிக்கேட்டல், வன்முறைநிலைக்காது, இல்லாதவர்களுக்குகொடுத்துஉதவுதல்போன்ற பண்பாட்டு கலாசாரம்சார் கருப்பொருள்களே இந்தச் சிறுகதைகளின் உள்ளடக்கங்களாக இருந்தன.

"முகைவெடித்தமொட்டு", "வீசியபுயல்", "இடிந்தமாளிகை" போன்ற நாவல்களும் இவரால் படைக்கப்பட்டவையாகும். இதில் "முகை வெடித்த மொட்டு" பலராலும் பாராட்டப்பட்ட சமூக சிந்தனைகளோடு தத்துவங்களும் நிறைந்தநாவலாகவெளிவந்திருந்தமையால்சாகித்திய மண்டலப்பரிசுகிடைத்தமைகுறிப்பிடத்தக்கது. விவிலியத்தின்150திருப்பாடல்களையும்இலகுதமிழ்நடையில் தரம்குன்றாமல்கருப்பொருள் கலையாமல்கவிதைவடிவில் தந்தருளியிருக்கின்றார். அதில் 27 கவிதைகள் சஞ்சீவியிலும் 22 கவிதைகள் உதயதாரகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதனை "சங்கீதம்" என்ற நூலினூடாக இனிமையான இறைசிந்தையோடு வெளியிட்டுள்ளார். இப்பணி அவர் பின்பற்றிய கிறிஸ்தவப் பணியின் கிரீடம் என்றே கூறலாம். இவரின் கதைவசனம் பாடலோடு "காத்திருப்பேன் உனக்காக" என்ற இலங்கைத் தமிழ்த் திரைப்படம் வெளியிடப்பட்டதுடன் அத்திரைப்படத்தில் ஒரு குணச்சித்திர நடிகராகவும் நடித்திருந்தார். அத்துடன் "பூதத்தம்பி" என்றதமிழ்த் திரைப்படத்திலும் அதன் முக்கிய பாத்திரமான "பூதத்தம்பியாக" தன் நடிப்புத் திறனையும் நிலைநாட்டினார். வானொலி நாடகத்திலும் இவரின் எழுத்துக்களும் இசை யமைப்பும் பெரிதும்செல்வாக்குச்செலுத்தியது என்றால் அது மிகையாகாது.













### கலை இலக்கியப் பணிகள்

இவரது கலை இலக்கியப் பணிக்காக "புதுமை நடிகன்", "சர்வகலாவல்லவன்", "நடிப்பிசைத் திலகம்", "நாடகக்குரிசல்", "தமிழ்நாடகக் கலைத்திலகம்", "கலைஞானச் சுடர்", "கலைமாணிக்கம்", "கலைத் தென்றல்" ஆகியபட்டங்களையும், "சாகித்திய மண்டலப்பரிசு" "கலாபூஷணம்", "முதுகலைஞர்", "கலைப்பேரரசு" ஆகியவிருதுகளையும்தன்வசப்படுத்தியவர். இவரின்கலை இலக்கியச்சேவையைகௌரவிக்கும் வகையில் இவரது பிறந்த ஊரான நவாலியில் "கலாபூஷணம்நவாலியூர்நா. செல்லத்துரைகலைஅரங்கம்" என்ற பெயரில் 2001இல் ஒரு கலைஅரங்கும்திறந்துவைக்கப்பட்டது.

கலை இலக்கியப் பணியில்; ஆழ்ந்த அனுபவத்தோடும், தூர நோக்குடனும், சமூகச் சீர்திருத்தவாதக் கொள்கையுடனும், ஆன்மிகச் சிந்தையுடனும் 60 ஆண்டுகள் ஓயாமல் வீசிய தென்றல் பலர் மனங்களைச் சலவை செய்திருப்பதைகடந்தகாலம்உணர்த்திநிற்கிறது. இவர்சரித்திர எழுத்தாளனாய், கலைஞனாய், கவிஞனாய், நடிகனாய், நற்பணியாளனாய் பலர் மனங்களில் அரங்கமைத்துஆட்சிசெய்வார். எழுத்தாளர்கள்மறைந்தாலும் அவர்களின் எழுத்துக்கள் மறைவதில்லை என்பதை காலம் இவர்மூலம்நிரூபித்து நிற்கும்.





# எமது கல்விச் சுற்றுலா

ரூபராஜன் லக்ஷாஜினி

சுற்றுலா எனும்போது அனைவருக்குமே ஓர் உற்சாகம் எழும். அந்த வகையில் இருபத்து மூன்றாம் திகதி மாசி மாதம் இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு எமது கல்லூரியால் கல்விச் சுற்றுலா ஒன்றுக்குச் சென்றிருந்தோம். இந்தச் சுற்றுலா மாணவர் நாடாளுமன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கல்விச் சுற்றுலாவுக்கு ரி.ஜெகதீஸ்வரன் ஆசிரியரும் அதீசன் ஆசிரியரும் திரவியநாதன் ஆசிரியையும் தயானந்தன் ஆசிரியையும் மற்றும் நகுலேஸ்வரன் ஆசிரியையும் பொறுப்பேற்றிருந்தனர். மேலும் சில உதவிகளைப் புரிய தாய்மார் தரப்பில் தரம் பதினொன்று மாணவி திவ்யாவின் தாயாரும் இதில் பங்கேற்றிருந்தார். அத்துடன் இந்தச் சுற்றுலாவில் தரம் பத்து, தரம் பதினொன்று மற்றும் ஜி.சீ.ஈ உயர் தரத்தைச் சேர்ந்த கலைப்பிரிவு மாணவர்களையும் சேர்த்து ஐம்பது மாணவர்கள் பங்குபற்றியிருந் தோம்.

## ஆசிரியரின் அறிவுறுத்தல்

ஆசிரியர்களின் அறிவுறுத்தலின்படி அன்று காலை ஐந்து மணியளவில் எல்லோரும் பாடசாலையை வந்தடைந்தோம்.

திரவியநாதன் ஆசிரியர், மாணவர்கள் அனைவருமே வருகை தந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். பின் அனைவரும் எமது கல்லூரியின் அருகில் உள்ள கிருபானந்த சிவசுப்பிரமணிய ஆலயத்துக்குச் சென்று தேவாரமும் பெரிய புராணமும் இசைத்து இறைவனை வழிபட்டு விட்டு சுமார் 5.30 மணியளவில் எல்லோரும் பேருந்தில் ஏறினோம். அப்படியே எமது பயணம் தொடர்ந்தது.

முதலில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டோம். இந்தச் சுற்றுலாவின் நினைவாகச் சில ஒளிப்படங்களும் எடுக்கப்பட்டன.

காலை 6.30 மணியளவில் மிருசுவில் பகுதிக்கு வந்தோம். பின் காலை 6.50 க்கு பளைக்கு வந்தோம். பேருந்து சென்று கொண்டிருக்கும் வேளையில் சூரிய உதயம் மிகவும் அழகாக இருந்தது. பொன்னிறமான சூரியனை சில முகில்கள் ஆங்காங்கே மறைத்துக் கொண்டிருந்தது மிகவும் அழகைத் தந்தது. பேருந்தின் உள்ளே பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க ஆசிரியர்களின் வழிகாட்டலின்படி யன்னலின் ஊடாக வெளியே பார்த்துக் கொண்டே வந்தோம். காலை 7 மணியளவில் நாம் ஆனையிறவுப் பகுதிக்கு வந்து கொண்டிருந்தோம். அந்த இடம் ஒரே வெட்டவெளியாகக் காணப்பட்டது. அந்த இடம் உப்பு உற்பத்திக்குப் புகழ் பெற்றது. பின் 7.20க்கு கண்டாவளைப் பகுதிக்கு வந்தோம். இந்தப் பகுதியில் அநேகமாக வெங்காயங்கள் பயிரிடப்பட்டுக் காணப்பட்டன. ஆங்காங்கே கொக்குக் கூட்டங்களையும் காணக்கூடியதாக இருந்தது. கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்து தர்மபுரம் எனும் ஊருக்கு 7.45க்கு வருகை தந்தோம். அப்படியே சென்று கொண்டிருந்தபோது வரிசையாக நடப்பட்ட தேக்கு மரங்கள் காடுகள் போல காட்சியளித்தன. சுமார் 8.10க்கு புதுக்குடியிருப்புப் பகுதியை வந்தடைந்தோம்.

பேருந்தில் இருந்த வண்ணமே எமது காலை உணவை உட்கொண்டோம். இப்படியே செல்லச் செல்ல எமக்கு சுவாரஸ்யம் அதிகரித்தது. சுமார் காலை 8.20 அளவில் நந்திக்கடல் மற்றும் முள்ளிவாய்க்கால் போன்ற இறுதியாகப் போர் நடைபெற்ற பகுதியைத் தாண்டிச் சென்றோம். வட்டுவாகல் பாலம் வழியாகச் சென்று கொண்டிருந்தபோதுதான் நாம் முல்லைத்தீவில் உள்ளோம் என்பதைப் புரிந்து கொண்டோம். தூரத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலின் கோபுரம் தென்பட்டது. 8.45க்கு எமது சுற்றுலாத்திட் டத்தின் முதல் இடமான வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தை அடைந்தோம். நாம் சென்றுகொண்டிருந்தபோதுதான் அந்தக் கோயிலின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தக் கோயிலில் உள்ள ஒரு மரத்தில், கடந்தகால உற்சவத்தின்போது பால் வடிந்ததாக ஒரு செய்தியை அறிந்தோம். பின் காலை 9.10இற்கு மீண்டும் பேருந்தில் ஏறினோம்.

9.35இற்கு கொக்கிளாய்ப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். ஒரு மண்பாதை வழியாகப் பேருந்து ஊர்ந்து கொண்டே சென்றது. மகாவலி கங்கையின் ஒரு கிளையாற்றையும் பார்த்தோம். 11.10க்கு புல்மோட்டை எனும் இடத்தை அடைந்தோம். அங்குதான் கனியவளம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை அமைந்திருந்தது. அந்தத் தொழிற்சாலைக்கு 11.30க்குச் சென்றடைந்தோம்.

(அடுத்த வாரம் தொடரும்)





## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரால் யாழ் மாவட்டத்துக்கு உட்பட்ட வீதி புனரமைப்பு மற்றும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை தெரிவு செய்தல் - 2017 எனும் செயற்பாட்டுக்காக தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

**விலைக் கேள்வி அறிவித்தல் - நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்**

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. பொதுநிதிச் சுற்றறிக்கை 4/2016 இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வடமாகாணத்திற்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 05.04.2017 திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்ய முடியும் என்பதுடன் மேலதிக மாவட்டச் செயலாளர்(காணி), மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 221 2631, 021 222 4029) அவர்களிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
5. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்து 05.04.2017 ஆம் திகதி முதல் 27.04.2017 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.
6. பூர்த்திசெய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் "தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 28.04.2017 ஆம் திகதியன்று பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.
7. காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும், பிரதி தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
8. விலைக்கேள்விகள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 28.04.2017ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நேரடியாக வருகை தரும் கேள்வியாளர்கள் அல்லது கேள்வியாளரால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வி கோரப்பட்ட விடயம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 17.04.2017 அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும், பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கமைவானதாகும்.

| இல | வேலை விபரம் | இடம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தேவையான தரம் (CIDA) | கேள்வி பிணை விபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 1 | பலாலி வடக்கு உள்ளக வீதி | தெல்லிப்பளை | 10.11 | C6 | 506,000.00 | 29.07.2017 | 90 நாள்கள் |
| 2 | காங்கேசன்துறை உள்ளக வீதி | தெல்லிப்பளை | 10.62 | C6 | 532,000.00 | 29.07.2017 | 90 நாள்கள் |
| 3 | தையிட்டி உள்ளக வீதி | தெல்லிப்பளை | 20.78 | C6 | 1,040,000.00 | 29.07.2017 | 90 நாள்கள் |
| 4 | செல்லமுத்து விளையாட்டரங்க வீதி | சண்டிலிப்பாய் | 4.08 | C8 | 203,900.00 | 29.07.2017 | 90 நாள்கள் |
| 5 | நல்லூர் ப.நோ.கூ.சங்க களஞ்சிய கட்டடம் | நல்லூர் | 3.32 | C8 | 167,000.00 | 29.07.2017 | 90 நாள்கள் |

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

க.இரத்தினசபாபதி ஞானசக்தி

# எங்கள் குருநாதர் சிவயோக சுவாமிகள்

## 53ஆவது குருபூசை தினம் நாளை

குரு கருணை வடிவெடுத்தவர். கைம்மாறு கருதாத பேரியல்பாளர். மனிதனைத் தெய்வமாக மாற்றியமைப்பவர். தந்தைதாயாகிஇவ்வுலகிலேஎங்களுக்கு வழிகாட்டியாகி, முடிவில்லாஇன்பமாகிய வீட்டின்பத்தைநல்குபவர். எருவைச்செடியானது தன் மயமாக்குவதைப் போன்று. குரு சீடனைத் தன் மயம் ஆக்குகின்றார். சம்சாரத்தில் உழலும் ஆன்மாக்கள், திருவடியை அடைதலே பேரின்பமாகும். "யான்" "எனது" அற்றஇடமேதிருவடியாம். உயிர்களைப்பற்றியமலங்களைநீக்குவதற்கு ஞானகுரு ஒருவர் இன்றியமையாதவராவர். மலம் பஞ்சு போன்று எரிந்தழியும் தன்மையது. வெகுதூரத்திலேயுள்ள சூரியன்தானே நேராகப் பஞ்சை எரிப்பதில்லை. சூரியகாந்தக் கல்லின் வழியாகவே பஞ்சை எரிக்கின்றது. அதுபோன்று எவராலும் எட்ட முடியாத கடவுளை குரு மூலமாக ஆன்மாக்களுக்கு இறையருளைப் பாலித்து, அவற்றின் மலங்களை அழிப்பர்.

**குருவுருவின் தரிசனம்**

அருகுருவாக குருவுருவைத் தரிசித்து வழிபடும் செல்வத்துட் செல்வம் சாலச்சிறந்தது. குருமூர்த்தியின் திருவார்த்தைகளைக் கேட்டு, சிந்தித்துத், தெளிதல் அதனிலும் விழுமியது. இடையறாது குருநாமம் செபித்தலும், அவர் உருவைச் சிந்தித்தலும் யாவற்றிலும் சிறந்தனவே. ஓர் உயிர் பல பிறவிகளிலும் ஆற்றிய சிவபுண்ணிய மேலிட்டினாலேயே ஏதாவது ஒருமானிடப்பிறவியில்சற்குருஒருவரை வாய்க்கப்பெறுவார். அந்தவழியிலேதிருவருளே எங்களையாள குருவடிவில் தோன்றிய சற்குருவே சிவயோக சுவாமிகள் ஆவர். அவருடைய மகா குருபூசை நாளைய தினமாகும்.

ஈழம் செய்த அருந்தவப் பயனாக அவதரித்தவர் சிவயோக சுவாமிகள். மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் என்னும் அருங்குணப்பெரியாருக்குச்சின்னாச்சியம்மையார் திருவயிற்றில் பிறந்த சிறப்புமிக்க பெரியார் இவர். கற்பன கற்று உத்தியோகம்பெற்றுவாழ்ந்தவர். இவ்வாறுவாழும் காலத்தில்எழில்சேர்நல்லூரில்சீவன்முத்தராய்த் திகழ்ந்த செல்லப்பா சுவாமிகள் என்னும் மாபெரும் சிவஞானியாரே எங்கள் குருநாதர் சிவயோக சுவாமிகளின் ஞான குரு ஆவார். இவருக்கு ஆட்பட்டபின் உத்தியோகத்தைத் துறந்து இனசனப் பற்றுக்களை விடுத்து, செல்லப்பா சுவாமிகளையேதமது தந்தையாகவும், தாயாகவும், சார்கதி ஆவானுமாகக் கொண்டு அவர்களுக்கே தான் மீளா அடிமையானார். நல்லூர்த் தேரடியில் தம் குருவை இனிது கண்டுஆட்கொள்ளப்பட்டார்"..... குன்றுபோல்வந்தானொருவன் வளஞ்சேரும் நல்லூரில் தந்தானருளெனக்குத் தான்" செல்லப்பா சுவாமிகள் நீ ஆரடா? என்று அதட்டி உன்னுள்ளே பாரடா என்றும் உள் மற்றெல்லாம் தீரடா என்றும் பணிக்கப் பெற்றார்.


தேரடியிற்றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென்றறிவாயடா
தேரடியிற்றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடாபற்றென்றான் சிரித்து

நல்லூர் கோயிலினுள் வீற்றிருந்து அருள் பாலிக்கும்ஆறுமுகச்சிவனும், தேரடியில் வீற்றிருக்கும் செல்லப்ப தேசிகரும் ஒருவரே என்னும் தெளிவு பெற்றார். தமது ஞான குரவன் போகுமிடங்கள் தோறும் பின் தொடர்ந்து செல்வார். மழையும் வெயிலும் பசியும் உடற்றினாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கடு நடையாய் நடப்பார். ஏதோ எண்ணங்கொண்டவர் போல் கீரிமலைக்கு நடப்பார் தீர்த்தம் ஆடாமலே ஆடிவிட்டோம் என்று கூறிக் கொண்டு திரும்புவார். குருவின் கடும் வார்த்தைகளை ஆசிமொழிகளாகக் கருதி அவற்றுள் வரும் மகா வாக்கியங்களைப் பொறுக்கினார். இவைகள் மகா மந்திரங்களாகும்.

**சுவாமிகளின்நாலுஅருள்மொழிகள்**

ஒருபொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுதும் உண்மை.

என்னும் நாலு அருள் மொழிகள் தம் வாழ்க்கையை நடத்த உறுதுணையாயின. செல்லப்பா சுவாமிகள் 1915ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் அச்சுவினி நன்னாளில் சமாதியடைந்தார். தவக்குரவன்தமக்குஞானதீட்சையருளியநன்னாளிலேசமாதியடைந்தார். தவச்சந்தனத்தாணியன்ற திருவடிகள் இரண்டையமைத்துத் திருவடிபூசை செய்து வருவாராயிர். எங்கள் குருநாதர் அத்தோடு கொழும்புத்துறை இலுப்பைத் தருவடியிலும். பக்கத்தேயமைந்த சிறுகுடிசையிலும் தங்கி திருவருள்பாலித்துவரும்காலத்துயாழ்ப்பாணத்து வண்ணை மாநகர் வைத்தியநாதன் தண்ணருளாலே தருமநெறியில் சற்றும்பிசகாத"சிவதொண்டன்"என்னும் மாதாந்த மலர் (1935) பல வருடத்து மார்கழித் திங்களன்று, நற்சிந்தனையென்னும்நல்லமுதமும்,பற்பலகட்டுரைகளும் கொண்டு செந்தமிழ், ஆங்கில வெளியீடாய் வெளிவந்து, அடியவர்கள் மனைகளுக்கே உவகையுடன் சென்றடைய ஆவன செய்தார். இன்று எழுபத்தொன்பது ஆண்டுகள் நிறைவெய்தி மிளிர்கின்றான் சிவதொண்டன். குருநாதர்எங்களுக்கருளிய பாடல்கள், உரைநடைகளுக்கு"நற்சிந்தனை"என்னும்திருநாமம் அவர்களே சூட்டியுள்ளார். நற்சிந்தனைப் பாடல்களும், உரைநடைகளும்பெருகிச் சிறந்துவிளங்குவதற்கு"சிவதொண்டன்" மலரே ஏதுவாயிருந்தது. 1954ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி "நற்சிந்தனை" என்னும் நல்லமிர்தத்தை அருந்தி, சிந்தித்துத் தியானத்தில் மூழ்க, "சிவதொண்டன் நிலையம்" உருவாக்கவும் திருவருள் புரிந்தார்.



ஒருபொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுதும் உண்மை,

"சிவதொண்டன் நிலையத்திற்சேரீர்
தியானம்செய்து கடைத் தேறீர்
மௌனமாயம் இருந்திளைப் பாறீர்
மந்திரமீது வெனக் குறியீர்"

என்பது எங்கள் குருநாதரின் அன்புக் கட்டளையாகும் அடியார்கள் நன்னெறியில் செல்லும் வகையாக

"சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம்நன் மோன நிறைவே"என்னும்

இலட்சியத்தைக் கையாளுமாறு வேண்டப்படுகின்றனர். கிழக்கிலங்கையில்சுவாமிகளின் உத்தம சீட மூர்த்தங்களினால் செங்கலடியில் சிவத்தொண்டன் நிலையம் அமைக்கப்பெற்று வட இலங்கை "சிவத்தொண்டன் நிலையம்" போன்று குருநாதன்காட்டியவழியில்மோனஞானபூசைகள்தியானமண்டபங்களில்காலை மாலை திருவடி பூசைகள், மாலையில் புராணமண்டபங்களில் திருமுறை, நற்சிந்தனை, பகவத்கீதை, சுலோகங்களின் விளக்கங்கள், புராணபடனங்கள் நடைபெறம், சுவாமிகள் காட்டிய வழியில் திருவடிபூசை, சிவராத்திரி, சரஸ்வதி பூசை, திருவெம்பாவைபோன்றஆத்மீகஈடேற்ற விழாக்களும்நடைபெறும்

எங்கள் குருநாதர் இறைவனை உளம் உருகும்அன்போடுவழிபட்டால்இறப்புப் பிறப்பில்லாத பேரின்ப வாழ்வை அனுபவிக்கலாமென்று திடமாய்க் கூறி வைக்கிறார். இதனாலேயே "சொன்னேன் அதுவே சுகம்" என ஆணையிட்டுக் கூறுகிறார். மனமாகிய சுடலையில் இச்சைகளை எரித்தால், நாம் யார் என்பதை அறியலாம்என்றுசீரியவழிகாட்டுகிறார். ஒருவன் எல்லோரிடத்தும் சிவனைக் கண்டு நேசிப்பானாயின் அவனுக்கு வேறு தவம் வேண்டியதில்லை என்ற அரிய உண்மையை,

"அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே
ஓதரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே
என்னை யாண்டதும் சிவமே" என்னும்

அரிய நற்சிந்தனைப் பாடல் வாயிலாக எளிய நடையிற் புகட்டினார். சிவயோக சுவாமிகளைப்பலசமயத்தவர்களும், பல ஊரவர்களும் தம்முடைய குருவாகக் கொண்டுஉலகெங்கும்பரந்துவாழ்ந்தார்கள், வாழுகின்றார்கள். அவர் பார்த்த பார்வைகள் எல்லாம் நயன தீட்சை. அவர் பரிசித்தபரிசமெல்லாம்பரிசதீட்சை. அவர் திருவாய் மலர்ந்த பாடல்கள், அருள் மொழிகள், உபதேசங்கள்எல்லாம்வாசக தீட்சை, அவர் தமதுதிரு மனதுக்கு ஏற்றுக்கொண்டுஅடியவர்களின்உள்ளத்தை உருக்கி, அவர்களைத் தமது திருவருள் விசாலத்துள் மனதுள் அமைத்து அவர்களுக்குச்சொல்லிய, செய்தநிகழ்ச்சிகளெல்லாம் மானசதீட்சை. அவர் பற்பல காலங்களில் பக்குவங்களைக் கண்ட மாத்திரத்தே உபதேசித்த சித்தாந்தக் கருத்துக்கள்எல்லாம்சாத்திரதீட்சை. சக்தியுள்ளவர்களை உணர்ந்து அவரவர் சக்திக்கேற்ப இன்ன இன்ன யோகங்களைச் செய்தல் வேண்டுமென்று கற்பித்துக் கொடுத்து அவர்களைத் தாமாக ஆக்கிய சம்பந்த நிலைகள்யாவும்யோகதீட்சை, அவுத்திரி தீட்சைகள்.

**ஒப்பற்ற சிவயோகி**

இவ்வாறு ஒப்பற்ற பரம சிவயோகியாக இருந்து சிவயோகராகத் திகழ்ந்தவர் எங்கள் குருநாதர். கொழும்புத்துறை சிவ ஆச்சிரமத்தில்திருவருள்ஒளிபரப்பிவரும் காலத்து, மகாசமாதியெய்துவதற்குத்தாம் தொடங்கிய திருவடிப் பூசைத் திருநாளை எதிர்நோக்கியிருந்தார். 1964ஆம்ஆண்டு பங்குனித் திங்கள் ஆயிலிய "நன்னாளிலேமகாசமாதியெய்தினார்கள். இன்று அவருடையமகாகுருபூசைத்தினமாகும். "தன்னைத் தான் அறிதல்" தான் குருபூசை. ஏனையவெல்லாம் வெறும் காற்றுப் போன்றவை என்பது எங்கள் குருநாதர் அருள் வாக்கு. அவர் எம்மை விட்டு மறையவில்லை, எம்முடன் சூக்குமமாக விருந்துவழிகாட்டுகின்றார். எங்கெங்கும் யோகர்சுவாமி. அவர் இல்லாத இடமில்லை" ஞாலமுள்ள நாளும் யோகநாதன் சொன்ன சொல்லைக் கொண்டு. காலையிலும் மாலையிலும் கழலடியே போற்றிடுவோம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளியம்மை நவரத்தினம்



சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை நவரத்தினம் நேற்று (04.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதர் குஞ்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் வள்ளி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கன், சின்னப்பிள்ளை மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், லதா, உஷா(யாழ் மாவட்ட சி.க.கூ. சமாச, கோப்பாய் - கரவெட்டி பிராந்திய வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் தாயாரும் மோகன், தங்கேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் கஜித்தா, கனிஸ்ரா, கனுசியா, அனிஸ்ரன், மெகா, ரிசிமேனன், அனுசியன், புருசோத்மன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமை மு.ப 11.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலயம்பலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலை ஒளி வீதி,**
**சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 990 5549**

### கார்த்திகேசு சிவகுருநாதன்

*(ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)*



வன்னியசிங்கம் வீதி, கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவகுருநாதன் நேற்று (04.04.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பூபதிபிள்ளையின் அன்புக் கணவரும் தவயோகநாயகி(கைதடி வடக்கு), வசந்தகுணநாயகி (வவுனியா), சித்திராவதி(வவுனியா), சிவயோகநாதன்(வவுனியா)ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராசா, அன்னமலர், இராசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு, தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**கைதடி வடக்கு, கைதடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 606 5100**

### திருமதி பத்மலீலாவதி தியாகராசா



தாவடி தெற்கை பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி பத்மலீலாவதி தியாகராசா (03.04.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சோமசுந்தரம் - ராசமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும் ஞானலிங்கம், சிறிதரன், பத்மராணி ஆகியோரின் சகோதரியும் பொன்னம்பலம் (நந்தன் - லண்டன்), சிற்றம்பலம் (நகுலன் - இணுவில்), அருளம்பலம் (நவீன் - இணுவில்) ஆகியோரின் பாசமிகு தாயும் யாழினியின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சிவபாதம் மற்றும் தவமணி, இரத்தினேஸ்வரி, யோகேஸ்வரி, தங்கராணி காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்**
**077 2259 798**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.03.2017 திங்கட்கிழமை
இறைபதமடைந்த எமது
குடும்பத் தலைவி
அமரர்
**சந்திரன் சரஸ்வதி**
**(தேவா)**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்,**
**விதானை லேன்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் சுந்தரலிங்கம்
**(வேலணை அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்)**



வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கரம்பனை இடைக்கால வதிவிடமாகவும் திருநெல்வேலியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் சுந்தரலிங்கம் 03.04.2017 திங்கட்கிழமை அகாலமரணம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தனலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்கள்ான தம்பையா முத்தம்மா தம்பதியரின் மருமகனும் சுரேஸ்குமார், தனேஸ்குமார் (தூயவன்), சிவகுமார், ராஜ்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவாஜினி, சத்தியபாமா (மீனா), சத்தியவாணி ஆகியோரின் மாமனாரும் சுவேத்தா, சஞ்சை, தமிழ்மதி, பாவலன், ஆகியோரின் அன்புப் பேரனாரும் சோமலிங்கம், பூலோகசுந்தரம்பிள்ளை, இராசலிங்கம் காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பரதராசா மற்றும் சத்தியமூர்த்தி, யோகலிங்கம், விஜயலட்சுமி காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**(தனேஸ்குமார்)**



### கனகரத்தினம் தனேஸ்வரி

பண்டித்தாழ்வு, வலந்தலையைச் சேர்ந்த கனகரத்தினம் தனேஸ்வரி 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, பாலதேவன் ஆகியோரின் அன்பு மாமியும் சுதாகர், சுரேஸ், சதீஸ்குமார், சுபாசினி, சுகந்தினி, சாளினி, சுதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் -**
**மகன் (நாகராசா)**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### கேப்பாபிலவில்...

எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே .அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

394 ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் என்னால் செய்ய முடிந்த சகலதையும் செய்வேன் என்றார் சுவாமிநாதன். (கு-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்**
**26.01.1964**

**விண்ணில்**
**16.03.2016**

அமரர்
**சுப்பிரமணியம் சண்முகானந்தன்**
(அனந்தன்)

திதி - பங்குனி மாதம் பூர்வபட்ஷ நவமி (05.04.2017)

**ஆண்டு ஒன்று ஆனதுவோ**
**ஆறவில்லை எம் துயரம்**
**உங்கள் ஆத்ம சாந்திக்காக**
**என்றும் இறைவனை வேண்டுகிறோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

எமது குடும்பத்தலைவரின் முதலாவது ஆண்டு நினைவையொட்டி எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

40/17, சீனியர் லேன்,
கலட்டி.

**குடும்பத்தினர்**
**077 511 0749**

## மரண அறிவித்தல்



### முத்தன் இந்திரன் (இந்திரி)

அம்பாள் வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட முத்தன் இந்திரன் கடந்த (01.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்தன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் லலிதாவின் அன்புக்கணவரும் பாப்பி (பிரான்ஸ்), லக்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 1524 679**
**077 2752 534**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் மயில்வாகனம்



அல்வாய் சத்திரம் சீமாவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் மயில்வாகனம் (03.04.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் -இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் கனகரத்தினம் (அல்வாய்) காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் கெங்காதரன் (கரவெட்டி) காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் வசந்தாதேவி, சரோஜினிதேவி (முரசுமோட்டை), மதியழகன் (லண்டன்), நந்தகுமார் (முரசுமோட்டை, வேலன் அரிசி ஆலை), இராஜேஸ்வரி (கொடிகாமம்), மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் தற்காலிக வதிவிடமான கொடிகாமம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டைப்பறிச்சான் சோனவன்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தை வீதி,**
**கொடிகாமம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 968 7584**

## நினைவஞ்சலிகள்

**முதலாம் ஆண்டு**

தோற்றம் 22.04.1935 — மறைவு 17.03.2016



அமரர்
**இராசம்மா கயிலாயபிள்ளை**

**இரண்டாம் ஆண்டு**

தோற்றம் 15.06.1975 — மறைவு 07.07.2015



அமரர்
**கயிலாயபிள்ளை உதயநாதன்**

எங்கள் இனிய தெய்வங்களே நீங்கள்
எம்மைவிட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
ஆனாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில்
என்றும் நிறைந்திருக்கும் உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டச்சு வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 923 5701

## மரண அறிவித்தல்

### ஈஸ்வரன் கோகுலன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்தவருமான ஈஸ்வரன் கோகுலன் நேற்று (04.04.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் சந்திரிக்கா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரவிராஜ், குருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானி-சிவகுமார் (கனடா), இராஜேஸ்வரன்-சாந்தினி (லண்டன்), ஜெயானந்தன்-ஜெயந்தினி (கனடா), ஜெயக்குமார் (தலைவர், யாழ். மாவட்ட பாரவூர்திகள் சங்கம்)-திரிலோஜினி(ஆசிரியர், யா/ யூனியன் கல்லூரி), சசிதரன்-நந்தகுமாரி(சுவிஸ்), மேகவர்ணன்-கிருஷ்ண பவானி(லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் திலகவதி காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் புவனேஸ்வரியின் அன்புப் பேரனும் பாஸ்கரன்-யாழினி(கனடா)யின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகத்திலுள்ள கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் வீதி முன்பாக,**
**K.K.S. வீதி, சுன்னாகம்.**

**தகவல்:**
**சந்திரிக்கா (தாய்) 077 699 4096**
**ஜெயக்குமார் (ஜெயா- தலைவர், பாரவூர்திகள் சங்கம்) 077 666 8741**

## எந்தச்...

சென்று குளத்துக்குள் பாய்ந்து உயிரைவிட்டார்"

இவ்வாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய தடுப்புக் காவல் சித்திரவதைக் குற்றச்சாட்டு வழக்கில் சந்தேகநபர்களான பொலிஸார் நேற்று மன்றில் சாட்சியமளித்தனர்.

2011ஆம் ஆண்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை சித்திரவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டு வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இந்த வழக்கின் எதிரி தரப்புச் சாட்சியப் பதிவுகள் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

முதலாவது எதிரியான அப்போதைய சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார எதிரி கூண்டில் நின்று வாக்கு மூலம் அளிக்கையில்,

"நான் யாழ்ப்பணத்தில் பல பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி உள்ளேன். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த வேளை 2011ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி புன்னாலைக் கட்டுவன் தெற்கில் வசிக்கும் உமாசந்தி என்பவரது வீட்டில் இரவு வேளை உட்புகுந்த கொள்ளையர்கள் 33 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் , அலைபேசி , கமரா , மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்தனர் என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தேன்.

நவம்பர் 25ஆம் திகதி காலை கொள்ளை சம்பவம் தொடர்பில் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் , ராஜபக்ச , வீரசிங்க , ஜெயந்த , கோபி ஆகியோருடன் மொழி பெயர்ப்பு உதவிக்காக மயூரனையும் மற்றும் சாரதி லலித்தையும் அழைத்துக்கொண்டு பொலிஸ் ஜீப் வாகனத்தில் சந்தேகநபரை கைது செய்ய சென்றேன். அங்கு சந்தேகநபர் சுமணனைக் கைது செய்தோம். காலை 10.30 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு சுமணனை கொண்டு வந்தோம்.

அதனை தொடர்ந்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அன்றைய தினம் இரவு மேலும் 4 சந்தேகநபர்களைக் கைது செய்தோம். பின்னர் இரவு 11.35 மணியளவில் சுமணனிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலத்தைப் பெற்றேன். அதற்கு மொழி பெயர்ப்பு உதவியாக மயூரன் என்னுடன் இருந்தார்.

"கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என்னிடம் தான் உண்டு. அவை இருக்கும் இடத்தைக் காட்ட முடியும்" என்று சுமணன் வாக்குமூலம் வழங்கினார். அதன் பின்னர் மறுநாள் 26ஆம் திகதி காலை 6.50 மணியளவில் நகைகள் இருக்கும் இடத்தைக் காட்ட என சந்தேகநபரை நானும் , ராஜபக்ச , ஜெயந்த , மயூரன், வீரசிங்க ஆகியோர் கைவிலங்கு போட்டு சந்தேகநபரின் வழிகாட்டலில் சென்றோம். முதலில் எம்மை புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு அவர் அழைத்துச் சென்றார். பின்னர் அங்கு இல்லை. முகமாலையில்தான் அவை உள்ளன என்று சந்தேகநபர் எம்மை முகமாலைக்கு அழைத்து சென்றார். அங்கேயும் இல்லை என்று தெரிவித்த சந்தேகநபர் எம்மை கிளிநொச்சிக்கு அழைத்து சென்றார். கிளிநொச்சி நகரில் இருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்துக்கு உள்ளே சுமணன் எம்மை அழைத்துச் சென்றார். ஒரு இடத்தில் திடீரென வாகனத்தை நிறுத்துமாறு சந்தேகநபர் கூறினார். நாம் வாகனத்தை நிறுத்தி இறங்க முற்பட்ட போது, ராஜபக்ச என்பவரைத் தள்ளிவிட்டு சந்தேகநபர் எமது பாதுகாப்பில் இருந்து தப்பி அருகில் இருந்த காட்டுக்குள் ஓடினார். அப்போது நண்பகல் 12.10 மணி இருக்கும். நாம் தப்பிச் சென்ற சந்தேகநபரைத் தேடினோம். அந்தக்காலப் பகுதி போர் முடிவடைந்து சில வருடங்களேயான காலம் என்பதனால், அந்தக் காட்டுப் பகுதிக்குள் வெடிபொருள்கள் இருக்கலாம் என்பதனால், மிருகங்கள் சென்ற கால் தடங்களின் ஊடாகவே காட்டுக்குள் சென்று சந்தேகநபரை நாம் தேடினோம். அவ்வேளை அந்தப் பகுதியில் இருந்த குளக்கட்டை அவதானித்து, அதில் ஏறி நடந்து சென்றோம்.

அப்போது திடீரென எமக்கு முன்னே சென்ற மயூரன், அங்கே கள்ளன் குளத்துக்குள் வீழ்ந்து கிடக்கிறான் எனக் கத்தினார். நாமும் அதனை அவதானித்து ஓடிச் சென்று சந்தேகநபரை குளத்தில் இருந்து மீட்டு கரை சேர்த்தோம். அவ்வேளை அவர் பேச்சு இல்லாமல் இருந்ததால், உடனடியாகவே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். கிளிநொச்சி வைத்தியசாலையில் சந்தேகநபரை மாலை 3.30 மணியளவில் சேர்த்தோம். அங்கு மருத்துவர் சந்தேகநபரை பரிசோதித்துவிட்டு அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்தார். அதன் பின்னர் அந்தத் தகவலை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அப்போது கடமையிலிருந்த பதில் பொறுப்பதிகாரியிடம் சுமணன் இறந்த விடயத்தை கூறி, ஏனைய 4சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நான் அறிவித்தேன். பின்னர் இறந்த சுமணனின் உடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பொலனறுவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம்.

சந்தேகநபர் சுமணனை நான் தாக்கவோ காயமேற்படுத்தவோ இல்லை" என்று சாட்சியமளித்தார்.

தொடர்ந்து இரண்டாம் எதிரியான ஞா.மயூரன் எதிரிக் கூண்டில் நின்று வாக்கு மூலம் அளிக்கையில் , "நான் அந்தக்காலப் பகுதியில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தேன். நான் எந்த குற்றமும் செய்யவில்லை. சுமணனுக்கு அடிக்கவோ, அச்சுறுத்தவோ இல்லை" என்று சாட்சியமளித்தார்.

தொடர்ந்து மூன்றாவது எதிரியான தேவதயாளன் எதிரிக் கூண்டில் நின்று வாக்கு மூலம் அளிக்கையில் , "நான் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகிறேன். 2011 நவம்பர் 22ஆம் திகதி நான் விடுமுறை எடுத்து வீட்டுக்குச் சென்று இருந்தேன். மீண்டும் 24ஆம் திகதி மாலை 6.45 மணியளவில் பொலிஸ் நிலையம் வந்தேன். அன்றைய தினமும் எனக்கு விடுமுறை என்பதனால் விடுதியில் தங்கி இருந்தேன். மறுநாள் 25ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றுக்கு சென்று விட்டேன். மாலையே மீண்டும் சுன்னாகம் பொலிஸ் நிலையம் வந்தேன்.

கொள்ளைச்சம்பவம் தொடர்பிலேயோ , அது தொடர்பிலான விசாரணை தொடர்பாகவோ எனக்கு எதுவும் தெரியாது. இந்த இறப்புத் தொடர்பில் என்னிடம் எந்தச் சந்தர்ப்பத்திலும் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. எனக்குச் சுமணன் என்பவரை யாரென்றே தெரியாது. நான் அவரைக் கண்டதே இல்லை . ஆனால் இந்த சித்திரவதை வழக்கில் முதலாவது சாட்சியமாக இருக்கும் சுரேஷ் என்பவரை 2015ஆம் ஆண்டு ஒரு இலட்ச ரூபா பெறுமதியான மடிக்கணினி ஒன்றை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்க முயன்றவேளை சந்தேகத்தில் கைது செய்தேன். அதே போன்று அவருக்கு எதிரான தாபரிப்பு வழக்கில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைய அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி இருந்தேன்.

இந்த நிலையில் 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி அன்று எனது அலைபேசிக்கு அழைத்தவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கதைப்பதாகக் கூறினார். எனக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சித்திரவதை வழக்கு இருக்கு என்று அவர் தெரிவித்தார். என்னை மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் அவரால் கூறப்பட்டது.

அதன் அடிப்படையில்தான் நான் மேல் நீதிமன்றில் முன்னிலையாகினேன். அன்றிலிருந்து இன்றுவரை நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளேன்" என்று சாட்சியமளித்தார்.

4ஆவது எதிரியான சஞ்சீவ ராஜபக்ச , 5ஆம் எதிரியான ஜெயந்த 6ஆம் எதிரியான வீரசிங்க ஆகியோர் எதிரி கூண்டில் நின்று என் மீதான குற்றசாட்டை மறுக்கிறேன் என்று தனித்தனியே சாட்சியம் வழங்கினர். 7ஆம் எதிரியான கோபி மன்றில் முன்னிலையாகவில்லை. அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

அதனை தொடர்ந்து 8ஆவது எதிரியான லலித் எதிரி கூண்டில் நின்று சாட்சியம் அளிக்கையில், "நான் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் வாகனச் சாரதியாகக் கடமையாற்றுகின்றேன். 2011ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் வாகனத்தில் சென்றேன். பலாலி வீதியால் சென்று கொண்டிருந்த போது ஓர் இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு பொறுப்பதிகாரி கூறினார். நான் நிறுத்தினேன். வாகனத்தில் இருந்து அவர்கள் இறங்கிச் சென்றனர். ஒருவரை கைது செய்து கொண்டு வந்து வாகனத்தில் ஏற்றினார்கள். அதன் பின்னர் பொறுப்பதிகாரி வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்குச் செலுத்துமாறு கூறினார். நான் வாகனத்தை செலுத்தினேன். பொலிஸ் நிலையத்தில் கொண்டு வந்து இறக்கி விட்டேன். அது தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது. நான் கிளிநொச்சி செல்லவில்லை" என்று சாட்சியமளித்தார். அதனை தொடர்ந்து எதிரிகளின் சாட்சியப் பதிவுகள் நிறைவடைந்தன.

வழக்குத் தொடுநர் மற்றும் எதிரி தரப்புச் சட்டத்தரணிகளின் தொகுப்புரைக்காக எதிர்வரும் 28ஆம் திகதிக்கு வழக்கை நீதிபதி ஒத்தி வைத்தார்.

இதேவேளை, 3ஆவது சந்தேகநபரான பத்திநாதன் தேவதயாளனை தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று விடுவித்தது.

**பின்னணி**

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா சுமணன், சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைத்துக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டார். எனினும் அவர் இரணைமடுக் குளத்தில் தற்கொலை செய்ததாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டி அவரது கொலையை மூடி மறைத்தனர் என்று அவருடன் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் மல்லாகம் நீதிமன்றில் கடந்த வருடம் தெரிவித்திருந்தனர்.

அதனை அடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 8 பொலிஸார் உத்தியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்களில் 5 பேர் மீது கொலைக் குற்றஞ்சாட்டும் 8 பேர் மீது சித்திரவதைக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது. 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் வெளிநாட்டில் வசிப்பதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. (வ-12-37)

## வடக்கு...

டும். அதற்காக போராடி வரும் மக்களுக்கு அனைத்து இன மக்களும் அணிதிரள வேண்டும்"

இவ்வாறு வலியுறுத்தி இலங்கையில் காணி உரிமையை வென்றெடுப்பதற்கான மக்கள் இயக்கம் நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று மாலை 4 மணிக்கு பிரகடனம் வெளியிட்டது.

இந்தப் பிரகடனத்தை கேப்பாபிலவு, பிலக் குடியிருப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வெற்றி கண்ட ச.கௌசல்யா வெளியிட்டு வைத்தார்.

"பாணமை, இருதெனியா, பிலக்குடியிருப்பு, சம்பூர், பாசிக்குடா, மயிலிட்டி, கற்பிட்டி, கேப்பாப்பிலவு, கொழும்பு துறைமுக நகரம், பள்ளிமுனை, அஸ்ரப் நகர், முள்ளிக்குளம், பெலவத்த ஆகிய பிரதேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 50 பிரதிநிதிகள் கடந்த சில நாள்களாக சுன்னாகத்தில் ஒன்று கூடி காணி உரிமைக்கான போராட்டத்தை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்தோம்.

கடந்த அரச தலைவருக்கான தேர்தலின் போது ஏற்பட்ட மாற்றத்துடன் பல எதிர்பார்ப்புக்களுடன் இருந்த போதிலும், கொழும்பு அரசு காணிகளை விடுவிப்பதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருக்கின்றது. ஆகையால் நாம் இன்று அது தொடர்பாக பிரகடனம் ஒன்றை வெளியிடுகின்றோம்.

எமது பூர்வீகமான காணிகளை மீளவும் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். பாதுகாப்பு படையினர் வசம் உள்ள காணிகள், விவசாய நிலங்கள், துறைமுகப்பகுதிகளை விடுவித்து எமது வாழ்வாதாரத்துக்கு வழிவிட வேண்டும். அத்துடன் நாம் எமது காணிகளை மீட்பதற்காக அறவழியில் முன்னெடுத்து வரும் போராட்டங்களுக்கு இராணுவத்தினரும் புலனாய்வுத் துறையினரும் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை நிறுத்தி நாம் சுதந்திரமாக செயற்பட இடமளிக்க வேண்டும்" என்று அவர்களின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு உலக நாடுகளிடம் அளித்த உறுதிமொழிகளின் படி, அவற்றை விரைந்து செயற்படுத்த வேண்டும். பாதிக்கப்பட மக்களுக்கு நியாயம் கிடைக்க அவர்களின் காணிகளை அரசு விரைந்து விடுவிக்க வேண்டும்" என்று பிரகடன வெளியீட்டில் கலந்துகொண்ட அச்சுறுத்தலுக்குள்ளான பொதுமக்களின் அமையத்தின் சுவிஸ் நாட்டின் பிரதிநிதி நெஸ்பொவி வலியுறுத்தினார். (வ-8)

## விசர்...

தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு குமாரபுரம் முள்ளியவளையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இராமையா சிவசாமி (வயது -58) என்பவரே உயிரிழந்தார்.

"கடந்த டிசெம்பர் மாதம் விவசாயியின் வளர்ப்பு நாய்க்குட்டி அவரைக் கௌவியது. அதனால் நாய்க்குட்டியின் பல் கீறியுள்ளது. அவ்வாறு கீறினாலும் குருதி வரவில்லை. சிறு கீறலே காணப்பட்டதனால் அவர் கவனிக்காது விட்டுவிட்டார்.

சில நாட்களின் பின் குறித்த நாய்க்குட்டி அவரது வீட்டில் உள்ள பூனை உள்ளிட்ட பிராணிகளைத் துரத்திக் கடிக்கத் தொடங்கியது. அதனால் நாய்க்குட்டியைப் பிடித்துக் கட்டியுள்ளனர். 3 நாள்களில் பின் நாய்க்குட்டி இறந்து விட்டது.

சுமார் 4 மாதங்களாகியுள்ள நிலையில் குறித்த விவசாயி தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கண்டதும் அவர் பயத்தை உணர்ந்தார். வீட்டிலும் தண்ணீரைக் கண்டதும் அவர் பயமடைந்தார். வீட்டிலுள்ளவர்கள் அவரின் செயற்பாட்டை அவதானித்தனர். அதனால் அவரை மாஞ்சோலை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றினர். அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் அவர் உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உடற்கூற்றுப்பரிசோதனையின்போது அவருக்கு விலங்கு விசர் நோய்த் தொற்று ஏற்பட்டதனால் இறப்பு நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு உடலத்தை நேற்று உறவினர்களிடம் ஒப்படைத்தார். (வ-4)

## 353 நிரந்தர...

படாமலேயே உள்ளது. இவ்வாறு உயர்கல்வி மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்போது 8 பீடங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 53 திணைக்களங்கள் இயங்கி வருகின்றன. விவசாயத் திணைக்களத்தில் 41 நிரந்தர விரிவுரையாளர்கள் இருக்க வேண்டும். அந்தப் பிரிவில் 16 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கலைப்பிரிவில் 194 நிரந்தர விரிவுரையாளர்கள் இருத்தல் வேண்டும். அங்கு 65 நிரந்தர விரிவுரையாளருக்கு வெற்றிடம் நிலவுகின்றது. பொறியியல் திணைக்களத்தில் 28 வெற்றிடங்கள் நிலவுகின்றன. அந்தப் பிரிவில் மொத்தமாக 50 நிரந்தர விரிவுரை யாளர்கள் பணியாற்றவேண்டும்.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தகப் பிரிவில் 54 நிரந்தர விரிவுரையாளர்கள் பணியாற்றவேண்டும். அந்தப் பிரிவில் 13 வெற்றிடங்கள் நிலவுகின்றன. மருத்துவப் பிரிவில் 87 பேர் இருக்க வேண்டும். அந்தப் பிரிவில் 33 நிரந்தர விரிவுரையாளர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது. விஞ்ஞானப் பிரிவில் 27 வெற்றிடங்களும், தொழில்நுட்ப பிரிவில்18வெற்றிடங்களும்காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் அதிக கட்டணம் செலுத்தியே வாடகைக்கு வீடு வாங்கி மாணவர்கள் தங்கி வருகின்றனர். மாணவர்களின் விடுதிப் பிரச்சினைக்கு அடுத்த ஆண்டுக்குள் தீர்வு காணப்படும் என்றார். (து-5)

## கச்சதீவை...

ஆம் திகதி கச்சதீவு முற்றுகைப் போராட்டத்தை ராமேசுவரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கை கடற்படையினர், தமது மீனவர்கள் மீது பொய் வழக்குப் பதிவு செய்வதாகவும், அதனை எதிர்த்தும் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் இந்திய மீனவர்கள் அறிவித்துள்ளனர். (து-5)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிலும்நிதானத்தைக்கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், சலுகை பெறுவதில் தாமதம் உண்டாகும். பெண்கள், செலவில் சிக்கனமாக இருப்பது நல்லது.

**இடபம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். சிறிய பணிகூட சுமைபோலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், நகை, பணத்தை இரவல் கொடுக்க வேண்டாம்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** நீண்டநாள் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள், விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** சிலர் எதிர்பார்ப்புடன் உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர்.

**துலாம்:** எண்ணம், பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில்லாபம்சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகாண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள், ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**தனுசு:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். அரசு தொடர்பான உதவிபெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வர்.

**மகரம்:** குடும்பத்தினரின் அறிவுரையை ஏற்பது நல்லது. முக்கிய பொறுப்புகளைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். பெண்களுக்கு, வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலைப் பிறரிடம் ஒப்படைக்கவேண்டாம். தொழில், வியாபாரத்தில் குளறுபடி உருவாகி மறையும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**மீனம்:** திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். லாபம் பன்மடங்கு உயரும். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

## 2016..

சைப் பெறுபேறுகள்கடந்தவாரம்வெளியாகியிருந்தன.

வடக்கு மாகாணத்தில் 459 பாடசாலைகளிலிருந்து 18 ஆயிரத்து 188 பேர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 17 ஆயிரத்து 418 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ன256 பேர், 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியைப் பெற்றுள்ளனர். 10 ஆயிரத்து 562 பேர் உயர் தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 775 மாணவர்கள் எந்தப் பாடத்திலும் சித்தியடைய வில்லை. அத்துடன் 6 ஆயிரத்து 851 மாணவர்கள் உயர் தரம் கற்கக் கூடிய பெறுபேறுகளைப் பெறவில்லை.

வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில், கிழக்கு மாகாணம் 8ஆம் இடதிலும், வடக்கு மாகாணம் 9 ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

(த-5-101)

## மதவாச்சி...

டைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

மதவாச்சியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் விபத்து இடம் பெற்றது.

வேலணையைச் சேர்ந்த குடும்பத்தினர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி காரில் பயணித்தனர். கார் திடீரெனச் சாலையோரம் நின்றிருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் வேலணை வடக்கைச் சேர்ந்த ஓய்வுநிலை அஞ்சல் உத்தியோகத்தரான சுந்தரலிங்கம் (வயது - 85) என்பவர் உயிரிழந்தார். அவரது மருமகன் மற்றும் சாரதி படுகாயமடைந்தனர்.

"கார்ச் சாரதி நித்திரை தூங்கியதால் விபத்து இடம்பெற்றது" என்று உயிரிழுந்தவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

சாரதி அநுராதபுரம் வைத்தியசாலையிலும் உயிரிழந்தவரின் மருமகன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(வ-4- ரி1)

## இரணைமடு...

நிலப்பரப்புடன் கூடிய தனியார் விடுதி மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. உரிமையாளரிடம் அதனைக் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள தனியார் விடுதியை, பாதுகாப்புத் தரப்பினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். போர் முடிவுக்கு வந்ததிலிருந்து பாதுகாப்புத் தரப்பினர் அதனைக் கைப்பற்றி வைத்திருந்தனர். இதனை மீட்டுத் தருமாறு உரிமையாளர் மாவட்டச் செயலகத்திடம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்தார். இதற்கு அமைவாக பாதுகாப்புத் தரப்பினர் அந்தக் காணியை மீள ஒப்படைத்துள்ளனர். (த-5,101)

## ஒற்றையாட்சியின்...

பாட்டையும் தெற்கு வேறொரு நிலைப்பாட்டையும் தெரிவித்தால் அது நாட்டை இரண்டாகப் பிரித்துவிடும். வடக்கும் தெற்கும் ஒரே நிலைப்பாட்டை தெரிவிக்கக் கூடிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்" என்று அந்தக் கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடரில் அவர் மேலும் தெரிவித்ததாவது: புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடம் ஆணையைக் கேட்டன. தேர்தல் முடிவடைந்து 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து புதிய அரசமைப்பை உருவாக்குவது என்று தீர்மானமெடுத்தனர். அதை இப்போது சிலர் மறுக்கின்றனர்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியானது பன்னாட்டுச் சதி என்றும் நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் முயற்சி என்றும் கூறி மக்களிடையே வீண் புரளியைக் கிளப்பி விடுகின்றனர். இது நாட்டைப் பிரிக்கும் ஏற்பாடு அல்ல. ஒற்றையாட்சியின் கீழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வைக் காணும் ஒரு முயற்சியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் நாம் ஒற்றை ஆட்சி என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளோம். ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள சிலர் கூட்டு அரசு என்ற நிலைப்பாட்டில் இருந்தாலும்கூட, அதிகமானவர்கள் ஒற்றை ஆட்சிக்கே ஆதரவு தெரிவிக்கின்றனர். கட்சியின் நிலைப்பாடும் அதுதான். உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு பொது வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அது தெற்கினதும் வடக்கினதும் ஒரே நிலைப்பாட்டைப் பெறக்கூடியதாக அமைய வேண்டும். தெற்கின் நிலைப்பாடு வேறாகவும் வடக்கின் நிலைப்பாடு வேறாகவும் இருந்தால் அது நாட்டைப் பிளவுபடுத்தும் அபாயத்தை ஏற்படுத்திவிடும் என்றார்.

(உ-5-3)

## இன்று முதல்...

காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தது.

"இன்றுமுதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை இலங்கைக்கு மேலாக சூரியன் நேர் உச்சம் கொடுக்கவுள்ளது. அந்த நாட்களில் வழமைக்கு மாறாக வெப்பநிலை அதிகமாக இருக்கும். நேர் உச்சத்தின் ஆரம்பமான இன்றையதினம் தென்னிலங்கையில் மிக அதிகளவான வெப்பம் காணப்படுவதுடன் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு பிரதேசங்களுக்கு எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் வெப்பத்தின் தாக்கம் சடுதியாக அதிகரித்துக் காணப்படும். கடந்த சில தினங்களின் வெப்பநிலை 34.9 பாகை செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது. எனினும் இந்த நிலைமை இன்று மாறுபட்டு இதனை விட அதிகளவான வெப்பநிலை பதிவாகலாம். மேலும் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் முதி வர்கள் என அனைவரும் பாதுகாப்பான முறையில் இருக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்" என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. (வ-

## பேஸ்புக்...

கலைக்கழகத்தின் பேராசிரியர் அனில் பெர்னான்டோ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முகப் புத்தகம் மட்டுமே சமூக ஊடகமாகும் எனத் தவறாகப் புரிந்து கொண்டமையால், தங்களுடைய பெறுமதியான இளமைக்காலத்தை, இலங்கை இளைஞர்கள் இழந்து விடுகின்றனர்.

புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய அலைபேசிகளை, சரியான முறையில் பயன்படுத்தினால், இலங்கை இளைஞர்களிடம் உலகத்தையே வெற்றி கொள்ளும் திறமை இருக்கின்றது. அதிநவீன தொழில்நுட்பமான 'சபி' தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் இலங்கைக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். அதனூடாக இலங்கை இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இந்தப் புதிய தொழில்நுட்பத்தினால், இந்த நாட்டில் உள்ள வீட்டின் கதவை வெளிநாடுகளிலிருந்து கொண்டே திறக்க முடியும். எரிவாயு மற்றும் தண்ணீர் ஆகியன வீணாகாத வகையில் நிர்வகித்து க்கொள்ளக்கூடிய திறன் இதில் உள்ளது என்றார்.

(த-10)



AnGEE

**சுமைகள் இல்லாத வாழ்க்கை சுகங்களைத் தருவதில்லை**
**எந்த நேரமும் உதடுகளில் ஒரு புன்னகை வைத்திருங்கள்**
**அது தருகின்ற தன்னம்பிக்கை வேறு எங்கேயும் கிடையாது**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 2 | 4 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 8 | 9 | 6 | 1 | 7 | 2 | 4 |
| 4 | 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 8 | 3 |
| 2 | 4 | 7 | 8 | 1 | 9 | 5 | 3 | 6 |
| 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 8 |
| 8 | 6 | 1 | 5 | 3 | 2 | 9 | 4 | 7 |
| 7 | 2 | 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 1 |
| 6 | 1 | 9 | 2 | 4 | 8 | 3 | 7 | 5 |
| 5 | 8 | 3 | 1 | 9 | 7 | 4 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும்1-9வரையானஎண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள்பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | | | 1 | 3 |
| 5 | | | 3 | | | | 7 | 2 |
| 3 | | | | 1 | | | | |
| | | | 9 | | | | | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | | | | | 6 | | | 7 |
| | | | | 8 | | | | |
| 6 | 3 | | | | 9 | | | 5 |
| 9 | 5 | | | | | 7 | | |

# அடையாள அட்டை இல்லாதமையால் வலிகாமம் மாணவர்களின் வாய்ப்பு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 12 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் ஏராளமானவர்கள் அஞ்சல் அடையாள அட்டை இல்லாதமையால் தமது வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.
பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளின் வயதெல்லையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி நடப்பு வருடத்தில் இருந்து 12 வயதுப் பிரிவினர் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.
வலிகாமம் வலய தடகளத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. 12 வயதுப்பிரிவில் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகளில் பலருக்கு அஞ்சல் அடையாள அட்டை இல்லாததை அடுத்து அவர்கள் நடுவர்களால் போட்டிகளில் பங்குபற்ற விடாமல் திருப்பி அனுப்பப்பட்டனர்.
இதனால் 12 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டத்தில் வெறும் நால்வர் மட்டுமே கலந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது ஏனைய விளையாட்டுக் களிலும் பங்குபற்றல் முழுமையாக அமையவில்லை.
இது தொடர்பாக வலிகாம கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "அஞ்சல் அடையாள அட்டை தொடர்பாக சில கூட்டங்களில் கலந்துரையாடிய போது அனைத்து பொறுப்பாசிரியர்களும் அஞ்சல் அடையாள அட்டையுடன் போட்டியில் பங்கு பற்றுவதற்கு சம்மதம் தெரிவித்தனர். அதற்கேற்பவே நாம் இதனை நடைமுறைப்படுத்தினோம்" என்று தெரிவித்தார்.
இது தொடர்பாக உடற்கல்வி ஆசிரியர்கள் சிலர் கருத்து தெரிவிக்கையில், "காலநிலை மாற்றத்தால் பல பாடசாலைகள், பாடசாலை மட்டப் போட்டிகளை தாமதமாகவே நடத்தி முடித்தன. பாடசாலை மட்ட இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நிறைவடைந்து சில நாட்களிலேயே வலய மட்ட பெரு விளையாட்டுகள் ஆரம்பமாகின. அத்தோடு முதலாம் தவணைக்குரிய பாடங்களையும் முடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மாகாணத் திணைக்களத்தின் பரீட்சை நேர அட்டவணையால் வினாத்தாள் திருத்தும் பணியும் நெருக்கமானது. இதனாலேயே தம்மால் மாணவர்களுக்கான அஞ்சல் அடையாள அட்டையைப் பெறமுடியவில்லை" என்று தெரிவித்தனர்.
அஞ்சல் அடையாள அட்டை எடுப்பதற்கு சரியான முறையில் திட்டமிட்டு செயற்பட்டால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.
(ம-422)

# ஆவரங்கால் மத்தி., இந்து அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 5
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.
அரியாலை திருமகள் சன சமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 3 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 25:19, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.
அரையிறுதிக்கான வாய்ப்பைப் பெறுவதற்கான முக்கிய ஆட்டமாக இருந்தபோதும் கடும்எதிர்ப்பின்றி 25:20, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-422-23-108)



# கோப்பாய் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கோப்பாய் பிரதேச செயலக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஏப். 5
அரியாலையின் 98ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளன.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டமொன்றில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் "ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டமொன்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)

# நல்லூர் பி.செயலகம் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனானது.
அராலி சரஸ்வதி மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-422-108)



# வென்றது யாழ்.

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ். பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது. இதில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி 77:58 என்ற புள்ளி களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# உடுவில் பிரதேச செயலகம் பூப்பந்தில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலகம் கிண்ணம் வென்றது.
அராலி சரஸ்வதி மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது.
இதில் உடுவில் பிரதேச செயலக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## வில்லியர்ஸ் விளையாடுவது உறுதியானது

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான வில்லியர்ஸ் விளையாடுவது உறுதிப் படுத்தப்பட்டது.

இந்தத் தொடருக்கான வெளிநாட்டு வீரர்கள் அந்ததந்த அணியில் வந்து இணைந்துவிட்டார்கள். பெங்களூர் அணியில் முன்னணி வீரரான லோகேஷ் ராகுல் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகினார். விராட் கோக்லி ஓரிரு ஆட்டங்களில் விளையாடமாட்டார் என்று தெரிகிறது. முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக வில்லியர்ஸும் விலகுவார் என்று எதிர்பார்க்கப் பட்ட நிலையில், அவர் நேற்றுமுன் தினம் பெங்களூர் வந்தடைந்தார். தனது பங்குபற்றலையும் வில்லியர்ஸ் தனது ருவிற்றர் பக்கத்தில் உறுதிப்படுத்தினார். (ம)







## வில்லியர்ஸை வீழ்த்துவேன்

*ரசிட் சபதம்*

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெறும் பெங்களூர்-ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பெங்களூர் அணியின் அதிரடி வீரர் வில்லியர்ஸை வீழ்த்துவேன் என்று ஹைதராபாத் அணியில் இடம் பிடித்துள்ள் ஆப்கானிஸ்தான் வீரர் ரசிட்கான் தெரிவித்தார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்கெதிராக முதல் ஆட்டத்தில் விளையாடுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்போது அதிரடி வீரரான வில்லியர்ஸை வீழ்த்த விரும்புகிறேன். உலகின் தலைசிறந்த வீரர்களில் வில்லியர்ஸும் ஒருவர். அவருக்கு பந்து வீசுவது மிகவும் சவாலானதாக இருக்கும்.

ஹைதராபாத் அணியில் ரொம்மூடி, வி.வி.எஸ். லக்ஸ்மன் மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோரை சந்திப்பது மிகப்பெரிய வாய்ப்பாகும். முரளிதரனிடம் இருந்து சில ஆலோசனைகளை பெற்று என்னுடைய பந்து வீச்சுத் திறனை மேம் படுத்திக் கொள்ள முடியும் என ரசிட்கான் மேலும் தெரிவித்தார். (ம)





# குசல் பெரேரா அசத்தலாட்டம்

### *6 இலக்குகளால் இலங்கை வெற்றி*

பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வீழ்ந்தார் தமீம் இக்பால். சர்க்கர் வழக்கம்போல் அடித்தாடினார். அவர் 29 ஓட்டங்களுடன் சஞ்சயவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சபீர் ரகுமான், ரகிம், சகிப் அல் ஹசன் ஆகியோர் மத்திய வரிசையில் சிறப்பாகச் செயற்படவில்லை. மொஸ்டக் கொசைன், மொகமதுல்லா முறையே 34, 31 ஓட்டங்களைச் சேர்க்க , முடிவில் 5 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைக் குவித்தது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் மலிங்க 2 இலக்குகளையும், சஞ்சய, குணரத்ன, பிரசன்னா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்ப இணையே வெற்றிக்கான அடித்தளத்தைப் பலமாக அமைத்தது. இணைப்பாட்டமாக 65 ஓட்டங்கள் பகிரப்பட்ட பிற்பாடு 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தரங்க. மறுமுனையில் நிலைத்துநின்று அரைச்சதம் கடந்தார் குசல் பெரேரா. 77 ஓட்டங்களுடன் குசலை வீழ்த்தினார் தஸ்கின். அடுத்த சில இலக்குகள் சரிந்தாலும், அடுத்தடுத்து சிக்சர்களை விளாசி 7 பந்துகள் மீதமிருக்க, ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் பிரசன்னா. (ம)

## கில்லறி மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 5

மன்னார் சின்னக்கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் கில்லறி அணி கிண்ணம் வென்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் கில்லறி விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மகுடம் சூடியது.

சிறந்த வீரனாக கில்லறி அணியின் அன்ரூ டிலக்சன் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கரன் தெரிவானார். (ம-23)

## தென்மராட்சி கல்விவலய தடகளத் தொடர் நாளை

தென்மராட்சி, ஏப். 5

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட தடகளத் தொடர் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை 6ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனும், மதிப்புறு விருந்தினராக வேள்ட்விசன் லங்கா சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் அ.சி.றொசைரோவும் கலந்துகொள்வர். (ம-9)



## நெய்மர் 100 கோல்கள்; மெஸ்ஸியை வென்றார்

பார்சிலோனா அணிக்காக 100 கோல்களைப் பதிவு செய்தவர்களின் பட்டியலில் லயனல் மெஸ்ஸி, லூயிஸ் சுவாரஸ் ஆகியோருடன் இணைந்தார் நெய்மர்.

லா லிகா கால்பந்து தொடரில் நேற்றுமுன்தினம் பார்சிலோனா அணி, கிரனடா அணியை எதிர்த்து விளையாடியது. இதில் பார்சிலோனா 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 90ஆவது நிமிடத்தில் நெய்மர் கோலொன்றைப் பதிவுசெய்தார். இந்த ஆட்டத்தில் கோல் அடித்ததன் மூலம் பார்சிலோனா அணிக்காக 100 கோல்கள் அடித்தவர்களின் பட்டியலில் நெய்மரும் இணைந்தார். 177ஆவது ஆட்டத்தில் அவர் தனது 100ஆவது கோலை அடித்துள்ளார். மெஸ்ஸி இந்த அடைவை 188ஆவது ஆட்டத்திலேயே எட்டியிருந்தார்.

பார்சிலோனா அணிக்காக 100 கோல்களை அடிக்கும் 3ஆவது பிரேசில் வீரர் என்ற சிறப்பையும் நெய்மர் பெற்றார். இதற்கு முன்னர் ரிவால்டோ, எவாரிஸ்டோ ஆகியோரும் இந்த அடைவை எட்டியுள்ளனர்.

நெய்மர் அடித்துள்ள 100 கோல்களில் 64 கோல்கள் லா லிகா தொடரில் அடிக்கப்பட்டதாகும். 21 கோல்கள் சம்பியன்ஸ் லீக் தொடரிலும், 14 கோல்கள் கோபா டெல் ரே தொடரிலும், ஒரு கோல் ஸ்பானிஸ் சூப்பர் கோபா தொடரிலும் அடிக்கப்பட்டது. (ம)



## சக அணியைத் தோற்கடித்து நவஜீவன்ஸ் ‘பி’ சம்பியன்

கரணவாய், ஏப். 5

பருத்தித்துறை - தம்புறுவளை விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் சக அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக ‘பி’ அணி.

பருத்தித்துறை - தம்புறுவளை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக ‘ஏ’, ‘பி’ அணிகள் மோதின. 3 செற்களைக்கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது நவஜீவன்ஸ் ‘பி’ அணி. இரண்டாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது நவஜீவன்ஸ் ஏ அணி.

இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான மூன்றாவது செற்றில் அபாரமாக விளையாடிய ‘பி’ அணி 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றி 2:1 செற்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. (ம-108)

## வேலை வாய்ப்பு

யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பிரதேசங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

1.வெளிக்கள உத்தியோகத்தர் 2.மேற்பார்வையாளர்
3.அலுவலகப் பெண்

தகைமை.G.C.E O/L இற்கு குறைவானவர்களும்.
வயதெல்லை 18-38
அடிப்படைச்சம்பளம் 18500 + உணவுப்படி வழங்கப்படும்
பயிற்சியளித்து உள்வாங்கப்படுவீர்கள். முன்பதிவு செய்யும் 20 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு. 077 998 7699, 077 884 8188**
**இல. 129, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

## உங்கள் கல்வித்தகைமைக்கேற்ற வேலை கிடைக்கவில்லையா?

O/L, A/L படித்து விட்டு இன்னும் வேலை கிடைக்கவில்லையா?
எமது நிறுவனமாகிய Everest lanka (Pvt) ltd இற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

- SUPERVISORS
- ASSISTANT MANAGERS
- ADMINISTRATIVE WORKERS
- STOCK KEEPER

NO.179, Hospital Road, Jaffna இல் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு 05, 06, 07 ஆம் திகதி 9 am - 1 pm மணி வரை நடைபெறவிருக்கும் நேர்முகத்தேர்விற்கு வருகை தந்து உங்கள் கல்வித்தகைமைக்கு ஏற்ப வேலையை பெற்றுக்கொண்டு பயனைப் பெறவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 076 864 3505, 077 6953 242

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துந்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 08.04.2017

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

திங்கள், புதன் பிரிவுகள் - 1. காலை 08-10 2. காலை 10-12 3. மாலை 3-4.30
செவ்வாய், வியாழன் பிரிவுகள் - 1. காலை 08-10 2. காலை 10-12 3. மாலை 3-4.30

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை அவர்களின் 110 ஆவது ஆண்டு நினைவுப்பெருவிழா 30.04.2017

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேலு பிள்ளை அவர்களின் நினைவு விழா 22.04.2017 சனிக்கிழமை நடைபெறும் என உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருந்தோம். தவிர்க்கமுடியாத காரணங்களால் 22.04.2017 சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படிவிழா 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை சதாவதானி சனசமூக நிலை முன்றலில் வெகுவிமரிசையாக நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

பி.பிரியந்
செயலாளர்
மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூகநிலையம், தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

## சிறுநீரகம் தேவை

36 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு A+ வகையுடைய சிறுநீரகம் தேவை.
**தொடர்புகளுக்கு.**
077 768 7498, 077 436 9589

## ST.ANTONY'S

சிறப்பு விலையில்
Hp DUAL- CORE PC
29 750/=
ஒரு வருட உத்தரவாதம்
FREE - 8GB PEN/ H.PHONE/W.CAM
* யாழ்ப்பாணத்தில்
பாடசாலைகளுக்கு
Finger Print Machine
இணைப்பு இலவசம்
187, K.K.S. ROAD, JAFFNA TOWN.
021 222 4865

## மரண அறிவித்தல்



### செந்தமிழ்ச்செல்வி குமாரவேலு

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தமிழ்ச்செல்வி குமாரவேலு நேற்று (04.04.2017) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வியும் சுரேனுகா, ஸ்ரீநிகேதன், லவன் ஆகியோரின் அன்புத்தாயும் சுவர்ணலிங்கம் (ரங்கன் - கனடா), பரமலிங்கம் (கண்ணன் - கனடா), பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ்.சென்மேரிஸ் வித்தியாலயம்), ஸ்ரீரங்கநாயகி, திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), நிர்மலா (ஆசிரியை மதியொளி முன்பள்ளி, மண்டைதீவு) காலஞ்சென்ற வைகுந்தவாசன் ஆகியோரின் சகோதரியும் பிரசாந்தன், ஆரணி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2017) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

85/2. செட்டித்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெகதீஸ்வரி நகுலேஸ்வரன்
(நம்மணி)

மகாதனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி நகுலேஸ்வரன் நேற்று (04.04.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் கந்தையாஅன்னம்தம்பதியரின்அன்புமகளும்வேலாயுதம்சுந்தரம்பிள்ளைதம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயசுதன்(லண்டன்), தர்ஷினி(லண்டன்), கஜாந்தி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் தாட்ஷாயனி(லண்டன்), பரன்(லண்டன்), ராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் மீனாட்சி, விஸ்ணு(லண்டன்), ஆஷிகா, அட்சரன்(லண்டன்), கருணியா, ரோணக்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு நாவுக்கரசு ஜெயலக்ஷ்மி, ஜென்ரிமலர், திருக்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காமாட்சிப்பிள்ளை சரஸ்வதி, சுப்பிரமணியம்(ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தமூர்த்தி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் - கிரிஷாந்தன் (பெறாமகன்): 077 679 0603**
**தர்ஷினி (மகள்): 077 898 3788**
**கஜாந்தி (மகள்): 075 265 4175**
**சுதன் (மகன்): 077 590 0483**

## இடம் வாடகைக்கு

யாழ் கச்சேரிக்கு அருகில் A9 றோட்டில் park முன்பாக விசாலமான இடம் வாடகைக்குண்டு.
தொடர்பு. 0777271645

## Chemistry Personal Classes (Tamil/English)

Basic, inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.
075 046 0555

## வகுப்புக்கள்

தரம், 3, 4, 5 மாணவர்களுக்கு பட்டதாரி ஆசிரியரால் வீட்டில் வந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறக்கூடிய வகையில் கற்பிக்கப்படும்.
**தொடர்புகளுக்கு.**
077 711 2406, 077 465 2832

## Personal Class

அனுபவம் ஆற்றல் மிக்க ஆசிரியரால் A பெறுபேற்றிக்கான வழிகாட்டல்.
Science தரம் 6-11 வரை (தமிழ் மூலம்)
கணிதம் Gr 6-9 (T)
**தொடர்புகளுக்கு 077 667 9544**

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. (யாழ். நகரத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) மேலும் சிட்டை எழுதுனர்.
ஆண் 40-55, பெண் 20-30
**தொடர்புகளுக்கு.**
**077 5269 182, 021 2225 464**

## வேலைவாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு (கொக்குவில்) கணக்கு உதவியாளர் (ஆண்/பெண்) தேவை. கல்வித்தகைமை க.பொ.த உயர்தரம் சித்தி, கணினி அறிவு (MS Office) தகைமையுடையவர்கள் நேர்முகத்தேர்விற்கு இருபாலைஎரிபொருள்நிரப்புநிலையம் A.M தனநாயகம்எரிபொருள்நிரப்புநிலையத்திற்கு (06.04.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணி தொடக்கம் 04.00 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும். **0212230397**

## வாழ்த்துகின்றோம் இன்னும் வளர்வதற்காய்...!

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி
மெய்வருந்தக் கூலி தரும்" (வள்ளுவர்)




வேம்படி மகளிர் கல்லூரி மாணவி
திரு. திருமதி இரவீந்திரன் விமலா
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி

### செல்வி இரவீந்திரன் மாதங்கி

நெறிப்படுத்தல் அதிபருடையது
வழிகாட்டல் ஆசிரியருடையது
தியாகம் பெற்றோருடையது
முயற்சி உன்னுடையது
சாதனைகள் உனக்கு தொடர் சாத்தியமாகும்
அன்பு மருமகளே நீ
தொடரவேண்டிய தூரம் இருக்கிறது
நேரத்தை மனதில் வைத்து தூரத்தை கடந்துவிடு...

வாழ்த்துவோர் (மாமன்மார்)
T.தயாபரன் (ஆசிரியர்-மண்டைதீவு மகா வித்தியாலயம்)
S.கம்சன் (ஆசிரியர்-சென் ஜோன்ஸ் கல்லூரி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.